ஸ்ரீ ரஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:   ஸ்ரீமதே பாலதந்வி மஹாகுரவே நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம:   ஸ்ரீமதே வாநாசல மஹாமுநயே நம:

ஸ்ரீஸூக்திரத்நாகரம், திருப்பாவைக் கடல்மணி

# ஸ்ரீமதுபயவே. ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஶடகோபாசார்ய ஸ்வாமி ஶதமாநோத்ஸவ வைபவ மலர்

“ஸம்ப்ரதாய ஸுதாநிதி”

**ஸ்ரீமதுபயவே. இளையவில்லி ஸ்ரீநிவாஸபூவராஹாசார்ய ஸ்வாமியின்**

நியமனமடியாக

**திருவல்லிக்கேணி பலாப்பூர் பத்தங்கி வீரராகவாசார்யரால்**

பதிப்பிக்கப்பட்டது.

*வெளியிடுவோர் :*

**ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி ஶதமாநோத்ஸவ ஸமிதி**

*இளையவில்லி (கற்குளம்) ஸ்வாமி திருமாளிகை,*
*104, வடக்கு ரதவீதி, ஆழ்வார் திருநகரி,*
*தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு.*
*தொலைபேசி : 04639-273899*

பதிப்பில் உதவி:

*ஸ்ரீமதுபயவே. ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஶடகோப. கண்ணமாசார்யர் ஸ்வாமி*
*ஸ்ரீமதுபயவே. ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஸ்ரீராம் ஸ்வாமி*
*ஸ்ரீமதுபயவே. ஆழ்வார் திருநகரி இளையவில்லி கண்ணன் ஸ்ரீவத்ஸன் ஸ்வாமி*

திருநாராயணபுரத்தில் (மேலக்கோட்டையில்) விரோதி வருஷம் ஆனி மாஸம் அவிட்ட நக்ஷத்ரம் கூடிய *ஶு*பதினத்தன்று (11.07.2009) விமரிசையாகத் தொடங்கப்பட்டு, விக்ருதி வருஷம் ஆனி மாஸம் 16ம் தேதி (30.06.2010) புதன்கிழமை அவிட்ட நக்ஷத்ரம் கூடிய *ஶு*பதினத்தன்று சாற்றுமறையாக ஐந்து தினங்கள் ஆழ்வார் திருநகரியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்ட **கீர்த்திமூர்த்தி ஸ்ரீஸூக்திரத்நாகரம் இளையவில்லி *ஶ*டகோபாசார்யர் ஸ்வாமியின் *ஶ*தமான மஹோத்ஸவத்தை**யொட்டி இந்த வைபவ மலர் வெளியிடப்பட்டது.

அச்சிட்டோர்:
RNR Printers & Publishers,
19, தாண்டவராயன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5.
போன் : 044-28447071 / 28441856



Sri:
Srimathe Ramanujaya Nama:

# SRI VANAMAMALAI MUTT

## NANGUNERI - 627 108.

*Srimad Paramahamsa Jagadguru*
*Sri Kaliyan Vanamamalai Ramanuja Jeeyar Swami*

E.mail : varamangai2001@yahoo.com
Fax : 04635 - 250636
Ph : 04635 - 250159 (Personal)
: 04635 - 250119 (Office)

Place : NANGUNERI
Date : 10.6.10

ஸ்ரீ:

## மங்களாசாஸனம்

பேரன்புமிக்க ஸ்ரீவைஷ்ணவச் சான்றோர்களே! ஆன்மிக நண்பர்களே! திருக்குருகாபுரியெனும் ஆழ்வார் திருநகரி திவ்ய தேசத்தில், வரும் ஆனித்திங்கள் **16** ஆம் நன்னாள் புதன்கிழமை அவிட்ட நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தன்று, ஸ்ரீ உ.வே. கீர்த்திமூர்த்தி ஸ்ரீஸூக்தி ரத்னாகரம், திருப்பாவை கடல்மணி "இளையவல்லி சடகோபாசாரிய ஸ்வாமி"யின் நூற்றாண்டு நிறைவு விழா மிக்க கோலாஹலத்துடன் கொண்டாடப்படப்போகின்றமை அறிந்து இவ்வடியவனது மனம் பேரானந்தம் கொள்கின்றது.

மலரும் நினைவுகளின் அடிப்படையில் சிலவார்த்தைகள் விண்ணப்பிக்கின்றான் இவ்விராமாநுசதாசன். **1952** (கி.பி.) என்றே நினைவு. இந்த ஸ்ரீ உ.வே. சடகோபாசார்ய ஸ்வாமி, நம் திவ்ய தேசத்துக்கு அருகிலுள்ள "திருமலாபுரம்" எனும் ஸ்தலத்திற்கு எழுந்தருளியிருந்தார். இவ்வடியவனும் தனது திருத்தகப்பனாருடனும், ஸ்ரீ உ.வே. பெரியவகத்து ஸ்ரீ சடகோபாசார்ய ஸ்வாமி முதலிய வித்வத்வரேண்யர்களுடனும் அங்கு சென்றிருந்தான். அப்போது, நம் ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்வாமி பரமகம்பீராக்ருதியில் - இவரொரு நித்யஸூரிவர் யரோ-அல்லது- ச்வேதத்வீபவாசியான மஹாபுருஷரோ-என்று எண்ணும் வகையில் ஸேவை ஸாதித்தமை இன்றும் நம்மனக்கண்ணில் பசுமையாக நிழலாடுகின்றது. அப்போது அண்மையில் தான் இவ்வடியவன் மஹாவித்வான் ஸ்ரீமதுபயவே. ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யஸ்வாமியின், வெகு விமரிசையாக பெருமாள்கோவிலில் (காஞ்சியில்) கொண்டாடப்பட்ட ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில்- திருத்தமப்பனாரே- வாசித்தளித்திடும்படி ''அபிநந்தன'' பத்ரம் கொடுத்தனுப்பியிருந்தான். கத்ய பத்ய ரூபமாய் வெகு ச்லாக்யமாய் அமைந்திலங்கிய அதிலிருந்து சில அருமையான ச்லோகங்களையும், கத்யப்பகுதி முழுவதையும் இவனைச்சொல்வித்து, மிகவும் பாராட்டி மகிழ்ந்தமை ஸ்ரீ இளையவில்லி ஸ்வாமியின் பரமக்ருபாகடாக்ஷ கோசரீபாவத்துக்கு பேரடையாளமாய் இலங்கியது.

இந்த அருமையான ஸந்தர்ப்பத்தில் நமது பரமாப்தர் பேராசிரியர் ஸ்ரீ உ.வே. பூவராஹாசார்ய ஸ்வாமியைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் விண்ணப்பித்து பேருவகை எய்துகின்றான் இவ்வடியவன். இந்த பரம ஜ்ஞாதாவாய், பரமப்ரவக்தாவாய் ஜகத் ப்ரஸித்தராய் விளங்கிநிற்கும் இந்த ஸ்வாமியும் இவ்வடியவனும் பரஸ்பரம் எட்டு நாட்களே இடைவெளி கொண்ட ஸமவயஸ்கர்கள். தென் திருப்பேரெயில் திவ்ய க்ஷேத்ரத்தில் அத்யத்புதமாய் கொண்டாடப்பெற்ற மஹாஸம்ப்ரோக்ஷண வைபவம் துவங்கி பற்பல ஸதஸ்ஸுக்களில் யாமிருவரும் மிகச்சிறப்பாக பங்குபெற்று நிறம் பெற்றுள்ளோம். நிரம்ப விண்ணப்பிக்க வேண்டிய விஷயங்களிருந்தும், அவகாசமின்மையால் சுருக்கமாக விண்ணப்பித்துக் கொண்டபடி.

ஸர்வம் ஶுபமயம் பூயாத் ||

விக்ருதி வருஷம் வைகாசி 27
(10-06-2010)

**ஸ்ரீ ராமாநுஜன்**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீகுருங்க முநயே நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:



50வது பட்டத்தை அலங்கரிக்கும்
ஜீயர் ஸ்வாமி

# ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஸந்நிதி

## திரு ஜீயர் மடம்


திருக்குறுங்குடி – 627 115.
போன் : 95–4635–265291


---

**அந்தணர்க்கோ நல்லருந்தவர்க்கோ அன்றி யோகியராய்**
**வந்தவர்க்கோ மறைவாதியர்க்கோ மகரக் குழைசேர்**
**சுந்தரத்தோளனுக்கோ அவன் தொண்டர்கட்கோ சுடர்தோய்**
**சந்தனச்சோலைக் குருகைப்பிரான் வந்து சந்தித்ததே.**

இராமாவதாரத் தெம்பெருமானான திருக்குறுங்குடி நம்பி, உடைய நங்கையாரின் மநோரதம் நிறைவேறும்படி குருகூர் நம்பியாக அவதரித்தார். திருவனந்தன் அவன் நியமனப்படி, திருக்குருகூரில் திருப்புளி ஆழ்வாராக அவதரித்து, தன் நிழலில் மாறன் சடகோபனைக் காத்து நின்றான்.

இளையாழ்வார்க்கும் இளையவில்லிக்கும் உள்ள தொடர்பு அவர்கள் திருவவதரித்திருந்த காலத்தில்தான் ஏற்பட்டதொன்றல்ல. இருவருமே திருவனந்தாழ்வானின் அம்சமாகக் கருதப்படுபவர்களாதலின் இத்தொடர்பு திரேதாயுகம் தொட்டே இருந்து வருவதாகும்.

இளையாழ்வாரின் நியமனத்தின்படி, வெகுகாலம் பெரியதிருமலை நம்பியுடன் திருமலையில் அவருடைய கைங்கர்யத்துக்கு உசாத் துணையாக இருந்துவந்தார் இளையவில்லி. பெரியதிருமலை நம்பிக்காட்செய்திருந்த இளையவில்லி ஸ்வாமியின் சிறப்பு ஈடு வ்யாக்யானத்திலும் காட்டப் பெற்றுள்ளது. திருவாய்மொழி (1-4-8) பாசுர வ்யாக்யானத்தில் பெரிய திருமலை நம்பி தம்முடைய அந்திம தசையில், திருவாராதன எம்பெருமான் திருமுன்பில், திருத்திரையை வாங்கச் சொல்லி, **சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே** என்றருளிச் செய்தார் என்று எடுத்துக்காட்டப்படுகிறது. இச்செய்தி இளையவில்லி ஸ்வாமி மூலமாகவே எம்பெருமானார் உள்ளிட்டார் அறிந்து கொள்ள முடிந்தது.

அகார, உகார, மகாரங்களிலே காணலாம் என்னும்படி, ஆழ்வார், உடையவர் (எம்பெருமானார்), மணவாளமாமுனிகள் (ஜீயர்) அவதரித்து முப்புரியூட்டிய திருத்தலம் திருக்குருகூர். இத்தலத்தில் இளையவில்லி ஸ்வாமியின் திருவம்சத்தினர் ஆழ்வாருக்கு அவர் பாரித்தபடியே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்து வருகிறார்கள். இத்திருவம்சத்திலவதரித்த ஸ்ரீமதுபயவே. இளையவில்லி சடகோபாச்சாரியர் ஸ்வாமி சிந்தையாலும், சொல்லாலும் செய்கையினாலும் ஆழ்வார் கைங்கர்யமே நினைவாக எழுந்தருளியிருந்தவர். உபய வேதாந்த ப்ரவர்த்தகர். நம் மடத்தின் பால் பேரன்பு பூண்டவர்.

**ஆசார்யோ வேத ஸம்பந்நோ விஷ்ணு பக்தோ விமத்ஸர :**
**மந்த்ரஜ்ஞோ மந்த்ர பக்தஶ்ச ஸதா மந்த்ரார்த்தவிஶ் ஶுசி : |**
**குருபக்தி ஸமாயுக்த : புராணஜ்ஞோ விஶேஷத :**
**ஏவம் லக்ஷண ஸம்பந்நோ குருரித் யபிதீயதே ||**

என்று வேதங்களில் சொல்லப்பட்ட ஆசார்ய லக்ஷணம் பூர்ணமாக நிரம்பப்பெற்றவர். அன்னாரது ஶதமான நினைவாக மலர் வெளியிடுவது சாலச் சிறந்ததாகும்.

ஸ்ரீ ஸ்வாமியின் திருக்குமாரர் ஸ்ரீமதுபயவே. இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹாச்சாரியர் ஸ்வாமி, திருப்பேரன் இளையவில்லி ஸ்ரீராம் ஸ்வாமி இந்நிலவுலகில் அரோகத்ருடகாத்ரமான நல்வாழ்வு வாழ்ந்து மேன்மேலும் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை உய்வித்துக் கொண்டு போக திருக்குறுங்குடி ஸ்ரீவைஷ்ணவ நம்பி திருவடி வாரங்களிலும் குருகூர்நம்பி திருவடி வாரங்களிலும் ப்ரார்த்தித்துச் செய்யும் அனேக மங்களாசாசனம்.

**ஸர்வதேஶ தஶா காலேஷு அவ்யாஹத பராக்ரமா |**
**ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் ||**

ஸ்ரீவைஷ்ணவ வாமநம் (திருக்குறுங்குடி) **ஸ்ரீராமாநுஜன்**
விரோதி வருஷம் மாசி 14

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# எம்பெருமானார் ஜீயர் மடம்

**எம்பெருமானார் திருக்கோயில்**

**ஆழ்வார் திருநகரி – 628 612.**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**தொலைபேசி : 04639 – 273466**



பவிஷ்யதாசார்யர்
(எம்பெருமானார்)
ஆழ்வார் திருநகரி



ஸ்ரீமத் பரமஹம்ஸ
ரங்கராமானுஜ ஜீயர்
(எம்பெருமானார் ஜீயர்)
41வது பட்டம்

## மங்களாசாஸனம்

ஸ்ரீ குமாண்டூர் இளையவில்லி ஆச்சான் என்பவர் எம்பெருமானாரின் 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். அவர் திருவம்சத்தில் அவதரித்தவர் ஸ்ரீ ஸூக்திரத்னாகரம் இளையவில்லி சடகோபாச்சாரியார் ஸ்வாமி. அவர் பகவத் விஷய அதிகாரி. பல திவ்யதேசங்களில் உபந்யாஸங்கள் மலர் செய்துள்ளவர். இவ்வூரிலேயே “பகவத்விஷயம்” “ஸ்ரீராமாயணம்” காலக்ஷேபங்கள் சாதித்துள்ளார். அந்த ஸ்வாமி ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமியின் திருத்தகப்பனார்.

ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமி கர்நாடக மாநிலம் பங்களூரில் 30 வருஷங்களுக்கு மேலாக பல காலக்ஷேபங்கள் உபந்யாஸங்கள் சாதித்து அநேக ஸ்ரீவைஷ்ணவர்களைத் திருத்திப்பணி கொண்டவர். ஸ்வாமி ஆதிநாதர் ஆழ்வார் ஸந்நிதி தீர்த்தக்காரர், அத்யாபக மிராசுதார்.

ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசாரியர் ஸ்வாமியின் சதமான திருநக்ஷத்திர உத்ஸவம் **ந பூதோ ந பவிஷ்யதி** என்னும்படி 30.06.2010 அன்று இளையவில்லி (கற்குளம்) ஸ்வாமி திருமாளிகையில் கொண்டாடப்பட்டது. அந்த திருநக்ஷத்திரம் வ்யாஜமாக 5 நாட்கள் அருளிச்செயல், வேதபாராயண கோஷ்டி இளையவில்லி ஸ்வாமி திருமாளிகையில் நடைபெற்றது. உள்ளூர் மற்றும் வெளியூர் ஸ்வாமிகள் பாராயணத்தில் கலந்து கொண்டனர். குறிப்பாக கர்நாடக தேசத்திலிருந்து வேதபாராயண ஸ்வாமிகள் வந்து பாராயணம் செய்தது குறிப்பிடத்தகுந்தது. மேலும் மேற்படி 5 தினங்களும் நம்முடைய தலைமையில் பிரபல வித்வான்களின் உபந்யாஸங்கள் மாலை 5 மணிக்கு ஸ்வாமி ஆதிநாதர் ஆழ்வார் ஸந்நிதி வாஹன மண்டபத்தில் நடைபெற்றது. வைதீகமான பாராயணங்கள், உபந்யாஸங்கள் மட்டுமல்லாமல் பல

கலைஞர்களின் நாட்டிய, நாடக பாட்டுக் கச்சேரிகளும் குறிப்பாக கர்நாடக கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திவ்யப்ரபந்த, வேதபாராயணங்களில் அந்வயித்த ஸ்வாமிகளோடு, உபந்யஸித்த வித்வான்களோடு, நாட்டிய, நாடக, பாட்டு கலைஞர்களையும் ஊக்குவித்து ஆழ்வார் ஆசார்யர் சம்பந்தம் கிடைக்கும்படி ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசாரியார் ஸ்வாமி ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு உத்தமமான ஸம்பாவனைகள் வழங்கி கௌரவித்தது வாசாம் அகோசரம். ஸ்ரீ உ.வே. பூவராஹாசாரியர் ஸ்வாமி அவருடன் நில்லாமல் அவர் குமாரர் மற்றும் பேரனை உபந்யாஸம் பண்ணும்படியாகத் தயார் செய்து வைத்துள்ளது மிக்க மகிழ்ச்சி. ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாச்சாரியர் ஸ்வாமி மற்றும் புத்ர, பௌத்திரர்கள் உபந்யாஸம் செய்து கொண்டு பகவத் பாவகத கைங்கர்யத்தில் ஈடுபட்டு **வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வார் மண்ணூடே** என்ற ஆழ்வார் திருவாக்குப்படி பல்லாண்டு வாழ எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன். சதமான உத்ஸவ ஞாபகமாக ஒருமலர் வெளியிடுவதாகக் கேள்விப்பட்டேன். மலர் நறுமணம் கமழ அமையுமாறு ஸ்வாமி ஆதிநாதர் ஆழ்வார் எம்பெருமானாரைப் பிரார்த்திக்கிறேன்.

ஆழ்வார் திருநகரி,
விக்ருதி வருஷம் - "உங்கள் புழைக்கடை" **ரங்கராமானுஜ ஜீயர்**
*(29.12.2010)*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே பாலதந்வி மஹாகுரவே நம:

# ஸ்ரீ குமாண்டூர் இளையவில்லியாச்சான் பரம்பரை

## கூடஸ்தர் - ஸ்ரீ குமாண்டூர் இளையவில்லியாச்சான் (பாலதந்வி)

இவர் ஸ்வாமி எம்பெருமானாரால் (ஸ்ரீபாஷ்யகாரரால்) நியமிக்கப்பட்ட 72வது ஸிம்ஹாஸனாதிபதி. எம்பாரைப்போல, உடையவருக்கு சிறிய தாயார் குமாரராய் அவதரித்து உடையவருடைய திருமேனி ஸம்பந்தம் பெற்றவர். பெருமாளுக்கு இளைய பெருமாள் எல்லா வடிமைகளும் செய்ததுபோல், உடையவர் திருவடிகளிலே சகல கைங்கர்யங்களையும் இவர் செய்தமையால், எம்பெருமானாராலேயே ‘‘இளையவில்லி ஆச்சான்’’ என்று திருநாமம் சாத்தப் பெற்றவர்.

இவர் சித்திரை மாதம் ரேவதி நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். இவர் கௌசிக கோத்ரத்தைச் சேர்ந்தவர். இவர் பெரிய திருமலைநம்பியின் மருமகன். ஆகையால் அவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் வடமொழியில் பாலதந்வி என்று அழைக்கப்பட்டார்.

### ஸ்ரீ குமாண்டூர் இளையவில்லி ஆச்சான் தனியன்

**ஸ்ரீகௌஶிகாந்வய மஹாம்புதி பூர்ண சந்த்ரம்**
**ஸ்ரீபாஷ்யகார ஜநநீ ஸஹஜா தநூஜம் |**
**ஸ்ரீ ஶைலபூர்ண பதபங்கஜ ஸக்தசித்தம்**
**ஸ்ரீபாலதந்வி குருவர்ய மஹம் பஜாமி ||**

**ஸ்ரீயதீந்த்ர மாத்ரு ஸ்வஸ்ரீய: ப்ரதிதார்யபதே ஸ்தித: |**
**மூலபூத: கௌஶிகாநாம் தம் வந்தே பாலதந்விநம் ||**

*இவருடைய வம்ச பரம்பரை கீழ்க்கண்டவாறு:-*

*2. தாதத்ரிவிக்ரமண்ணன் (திரிவிக்ரம குரு)*

*3. பெரிய இளையாழ்வார் (ராமானுஜ குரு)*

*4. குமாண்டூர் தோழப்பர்*

*5. சிறிய இளையாழ்வார்*

*6. வரம் தரும் பெருமாளண்ணன்*

*7. வரம் தரும் பெருமாளப்பன்*

*8. வரம் தரும் பெருமாளப்பை (திருநக்ஷத்ரம்: ஆவணி அவிட்டம்)*
*(ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவடிகளிலே ஆஶ்ரயித்தவர்)*

★★★

## “தானேயெழுதிய தன் சரிதை” - யிலிருந்து சில பகுதிகள்
### ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி

........................................................ அரையர்ஸேவை நடந்து கொண்டிருந்தது. நம்முடைய பாக்ய விசேஷத்தினால் இற்றைக்கும் பாங்காக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ அரையர் வடபத்ரமையங்கார் ஸ்வாமி அப்போது பவளவாய் அதிகம்பீரமான தோற்றத்துடனே ஆச்சரியமான திருவிடற்றோசையுடனே வியாக்கியானம் ஸேவித்துக் கொண்டிருந்தார். முதன் முதலாக அந்த மஹானுடைய கடாக்ஷவீக்ஷணத்திற்கும் நிரவக்ரஹமான அநுக்ரஹத்திற்கும் இலக்கானேன்.

அடியேனுக்கு அப்போதிருந்த “ஜீயர் பேரன்” என்கிற வ்யபதேசம் அடியேன் அங்கு விடை கொள்வதற்கு முன்னமே பரவியிருந்தது போலும். அதனால் அங்கு எழுந்தருளியிருந்த மஹான்கள் பலரும் மிகச்சிறியேனான வென்னை அதிமாத்ரம் ஆதரித்தார்கள். வாழைக்குளத்தெருவில் தமிழ் வித்வான் ஸ்ரீ உ.வே. அப்புவையங்கார் ஸ்வாமி, மஹாப்ராஜ்ஞரான திருவாழி ஸ்வாமி, மேலைவாத்யார் ஸ்வாமி ............ முதலான பல மஹான்கள் இப்போது நமது தௌர்ப்பாக்யத்தினாலே வைகுண்ட வாஸிகளாயிருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட பல மஹான்கள் அடியேனை முன்னமறியாதவர்கள் சிரபரிசிதர்கள்போல அணுகி வந்து ‘அடியேனுடைய க்ருஹத்திற்கு வர வேணும், அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருள வேணும்’ என்று அஹமஹமிகயா அழைத்தருளின ஸம்ப்ரமங்கள் இன்றுபோல் நினைவுக்கு வரும்போது “நினைந்தென்னுள்ளே நின்றுநெக்குக் கண்களசும்பொழுக” என்னும் நிலைமையே உண்டாகிறது. வாழ்நாளெல்லாம் அவ்விடத்திலேயே இருந்து விடலாமென்றும் தோன்றிற்று. ஒரு வாரத்திற்குள் இந்த திவ்யதேச யாத்திரையை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்ப வேண்டிய ஆவச்யகதையிருந்தது.

அப்போது இரண்டொருநாள்தான் ஸ்ரீவில்லிபுதூரில் இருக்க நேர்ந்தது. அங்கு **ஸ்ரீ உ.வே. விஞ்சிமூர் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி**யென்கிற மஹான் சிறந்த அத்யாபகராய் கோஷ்டியை நிர்வஹித்து வருகிறார். அவருடைய மூத்த திருக்குமாரர் **விஞ்சிமூர் ஆழ்வார் ஸ்வாமி** அப்போது வித்யார்த்திதசையிலிருக்கிறார். மஹாமேதாவி, ஸர்வர்க்கும் ஸ்ப்ருஹணீயர். அவருடைய நிரதிசய ப்ரீதிக்கும் பாத்ரமானேன். அந்த ஸ்வாமி இப்போது ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர்ஸ்வாமி திருவடிவாரத்தில் ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருக்கிறார்.

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் தற்போது அனேக வித்வான்கள் எழுந்தருளியிருந்தாலும் இந்த ஆழ்வார் ஸ்வாமியை விசிஷ்டாதிகாரியாக அடியேன் கொண்டிருக்கிறேன். உபய வேதாந்தத்திலும் தெளிந்த ஞானமுடையவர். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுமெல்லாம் கண்டஸ்தமாக இருக்கப்பெற்றவர்.

வித்வான்களுக்கு இந்த ஸம்பத்து வாய்ப்பது அரிதன்றோ. மூலோபஸ்திதியில்லாமல் காலக்ஷேபம் ஸாதிப்பவர்கள் பலருளர். அங்ஙனன்றிக்கே அருளிச்செயல்கள், ரஹஸ்யங்கள், ஸ்தவங்கள் என்னும் வாசியின்றிக்கே ஸகல திவ்ய ஸூக்திகளையும் அர்த்தஜ்ஞானத்தோடும் கண்ட பாடமாக வைத்துக் கொண்டிருப்பவர் இந்த ஸ்வாமி. அத்தோடு நல்ல விமர்சகௌசலமுமுள்ளவர். ஆழ்வார் காலத்தில் அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடிக்க வேண்டியிருந்ததாக ஆசார்யஹ்ருதயத்தில் ஸாதிக்கப்பட்டது. இக்காலத்தில் இந்த ஸ்வாமியைப் போன்ற விசிஷ்டாதிகாரிகளைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மகுண ஸம்பத்தியுமமைந்தவர். பல்லாண்டு பாடின மஹான் அவதரித்த தலத்திலே அவதரித்த இவர்க்கு நாம் பல்லாண்டு பாடுவது மிகை. ஆயினும் **ஸ மஹாத்மா ஸுதுர்லப:** என்னும் கோவையில் நினைவுக்கு வரக்கூடியவர்களில் அடியேனுடைய நினைவில் நித்யஸந்நிஹிதரான இந்த ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாடுகிறேன்.

மிகமுக்கியமாக இங்கு ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். **இப்படிப்பட்ட துர்லபாதிகாரிகளில் மற்றும் ஒருவராக ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீமதுபயவே இளையவில்லி சடகோபாச்சாரியர் ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார்.** அந்த ஸ்வாமி இரண்டு வருஷ காலமாக அடியேனுக்கு ஸம்பந்தியாயிருக்கின்றார். அதற்காகக் கொண்டாடுகிறபடி போலுமென்று சிலர் நினைப்பர்களாயினும் அந்த ஸ்வாமியின் ஒப்புயர்வற்ற யோக்யதாதிசயங்களை உள்ளபடி யுணர்ந்தவர்கள் இக்கொண்டாட்டம் ஸ்தாநே ஸ்தாநேயென்று உள்குழைவர்கள்.

ஆழ்வாரருளிச் செயல்கள் அர்த்தஜ்ஞானமில்லாதவர்களுக்குக் கைவந்திருப்பதை நாம் பலவிடங்களிலும் காணலாம். அதில் என்ன வியப்பு ? வேதத்தை மட்டும் உருப்போட்டுத் தலைகீழாகச் சொல்லவல்லவர்கள் பலருளரன்றோ ? அவர்கள் பக்கலில் விஸ்மயநீயம் என்னவுளது ? அப்படி திவ்யப்ரபந்த மூலத்தைக் கண்ட பாடம் செய்தவர்கள் பலருளரென்றாலும் வியப்பில்லை. ஜ்ஞானபூர்த்தியுடன் ப்ரவசநம் செய்யவல்ல அதிகாரிகளிடத்திலே ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் யாவும் கண்டஸ்தமாக இருக்கப்பெற்றால் அது ஸுவர்ணகமலத்திற்கு ஸௌரபோந்மேஷம் என்றுதான் சொல்லவடுக்கும். திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியிடத்திலே அடியேனுக்கு ஈடுபாடு உண்டானதற்குக் காரணம் இதுவே. சாஸ்த்ரஜ்ஞர்களில் தலைவராயிருந்து அருளிச் செயல்களையும் ரஹஸ்யக்ரந்தங்களையும் முகஸ்தமாகக் கொண்டிருந்த பெருமையை முதன்முதலாக அந்த ஸ்வாமியிடத்திலே அடியேன் கண்டு ஈடுபட்டவன். இத்தகைய உத்தமாதிகாரிகளிலே தற்காலம் அடியேனுடைய நித்யாநுஸந்தானத்திலுள்ளவர்கள் மிகச்சிலரே. அவர்களுள் மேலேகுறித்த ஸ்வாமிகளிருவரும் முன்னணியில் நிற்பவர்கள்.

*(“**தானேயெழுதிய தன் சரிதை**” - பக்கங்கள்: 39,40,41 - ஸ்ரீவில்லிபுத்தூர்ச் செய்திகள் / தென்தேச யாத்திரைச் செய்தி”)*

# நவவித ஸம்பந்தங்கள்

## கீர்த்திமூர்த்தி 'ஶ்ரீஸூக்தி ரத்நாகரம்'
## ஶ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி

ஶ்ரிய: பதியான ஶ்ரீமந் நாராயணனுக்கும். பத்த முக்த நித்யர்களென்கிற ஜீவ தத்துவ கோடிகளுக்கும், அநாதிஸித்தமாய் ஒரு காரணத்தால் வந்து மற்றொரு காரணத்தால் தொலைந்து போகும் உடலுறவு போலல்லாமல் "உந்தன்னோடு உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது" என்று ஆண்டாள் அருளியபடியே, நாமாக ஒழிக்கப் பார்த்தாலும் ஒழியாததாய், அவனாக ஒழிக்கவென்று பார்த்தாலும் ஒழியாததாய் இருவருமாய் ஒழிக்கப் பார்த்தாலும் ஒழியாததாய் நித்யமான உறவுகளாகும் இவைகள்.

இவ்வுறவுகளை உள்ளபடி அறிந்தவர்களை எம்பெருமான் **"அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக் கன்றையும் புல்லிடவந்தவர்களையும், கொம்பிலும் குளம்பிலும் ஏற்குமாப்போலே"** என்றபடி மிகவும் அபிமானித்து ஏற்றுக் கொள்ளுவானாம்.

**"கொன்றேன் பல்லுயிரை, அன்றே வந்தடைந்தேன்"** என்கிறபடி பாபிகளாகிய ஜீவர்கள் ஸர்வேச்வரனை அடைய வேணுமென்று கிட்டும்போது. நம் குற்றங்களைக் கணக்கிட்டு தண்டிக்கில் செய்வதென், என்று அஞ்சவேண்டாதே இவ்வளவு உறவு முறைகளிருக்குமவனை கிட்ட அஞ்ச வேண்டா என்னும் துணிவு பிறக்க ஹேதுவாகிறபடியால் அனைவரும் இந்த ஸம்பந்தத்தை அறிந்துகொள்வது அவசியமாகும், இந்த ஸம்பந்தங்கள் அடைவுபடுத்தப்பட்டு பகவத் சாஸ்த்ரம் என்கிற ஶ்ரீபாஞ்சராத்ரத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

**பிதா ச ரக்ஷகஶ்ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: |**
**ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தாசாத்யமநூதித: ||**

என்கிற வசனத்தில் ஆத்யமனு என்று முதலாகிய மூல மந்திரம் எனப்படும் திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லிற்று. இந்தத் திருமந்திரத்தில் முதல்பதம் ப்ரணவம். அதில் அ-உ-ம என்கிற மூன்றெழுத்துக்கள் உள்ளது. அதில் அகாரம் - ஶ்ரீமந்நாராயணனையும், அவனுடைய ஸகல உலகங்களுக்கும் காரணமாக இருக்கும் தன்மையையும் ரக்ஷகனாக இருக்கும் தன்மையையும் காட்டும்.

### 1. பிதா-புத்ர பாவ ரூபமான ஸம்பந்தம்

ஜகத்துக்கு காரணம் என்பதனால் பிதா எனப்படுகிறான். இதில்:- ஜீவாத்மா நித்யனாகையாலே அவனை உண்டாக்கினான் என்பது எப்படிப் பொருந்தும் எனில்? மஹாப்ரளயம் வந்த காலம் முதல் ஸ்ருஷ்டி காலம் வரை உடல் உறுப்புக்களொன்றுமில்லாமல் மெழுகிலே ஒற்றிய தங்கப்பொடியைப் போலே, ஸர்வேச்வரன் திருவயிற்றிலே கிடந்தவற்றை கருணையினால், போக மோக்ஷங்களை

விளைவித்துக்கொள்ள ஹேதுவான உடலுறுப்புக்களை இந்த ஜீவாத்மாவுக்கு கொடுப்பதால், ஸ்ருஷ்டிக்கிறான் எனப்படுகிறது. பிதா-ச-என்கிற விடத்தில் உள்ள சகாரத்தால் தாயாகவும் இருக்கிறான் என்றதாகும். உலகத்தில் தமப்பன் தாயாக இருக்கமுடியாது. தாய் தமப்பனாக

ஆகமுடியாது. பகவானோ "அத்தனாகி அன்னையாகி ஆளுமெம்பிரானுமாய்" என்றும் "தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய் அவையல்லனாய்" என்றும் "உயிர்க்கெல்லாம் தாயாய் அளிக்கின்ற தண்டாமரைக் கண்ணன்" என்றும் ஹிதத்தைச் செய்யும் தமப்பனாகவும் ப்ரியத்தைச் செய்யும் தாயாகவும் தானே ஆகிறான் என்பது விசேஷம்.

ஸம்ஸாரிகள் தீம்பிலே தகணேறிப்போய் திருத்திப் பணி கொள்ள முடியாதபோது இனி அரைக்ஷணம் தாமதித்தாலும் இவர்களுக்கு ஆத்மநாசம் உண்டாய்விடும் என்று தாயினுமன்பனானபடியாலே இவர்கள் குன்றனைய குற்றங்களையும் குணமாகக்கொண்டு வயிற்றிலே வைத்து நெடுங்காலம் காத்து ரக்ஷித்து ப்ரளயம் கொண்டு போகாதபடி அவஸரமாய் உண்டு ப்ரளயம் வந்து உலகமெங்கே என்று கேட்டால் ஏது இங்கே? என்வயிற்றைப்பார்; மூன்று மடிப்பு விழுந்து மாஸோபவாஸி போலேயிருக்கிறதே என்று மறைத்துவைத்து இவ்வுயிர்களுக்கு தீமையின் வாஸனை தொலையுமளவும் பாதுகாத்து பிறகு வெளியிடுவானாகிற செயல் தாயினுமன்பனான படியாலே செய்த செயலாகிறது. மாதா, பிதா, புத்ரஸம்பந்தம் என்பது முதலாவது. மற்ற உறவுகளெல்லாம் அதை ஒட்டித்தானே உண்டாகிறது. தாய்வழி உறவுகள் பலர், தமப்பன்வழி உறவுகள் பலர், இங்கே இரண்டு உறவும் அவனேயாகிறாப் போலே அவர்களைச் சார்ந்த மற்ற உறவுகளும் அவனேயாம். **"சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும் அவரேயினியாவாரே",** என்று இவ்வுறவுகளைக் கூடியிருந்து குளிர்ந்து களிக்கவே அர்ச்சாவதாரமாக கோயில்களிலே வந்து ஸந்நிதி பண்ணிக்கொண்டிருக்கிறான் எம்பெருமான். **"தெளிவிலாக்கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துள்ளோங்கும் ஒளியுளார்தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்"** என்ற உறவு ப்ரகாசிக்கிறது என்பதை "ஒளியுளார்" என்று காட்டினார், தொண்டரடிப் பொடிகள் திருமாலையில். "உறவு மற்றொருவரில்லை" என்று கழித்தது உடலுறவுகளை. உலகத்தில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை க்ஷாமகாலம் வந்தபோது விற்கவும் துணிந்துவிடுவார்கள். தங்களால் ரக்ஷிக்க முடியாதென்று விட்டும் அகன்று போவார்கள். ரிஷீகர் என்கிற மஹரிஷி தன் நடுவில் பிள்ளையான சுனச்சேபன் என்பவனை யாகத்துக்கு பசுவுக்காக பணம் பெற்றுக்கொண்டு கொடுத்துவிட்டார். தாயும் இசைந்துவிட்டாள். ஹிரண்யன் ப்ரஹ்லாதனைத் தன்னையே ஈச்வரனாகச் சொல்ல மறுத்ததற்காக அவனைப் பலவிதத்திலும் கொல்லப்பார்த்தான்; அப்படியில்லாமல் ஸ்ரீமந்நாராயணன் தன்னை இல்லை செய்வார்க்கும், "இராமட மூட்டுவாரைப் போலே" என்று, அதாவது பைத்தியம்

பிடித்த பிள்ளை தாயைக் கண்டால் கொல்லுவேன் என்று, உண்ணாது மடத்திலே போய்க்கிடப்பான். தாயானவள் இரவில், தன்னை காட்டிக் கொள்ளாமல் யாராவது இங்கு பசியுடனிருக்கிறார்களா என்று கேட்டு இவனைக் கண்டு அவனறியாமல் அவனுக்கு அன்னமிட்டு அவன் உண்டதும் தன் வயிறு நிறைந்தது போலே மகிழ்ச்சியடைவாள். அது போலே எம்பெருமான் உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போகும்படியான குடல் துடக்கான ஸம்பந்தமாகும் இது. ஆக பிதா - புத்ர ஸம்பந்தம் 'அ' என்கிற ப்ரக்ருத்யர்த்தத்தால் அறியப்பட்டதாயிற்று.

**2. ரக்ஷ்ய-ரக்ஷக பாவ ரூபமான ஸம்பந்தம்**

இனி இரண்டாவது ஸம்பந்தம் ரக்ஷ்ய ரக்ஷக பாவரூபமான ஸம்பந்தம். இதுவும் முதலெழுத்தான அகாரத்தினாலேயே காட்டப்படுகிறது, அவரக்ஷணே என்கிற வினைச் சொல்லில் ரக்ஷிக்கை என்கிற பொருள் தேறுகின்றது. இதனால் கீழ்ச்சொன்ன உறவுகளினால் இவனை அவன் காத்து அவரவர்களுக்கு வேண்டும் பலன்களை அளித்து நம்மை யாட்கொண்டருளுவான். **"ரக்ஷிக்கும் போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீஸம்பந்தம் அநுஸந்தேயம்"** என்று இவன் பாபத்தின் கனத்தால் அவனை நெருங்க அஞ்சுவன், பாபியான இவனிடம் அவனுக்குள்ள கோபத்தால் கிட்டினாலும் இவனை தண்டிக்க வேண்டிய நிலைமை உண்டாகும். இந்த ஸமயத்தில் பிராட்டி முன்னாக அவனைப்பற்றினால் அவனை உசிதமான உபாயங்களாலே தன்வசப்படுத்தி சேதனனை அவனுக்காளாக்கி வைப்பவள் பிராட்டியாகையாலே ரக்ஷணத்துக்காக அவளை இறையும் அகலாதே அலர்மேல் மங்கை உறை மார்பனாய் தன் மார்பிலே வைத்துக்கொண்டிருப்பான் என்கிறபடியாலே, அகாரத்திலே பிராட்டி ஸம்பந்தமும் உண்டென்கிறது. பிதா அவன். 'ச' என்கிறவதனால் பிராட்டியும் தாயாய் தனித்து நின்று ரக்ஷகத்வத்திலே முக்கியமாக இருப்பவளென்கிறது. இங்கு, அவன் தாயாயிருப்பதினால் ரக்ஷணம் கை கூடாது; இவளைப்பத்நியாகக் கொண்டபடியாலே உயிர்க்கெல்லாம் தாயானமுறையை இவளிடம் இட்டு வைத்து இவளுக்காகவேதான் ரக்ஷிக்கிறோம் என்கிறவதனால் ரக்ஷகத்வம் அவனிடம் நிலை நின்றதாகிறது. இந்த சேதனர்கள் ரக்ஷிக்கப்பட்டவர்களாகிறதும் இவளாலே தான் பாபியான இவன் சிக்ஷிக்கப்பட வேண்டியவனாகாமல் ரக்ஷிக்கப்படுவானாகிறது இவளாலே. இதனை இருவரிடமும் மாறி மாறிக் காணக்கிடைக்கிறது. அவனும் தாயாகி இவளும் தாயாகி இவர்களை ரக்ஷிக்க மேல்விழுவார்கள். ஆகவே ரக்ஷ்ய - ரக்ஷகபாவம் இத்தகையது. இதனை குலசேகரப் பெருமாள்,

**தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை**
**விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே**
**அரிசினத்தாலீன்ற தாய் அகற்றிடினும், மற்றவள் தன்**
**அருள் நினைந்தே அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே**

என்கிற பாட்டினால் பிதா-புத்ர, மாதா-புத்ர என்கிற இரண்டுங் கூடிய ஸம்பந்தஜ்ஞானம் அனைவருக்கும் முந்துற முன்னம் உண்டாக வேணுமென்பதை பெருமாள் திருமொழி 5ம் பதிகத்தில் முதற்பாட்டாலே அறுதியிட்டார். ரக்ஷகத்வத்தை 4வது பாட்டிலே இட்டுக் காட்டுகிறார்;

**வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத்துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா - நீ**
**ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே.**

இங்கு வேறு ரக்ஷகர்கள் எனக்கில்லை. **"களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்"** என்கிறபடி அவன் நமக்கு கஷ்டங்களைக்கொடுப்பதும் ரக்ஷண காரியத்திலேயே சேர்ந்ததுதான், என்பதை மருத்துவன் செய்யும் ரண சிகித்ஸையைப் போன்றதாம் என்று அறிவுடையார் உணர வேண்டுமென்பது இங்கு காட்டப்பட்டதாம். **மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனிறே** இவன். பிள்ளைலோகாசாரியார் ஸாதித்திருக்கும் **"ப்ரபந்நபரித்ராணம்"** என்கிற ஒரு ரஹஸ்யத்தில், ரக்ஷிக்கும் வகையை அடைவுடன் அருளிச் செய்திருக்கிறார். அங்கே கண்டு கொள்ளுவது.

### 3. சேஷ-சேஷி பாவ ரூபமான ஸம்பந்தம்

இனி மூன்றாவது சேஷ-சேஷி பாவ ரூப ஸம்பந்தம். ஜீவர்களை சேஷபூதர்களென்றும் ஸர்வேச்வரனை சேஷி என்றும் ஸகல சாஸ்திரங்களும் நிலைநாட்டியிருக்கிறது. சேஷத்வமாவது தான் அவனுக்கே அதிசயத்தை உண்டாக்கும் வஸ்துவாக இருக்கை. ஒரு யஜமானனுக்கு வீடு, நிலம், புத்ரர்கள், மித்ரர்கள், இல்லாள் என்பன பலவும் சேஷமாக இருக்கையாலே யஜமானன் சேஷியென்கிற சொல்லுக்குரியவனாகி சேஷபூதர்களை (இவைகளைத்) தன் ஸௌகரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறான். இதுதான், சேவகாவ்ருத்தியே சேஷத்வமாகையாலே, நாய்த்தொழிலெனப்படும் சேஷத்வம் இவனுக்கு விலக்கத்தக்கதன்றோ என்றால், அந்த நியமமில்லை. ஒரு குணக்கடலான வஸ்துவைக்கிட்டி அதின் குணத்திலே ஈடுபட்டு அவ்விடத்துக்கு நாம் அடிமையாக இருப்பது என்கிற பெருமை நமக்கு கிடைக்குமா என்று ஆசைப்பட்டிருப்பார்கள். என்போல வென்னில் தாஸீலோலனாக இருந்தவன் ஒருவன், அவள் உடல் நலமில்லாமல் இருந்தபோது அவள் பிழைத்தெழுந்தால் என் தலையை அறுத்து தருகிறேன் என்று ஒரு காளி அம்மனிடம் ப்ரார்த்தனை செய்துகொண்டானாம், அவள் பிழைத்து இவன் மாண்டால் அவளால் நமக்கு என்ன பயன் என்பதைக்கூட மறக்கப் பண்ணுகிறது, அவளிடம் இவன் கொண்ட அன்பு, தகாததாய் தோஷங்கள் நிறைந்த இடத்திலேயே இப்படி இருந்தால் ஸகல கல்யாணகுணக் கடலாய் ஆண்களையும் தங்களை பெண்ணாக நினைக்கச் செய்யும் பேரழகனான ஸ்ரீமந்நாராயணனைக் கண்டால் அவனிடம் இவன் அடிமையாகச் சொல்ல வேணுமோ ஆகையாலே சேஷத்வம் ஸ்வரூபமே வகுத்த

விஷயத்தில் ஆகும்போது. இது திருமந்திரத்தில் முதலெழுத்திலேயே அறியப்படுகிறது. அதாவது அகாரம் நான்காவது வேற்றுமையை ஏற்று ஸந்தியில் மறைந்து கிடக்கிறது. இதனை லுப்தசதுர்த்தி என்பர். இதனால் அகாரத்தாலே சொல்லப்படுகிற ஸ்ரீமந்நாராயணனுக்கு சேஷம் என்பது பொருள். எது சேஷம் என்றால் உகாரத்துக்குப்பிறகு இருக்கும் மகாரத்தாலே சொல்லப்படுகிற ஜீவாத்மாவானவன் சேஷம் என்று பொருள். இது அவன் குணமடியாக விளைந்தது, ஆகையாலே ஸகல கல்யாணகுணாகரத்வம் என்பதும் அகாரத்தின் பொருளாக அமையப் பெற்றது. குலசேகராழ்வார் இதனைப் பெருமாள் திருமொழியில் ஐந்தாம் பதிகத்தில் மூன்றாவது பாட்டில் நன்கு அருளிச் செய்திருக்கிறார்.

**மீன்னோக்கு நீள்வயல்சூழ் வித்துவக் கோட்டம்மா**
**என்பால் நோக்காயாகிலும் உன் பற்றலால் பற்றிலேன்**
**தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் - தார்வேந்தன்**
**கோல் நோக்கி வாழுங்குடி போன்றிருந்தேனே.**

இங்கு ஓர் அரசனுக்கு குடிமக்கள் எப்படி சேஷபூதர்களோ அப்படியே என்கிற உவமை நோக்கத்தக்கது. **எத்துயரம் செய்திடினும்** என்பதனால் குணமின்றி கொடுங்கோன்மையுடனிருப்பினும் ராஜ விச்வாஸம் அன்னாட்டவர்களுக்கு அவசியம் என்பது தேறுகிறது. இங்கும் குணத்தாலே உண்டாகும் சேஷத்வத்திலுங்காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமான - அதாவது தாமான தன்மையினாலே உரியதாய் காரணத்தை அடிப்படையாகக் கொள்ளாத சேஷத்வம் என்பதாகும். இதை சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் சீதாப்பிராட்டி வைத்திருக்கும் அன்புக்கு அவரிடமிருக்கிற குணங்களும் அழகும் காரணமல்ல. அவைகளை அவரிடமிருந்து பிரித்து, அதற்கு மாறாக துர்க்குணங்களும் விகாரமான தோற்றமும் அவருக்கு இருப்பினும் இப்போதுள்ளது போலவே அவரிடம் அன்புற்றிருப்பேன் என்று சபதமிட்டுச் சொல்லுகிறாள் அநஸூயை என்கிற ரிஷிபத்னியிடம். அதுதான் சேஷத்வத்திலே நிலைநின்ற தன்மையாகும். குணம் காரணமாக சேஷிக்கு அடிமை செய்தால் குணமில்லாத போது சேஷத்வம் போய்விடும். அது கூடாது. இதுதான் ஜீவாத்மாவின் தன்மையில் முக்கியமானதாகும். **சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம், சேஷத்வமில்லாத போது ஸ்வரூபமில்லை** என்று நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இது ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யம்.

### 4. பர்த்ரு-பார்யா ஸம்பந்தம்

இனி நான்காவது பர்த்ரு-பார்யா ஸம்பந்தம். சேஷமான வஸ்துக்களிலே பார்யை என்கிற ஸம்பந்தமும் கூடியிருப்பினும் தனித்து இந்த ஸம்பந்த ஜ்ஞானம் அவசியமாகிறது. இதை திருமந்திரத்தில் உகாரத்திலே காணலாம். அகாரத்தாலே சொல்லப்படுகிற ஸ்ரீமந்நாராயணனுக்கு மகாரத்தாலே சொல்லப்படுகிற ஜீவன் அடிமை என்று சாதாரணமாய்ச் சொல்லுவது போறாது. ஸ்ரீமந் நாராயணனுக்கே என்கிற தேற்றம் அவசியமாகிறது, ஹிரண்யன், ராவணன் முதலானவர்களைப் போலே நான்

ஒருவருக்கும் சேஷமானவனல்லன். எனக்கு நானே எஜமானன் என்றிருக்கும் தன்மையும் அல்லது வேறுபலருக்கு சேஷம் என்றிருக்கும் தன்மையும் கழியப்பெறவேணும்.

அப்போது தான் பகவச்சேஷத்வம் ஸித்திக்கும். அது என் போல வென்றில் - ஒரு பதிவ்ரதையான பெண், எப்படி பர்த்தாவைத் தவிர வேறு ஒரு ஆடவனை மனத்தாலும் நினையாளோ அப்படிப்பட்ட நிலை என்பது இங்கு குறிக்கோளாகையாலே அதை இந்த உகாரம் அநந்யார்ஹத்வம் என்கிற தன்மையை நிலைநாட்டி வைக்கிறது. மற்றொருவருக்கு சேஷப்படுகையை ஸ்வரூப நாசமாகவே கொண்டது. இதனை ஆண்டாள் நாய்ச்சியார் திருமொழியில்

**வானிடை வாழும் அவ்வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்த அவி**
**கானிடைத்திரிவதோர் நரி புகுந்து கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப**
**ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று உன்னித் தெழுந்த என் தடமுலைகள்**
**மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே.**

என்கிற பாட்டிலே உறுதியாய் உரைத்திருக்கிறான். இதற்கு மூலம் திருத்தகப்பனாராகிய பெரியாழ்வார், தம் திருமொழியில் (3ம் பத்து 4ம் திருமொழியில்)

**சுற்றிநின்று ................................ அன்றிப்பின் மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ் சோலையெம்மாயற்கல்லால் கொற்றவனுக்கிவளாம் என்றெண்ணிக் கொடுமின்கள், கொடீராகில், கோழம்பமே.**

என்று இவ்வர்த்தத்தை நிலை நாட்டியிருப்பதேயாகும்.

குலசேகராழ்வார் இதனை பெருமாள் திருமொழியில் (5-2ல்)

**கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும்**
**கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்**
**விண்டோய் மதிள் புடைசூழ் வித்துவக் கோட்டம்மா ! நீ**
**கொண்டாளாயாகிலும் உன்குரைகழலே கூறுவேனே.**

என்று சாதித்தார். ஒரு பெண் பர்த்தாவால் கைவிடப்பட்டாலும் அவள் மற்றவர்களுடன் கூடி அழிந்து போகாமல் தன் கற்பைக் காப்பாற்றிக் கொண்டிருந்தால் ஒரு காலத்தில் பர்த்தாவினால் அங்கீகரிக்கப்படலாம். அப்படியில்லாமல் தன்நிறை காப்பை இழந்து விடுவாளாயின் உதவாதவளாகிறாப்போலே இந்த ஜீவாத்மாவும், அநந்யார்ஹ சேஷத்வத்திலே நிலைநிற்காமல், தேவதாந்தரங்களை வழிபட்டு அவர்களையும் பரதேவதையாகச் சொல்லிவருபவர்களுடன் கூடியாடி, கோஷமிட்டுவந்தால் சேஷத்வமே அழிந்து பரம்புருடனான பகவானால் கைக்கொள்ளப்படவேமாட்டான். ஆத்ம நாசமே விளையும். இங்கு ஆணாகிய நம்போலியரை ஸ்ரீமந் நாராயணனுக்கு எப்படி பார்யையாகச் சொல்லலாகும் என்கிற கேள்வி எழக்கூடும். இங்கு **ஜீவாத்மாவின் உடலமைப்பு எப்படியிருந்தாலும் ஜீவனின் தன்மை பரமபுருஷனாகிய**

**எம்பெருமானுக்கு பார்யையாகும் நிலைமையிலுள்ளதாகும்.** அதற்குத்தக்க குணங்கள் பதிவ்ரதையான பெண்ணுக்கும் ஜீவாத்மாவுக்கும் பொதுவாக உள்ளதாகும். அதில் முதலாவது அநந்யார்ஹ சேஷத்வம், அதைக்குறிப்பாக காப்பது தான் கடமை உயிர்களுக்கு. **இதனை முக்கியமாகக் கொண்டே, ஆழ்வார்கள் தாங்கள் நாயிகாபாவத்தை அடைந்து நாயகனான எம்பெருமானை, காதலுக்கு விஷயமாக்கி பாசுரங்களைப்பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.** எம்பெருமானுக்கும் இவர்களின் இப்பேச்சுக்களில் உகப்பு அதிகம். ஆகையினால், **பகவானுக்கு நாயகியின் பேச்சில்லாத வேதத்திற்காட்டிலும் நாயகியின் பேச்சுக்களுள்ள திவ்யப்ரபந்தங்களில் ஆசைமிக உண்டாம். ஆகையாலே தன் உத்ஸவங்களில் இதை முன்னே ஓதுவிக்கிறான்.** வேதம் பின்னே தள்ளப்படுகிறது. ஆக பர்த்ரு-பார்யா ஸம்பந்தத்தை மற்ற எட்டு ஸம்பந்தங்களைக்காட்டிலும் மிகவும் உயர்ந்ததாக பெரியோர்கள் பணித்துள்ளனர்.

**“கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாம் உத்தமையுடைய அவஸ்தை வரக்கடவதாயிருக்கும்.”**

அதாவது கந்தல் என்று சொல்லப்படுகிற இந்த உடல் இனிமேல் மறுபிறவியில் இல்லை என்கிற மோக்ஷம் உண்டாயிற்றென்றால் பிராட்டியின் தன்மையை அடைந்ததாகவே கருதப்படும் என்று சொல்லப்படுகிறபடியாலே, பிராட்டிமாரிலும் இன்று வந்த முக்தனிடம் எம்பெருமானுக்கு, அன்பு பெருகிச்செல்லுமாம். இங்கு ஒரு சுவையான விஷயம் காணீர். **பர்த்தா ஜ்ஞேயோ-ரமாபதி:** என்கிற வாக்கியங்களால் பர்த்தா என்பதனால் பர்த்ரு பார்யா ஸம்பந்தமும் ஜ்ஞேய: என்பதனால் ஜ்ஞாத்ரு-ஜ்ஞேய ஸம்பந்தமும் சொல்லி மேலே ரமாபதி: என்பதனால் பிராட்டிக்கு பதியாக இருப்பவன் இந்த ஸம்பந்தங்களுக்குரியவனாகிறான் என்பதற்காக நடுவில் வந்துள்ளது. அப்படிக்கொள்ளுவதுடன் மற்றோர் வகையில் பொருள் கொள்ளலாம், அதாவது இந்த ஜீவனுக்கு ஸர்வேச்வரனை பர்த்தாவாக அறியத்தக்கது என்போலவென்றால் எம்பெருமான் எப்படி ரமாபதியாக இருக்கிறானோ அதுபோலவே முக்தாத்மாவின் சேர்க்கையினால் மாப்பிள்ளையாகிறான். அது தோன்றவே அழகியமணவாளன் என்கிற திருநாமத்தை ஸ்ரீரங்கநாதன் பெற்றிருக்கிறான். ஒவ்வொரு ஜீவாத்ம லாபத்திலும் புதுமாப்பிள்ளையாகத்திகழ்கின்றான் அழகியமணவாளன் என்னத்தகும். இதனால் பர்த்ரு-பார்யா ஸம்பந்தம் விசேஷமானது.

### 5. ஜ்ஞாத்ரு-ஜ்ஞேய ஸம்பந்தம்

இனி ஐந்தாவது ஜ்ஞாத்ரு-ஜ்ஞேய ஸம்பந்தமாகும். இது திருமந்திரத்தில் மகாரார்த்தத்தால் தெரிவிக்கப்படுகிறது. மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய் ஜ்ஞான வாசியுமாயிருக்கையாலே ஆத்மாவைச் சொல்லுகிறது என்று ‘மன ஜ்ஞாநே’ என்கிற வினைச்சொல்லின் பொருளாகையால் அறிவுடையவன் என்பது இந்த ஜீவனுக்கு லக்ஷணமாகிறது. அறிவு என்பது எதையாவது பற்றியே தான் இருக்கும். அதாவது அறியப்படுவது எது என்றால் உலகத்தில் பற்பல வஸ்துக்களையும் அறிவுக்கு விஷயமாகக்

கொள்ளுவது இயல்பே. அது பயனற்றது. ஆத்மா அறிவைப்படைத்திருப்பது ஸ்ரீமந் நாராயணனை அறிந்து கொள்ளவேயாம். **“ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு”** என்பதனால் மற்றவற்றுக்கு உபயோகப்படும் உணர்வு ‘உணர்வு’ என்கிற சொல்லுக்கே அருகதையில்லாதது என்பது ஆன்றோர் கொள்கை. இதனைக் குலசேகரப் பெருமாள் தம் திருமொழியில் ஐந்தாம் பதிகத்தில் ஆறாவது பாட்டில் அருளிச் செய்கிறார்;

**செந்தழலே வந்து அழலைச் செய்திடினும் செங்கமலம்**
**அந்தரம் சேர் வெங்கதிரோற்கல்லால் அலராவால்**
**வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டம்மா உன்**
**அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே.**

இப்பாட்டிலே தாமரையைச் சொன்னது இங்கு மாநஸ பத்மம் எனக்கொள்ளத்தகும். என்னெஞ்சாகிய தாமரை சூரியனைப் போன்றவனான ஸ்ரீமந்நாராயணனை அறியத்தான் உரியதாகிறது. அப்போதுதான் அலர்ந்து அழகும் மணமும் பெறுகிறது. இதர விஷயங்களில் செல்லும் அறிவு விகாஸத்தை உடையதாகச் சொல்லமுடியாது; அவைகள் அழியுந்தன்மையதாகையாலே அவைகளைப் பற்றிய அறிவும் அழியக்கூடியதே; எம்பெருமான் எந்நாளும் அழிவற்றவனாகையாலேயும் ஸகல கல்யாண குணங்களை நிறைத்துக் கொண்டவனாகையாலே. அவைகளை எப்போதும் அறிவுக்கு விஷயமாகக் கொண்டு குணானுபவம் பண்ணிக்கொண்டிருக்கத் தகும் என்பதை, **“உன் அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே”** என்று நிரூபித்திருக்கிறது இங்கு. இதனால் கீழ்ச் சொல்லப்பட்ட பர்த்ரு-பார்யா ஸம்பந்தத்தின் முக்கியமான, மற்றொரு, தெய்வம் தொழாமைக்கு எது அவசியமென்றால் தன் பர்த்தாவின் குணங்களையே எப்போதும் நினைந்துநைந்துருகியிருப்பது என்பதே அவசியமாகிறாப்போலே பகவத் குணங்களையே தன் அறிவுக்கு விஷயமாக்கிக் கொண்டிருக்கை. இதற்கு மேற்பட்ட ஆனந்தம் கிடையாது. **“நின் புகழில்வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு வைகுந்த மென்றருளும் வான்”** என்று இங்கு நின்றவா நில்லா நெஞ்சு என்கிற சஞ்சலமான மனத்துக்கு பகவத் விஷயமான அறிவு உணவாகக் கிடைத்தபின் வைகுண்ட வாஸமும் வேண்டேன் என்கிறவளவு பரமானந்தம் உண்டாய்விடுகிறது என்பது ஸாரார்த்தம்.

### 6. ஸ்வ-ஸ்வாமி பாவரூப ஸம்பந்தம்

இனி ஆறாவதான ஸ்வ-ஸ்வாமி பாவரூப ஸம்பந்தம். இது திருமந்திரத்தில் மத்திம பதமான நம: என்பதின் பொருளாக அமைந்துள்ளது; ம: என்றால் ‘எனக்கு’ என்று பொருள். ந, என்று அஃதில்லை என்கிறது.

கீழே சொல்லப்பட்ட மகாரத்தாலே சொல்லப்படும் ஜீவன் சொல்லிக்கொள்ளும் படியிது. “எனக்கும் பிறர்க்கும் உரியதல்ல; எம்பெருமானுக்கே சேஷம்” என்கிறதை ‘நம:’

என்கிற பதத்தால் எனக்கு ஸ்வாமி எம்பெருமான்தான் என்பதால் நிலை நாட்டித்தருகிறது. இது உகாரத்தின் விரிவு. இதனை பெருமாள் திருமொழியிலே ஐந்தாம் பதிகத்தில் எட்டாவது பாட்டிலே காட்டியிருக்கிறார்.

**தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே**
**புக்கன்றிப் புறம்நிற்கமாட்டாத மற்றவை போல்**
**மிக்கிலங்கு முகில் நிறத்தாய் வித்துவக் கோட்டம்மா உன்**
**புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே.**

இங்கு ஆறுகள் "நதீநாம் ஸாகரோ கதி:" என்று கடலிலே சேருவதே தனக்குப் பெருமையாகவும் கடலை ஸ்வாமி என்றும் நதிகளை ஸ்வம் என்றும் சொல்லத்தகும். எஜமானனைச் சேர்ந்துதானே அவனுடைய பொருள்கள் பெருமையை அடைய முடியும். இங்கே புண்ணியனே என்பது குறிக்கொள்ளத்தக்கது: எம்பெருமான் புண்ணியன் என்றால் புண்ணியத்தின் பலனாகவே ஒருவன் ஸ்வாமியாவது, புண்ணியங்களுக்கெல்லாம் புண்ணியன் எம்பெருமான் ஸர்வஸ்வாமியாகிறான், மற்ற தேவதைகளெல்லாம் இவனை அடைந்து தாங்கள் பெருமையடையத்தக்கதாகின்றன. "ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்" என்கிறபடி ஸ்வ-ஸ்வாமி பாவரூப ஸம்பந்தம் விசேஷமானது, இதனை **"அகில ஜகத்ஸ்வாமிந்! அஸ்மத் ஸ்வாமிந்!"** என்று கத்யத்ரயத்தில் எம்பெருமானார் அருளிச்செய்திருக்கிறார். ஊர்ப்பொதுவான ஸம்பந்தம் மாத்திரம் போருமோ "எனக்கே ஸ்வாமி" என்று தன்னிடம் இருக்கும் ஸ்வம் என்கிற தன்மையை தானேயிசைந்தமைக்கு வாசகமாக "அஸ்மத் ஸ்வாமின்" என்கிறதும் அவசியமாகும். **"யான் எனதென்றும் அபிமானம் தவிர்ந்திருப்பார்க்கு இது போலில்லை மாதவமே"** என்றும் **"நீர்நும தென்றிவை வேர்முதல் மாய்த்து"** என்றும் அஹங்கார மமகாரங்களை அறவே ஒழிக்க வேண்டியதின் அவசியத்துக்கு இந்த ஸ்வ-ஸ்வாமி பாவ ஸம்பந்தமே முதல்படியாகும். பாகவத சேஷத்வம். அதாவது எம்பெருமானடியார்க்கு அடிமையாக இருத்தல் எல்லை நிலம். **"அடியார் அடியார்தம் அடியார் அடியார்தமக்கு அடியார் அடியார்தம் அடியார் அடியோங்களே"** என்கிற ஆழ்வார் பாசுரத்துக்கடி இந்த நமச்சப்தார்த்தமேயாகும். **"எந்தம்மை விற்கவும் பெறுவார்களே"** என்பது ஸ்வம்மாந சேதனர்களின் பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்குப் பாங்கானது இது.

### 7. ஆதார ஆதேய பாவரூப ஸம்பந்தம்

இனி ஏழாவது ஆதார ஆதேய பாவரூப ஸம்பந்தம். இது திருமந்திரத்தில் மூன்றாவது பதமான 'நாராயண' என்கிற சொல்லிலிருந்து கிடைப்பது. நாரங்களில் ஜீவாத்மாக்களின் கூட்டங்களும் சேர்ந்ததுதான். அதாவது 'ரிங்க்ஷயே' என்கிற (தாது) வினையின் பொருள் கொண்ட 'ர' என்னும் அக்ஷரம் அழியும் தன்மையைச் சொல்லி அது இல்லாதது என்று நித்யமான வஸ்துக்களைச் சொல்லும் நார சப்தம், இந்த அழிவில்லாத ஜீவன் எதிலே நிலைத்து நிற்கிறது என்றால் ஸ்ரீமந்நாராயணனிடமே. அவன்தான் நாரங்களுக்கு அயனம் - இருப்பிடம் என்கிறது.

பகவான் எங்கும் நிறைந்திருப்பதே இவைகளுக்கு ஆதாரமாக இருப்பதற்காகவே. தாயினும் அன்பனாகையாலே இவைகளைப் பிரிந்திருக்க மாட்டாதே மடியிலே வைத்துக் கொண்டிருக்கும் தாயாகிறான். உறங்குகிற ப்ரஜையை தாய் முதுகிலே அணைத்துக் கொண்டு கிடக்குமாப் போலே இவர்கள் தங்களையும் ஈச்வரனையும் மறந்திருக்கும் போதும் தான் இவர்களை விடாதே இருக்குமிருப்பு. இதனை பெருமாள் திருமொழியில் ஐந்தாவது பதிகத்தில் ஐந்தாவது பாட்டில் காணலாம்.

**வெங்கட்டிண் களிறடர்த்தாய் வித்துவக் கோட்டம்மானே**
**எங்குப் போயுய்கேன் உன்னிணையடியே அடையலல்லால்**
**எங்கும் போய்க்கரை காணாது எறி கடல்வாய் மீண்டேயும்**
**வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே !**

இங்கு ஒரு பறவையை ஜீவாத்மாவுக்கு உவமையாகக் கூறியிருத்தல் வேதாந்த வழக்காலே. இரண்டு பறவைகள் ஒரு மரத்திலே வந்து தங்கியதாம். அதில் ஒன்று அம்மரத்தில் உள்ள பழங்களைப் புசித்தும் இளைத்துப்போகுமாம். மற்றொன்று அப்பழங்களை விரும்பாமல் உண்ணாமலே இருந்தும் வாட்டமின்றியும் ஒளியுள்ளதாயும் விளங்குகின்றது என்று. இதில் கரும பலனை அனுபவிக்கவே ஜீவன் உடலில் புகுத்தப்படுகிறான். அவனுக்கு ஆதார பூதனாக இருப்பதால் இவனை விடாதே பின் தொடர்ந்து ஈச்வரனும் இவ்வுடலிலே புகுந்து கரும பலனாகிற பழத்தைப் புசியான். ஆகையாலே மழுங்காத ஞானச்சுடருடன் எப்போதும் போலவே ப்ரகாசிக்கிறான் என்பது பொருள். ஆகையாலே இங்கு பறவை ஜீவன். ஆதாரம் கடலில் செல்லும் கப்பல் போன்றவன் பரமாத்மா. ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் சிக்கிய நம்போன்றவர்களைக் கரை சேர்ப்பதற்காகப் பரமாத்வாகிற கப்பல் புறப்படுகிறது. அதின் உச்சியில் பறவை போன்று ஜீவன் அதிலே சேர்ந்திருக்கிறது; நடுக்கடல் சேர்ந்த பின் அந்தக் கொம்பை விட்டு பறந்து. எங்குச் சென்றாலும் கரையே காணாது அலமந்து திரும்பவும் அந்த கப்பல் கொம்பையே வந்து அடைவதைத் தவிர வேறு ஆதாரம் உண்டோ ?

**"துன்பக் கடல்புக்கு வைகுந்தனென்பதோர் தோணி பெறாதுழல்கின்றேன்"** என்னும் **'விஷ்ணு போதம்'** என்கிற விசேஷ வசனத்தால் இக்கரைக்கும் அக்கரைக்கும் இடைவிடாது சேர்ந்திருக்கிறது இந்தக் கப்பல். விஷ்ணு என்றால் இடம் கொண்டதன்றோ; உலகில் உள்ள கப்பல்களைப் போலே கடலில் ஆபத்துக்குள்ளாகி அமிழ்ந்து போமதன்று, அபாயமில்லாத விஷ்ணுவாகிய கப்பல். இதை ஆதாரமாகப் பற்றியவர்களுக்கு நிர்ப்பயமாய் கரை சேரத்தக்க ஸாதநம், ஸர்வாதாரபூதனானவனே. இந்த ஸம்பந்தத்தை உணர்ந்தால் **"நாராயணனே நமக்கே பறை தருவான்"** என்று ஆண்டாள் அறுதியிட்டபடி நமக்கு கைங்கர்யமாகிற ஸாம்ராஜ்யத்தை அளிக்கும் என்பதை உணர்த்துகிறது 'நாராயண' பதம்.

### 8. ஆத்மா ஆத்மீய ரூப ஸம்பந்தம்

இனி ஆத்மா ஆத்மீய ரூப ஸம்பந்தம் வருமாறு:- இதுவும் நாராயண என்கிற சொல்லிலிருந்தே தேறுகின்றது. எப்படி என்றால் நாரங்களை அயனமாக உடையவன்

என்கிற பொருளுடையதாகக் கொண்டால், நாரங்களாகிற ஜீவாத்மாவினுள் புகுந்து அவைகள் எங்குச் சென்றாலும் தானும் கூடவே செல்லும் தன்மையனாய் இவர்கள் எங்கு அவனைக்காண வேணுமென்று கூப்பிட்டாலும் அங்கெல்லாம் முகங்காட்டி பதில் சொல்லிப் போரும் ஸௌலப்யத்தை நிலை நாட்டுகிறது. ஆகாசம் எங்கும் நிறைந்து எல்லாப் பொருளும் தன்னிடம் இருக்கப் பெற்றாலும் அனைவரையும் நியமிக்க சக்தியுடையதன்று. ஈச்வரன் உள்ளே நின்று எல்லாவற்றையும் இயக்கும் தன்மையனாகிற பெருமையே இங்கு விசேஷித்துச் சொல்லப்படுகிறது.

கீழ் ஆதாரமாகிற தன்மையால் பரத்வம், இங்கு ஆதேயம் என்கிற மாறாட்டத்தால், ஜீவன் ஆதாரம் என்கிற நிலைமை உண்டாகாது. உடலிலே ஜீவாத்மா இருக்கிறான் என்றால் உடல் ஆதாரமல்ல. உள்ளிருக்கும் ஜீவாத்மாவே ஆதார பூதன்: உயிர் பிரிந்தபோது உடல் சாய்ந்து விடுகிறபடியாலே உயிரே ஆதாரம் என்பதை அறிகிறோம். அது போலவே நாரமென்கிற ஜீவனிடத்தில் அயனம் என்கிற தன்மை, ஆதாரம் என்கிற பொருளில் பொருந்தாது. ஆகையால் அவைகளை உள்ளிருந்து இயக்குமவன் எம்பெருமான் என்கிற பொருளே இங்கு கொள்ளத்தகும். இது தான் ஆத்மா என்கிற லக்ஷணத்துக்குரியதாகிறது. இதனை குலசேகரப் பெருமாள் தம் திருமொழியில் ஐந்தாம் பதிகத்தில் ஏழாவது பாட்டில் காட்டுகிறார்.

**எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்**
**மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்**
**மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டம்மா என்**
**சித்த மிக உன்பாலே வைப்பனடியேனே**

என்று. இங்கு **மெய்த்துயர் வீட்டாவிடினும்** என்பது குறிக்கொள்ள உரியது, மெய் என்றால் உடல். அதின் துயரை உயிரே போக்க வேணும். அப்படிப்போக்காமலிருந்தாலும் உயிரைவிட்டு உடல் எங்கே போக முடியும், என் சித்தம் மிக உன்பாலே வைப்பன். உயிரிலே ஜாக்கிரதையாய் இருக்கும் உலகினரைப்போலே என்னுடைய நெஞ்சை உயிராகிய உன்னிடமே எப்போதும் வைப்பேன். அதற்கு உன்னைத் தேடிப்போக வேணுமோ ? **“உடல்மிசை உயிரெனக்கரந்து எங்கும் பரந்துளன்”** என்கிறபடியே எனக்கு ஆத்மாவாயிருப்பதுபோலே ஸகலசராசர வஸ்துக்களிலும் நீ மறைந்திருக்கிறவற்றை முதலிலே சாஸ்திரத்தாலே கண்டு பின்பு உன் அருளாலே **“காண்பன் அவன் கண்களாலே”** என்றும் **“என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேல் காணும் உணர்ந்து”** என்று அகக்கண்ணால் கண்டு எங்குமுளன் கண்ணன் என்று சொன்ன ப்ரஹ்லாதாழ்வானைப் போல காணக்கடவேன் என்னும் ஸம்பந்த விசேஷம் ஸர்வாத்ம பாவம் என்கிற விஷ்ணு தத்வத்துக்கு உள்ளது. இதுவே அந்தர்யாமித்வம் என்று பேசப்படுகிறது.

இப்படி அவனையே ஆத்மா என்றும் தங்களை அவனுக்கு உடல் என்றும் ஜ்ஞாநிகள் உறுதி பூண்டிருப்பதுதான் தத்வம். எம்பெருமான் திருவுள்ளம் இதற்கு

நேர்மாறாக உள்ளது. அதாவது கீதையில் **ஜ்ஞாநீ து ஆத்மைவமே மதம்** என்கிறான் கண்ணன். அதாவது என்னிடம் வந்து அல்பமாயும் அஸ்திரமாயும் உள்ள ஐச்வரிய கைவல்யங்களைக்கேட்டு பெற்றுக்கொண்டு என்னை விட்டுப்போமவர்களைப் போலல்லாமல் என்னையே வேணுமென்று மிக விரும்பும், நான் இல்லையானால் உயிர்வாழமாட்டாத மஹாத்மா என்கிறவர்கள் தான் எனக்கு ஆத்மா. நான் எல்லாருக்கும் ஸாதாரண ஆத்மா என்று வேத நூலோதுகின்றது உண்மைதான். என் மதம் ஞானிகளே எனக்கு தாரகர்களாகையாலே அவர்கள் எனக்காத்மாவாகிய மஹாத்மா, **ஸ மஹாத்மா ஸுதுர்லப:** (எனக்கு அப்படிப்பட்டவர்கள் கிடைப்பது மிகவும் அரிதாய் இருக்கிறது) என்று வருந்துகிறேன். அக்குறை தீர **உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாங்கண்ணன்** என்னும் உறுதிப்பாட்டுடன் நம்மாழ்வார் தோன்றினார். அவர் **கண்கள் சிவந்து** என்று தொடங்கி **ஒருவன் அடியேனுள்ளானே** என்று தனக்குள் அந்தராத்மாவாக இருக்கிற எம்பெருமானைப்பேசினாப் போலே **அறிவாருயிரானாய்** என்று அவனுக்கும் அந்தராத்மாவாக அவனை உள்ளபடியறிந்த ஞானிகளை ஆழ்வாரே அருளிச்செய்திருக்கிறார். இது எம்பெருமானுடைய ஸௌசீல்ய குணாதிசய விளக்கம். அதாவது பெரியவன் சிறியவனோடு புரையறக்கலக்கை என்கிற மஹா குணம், இதை பக்தர்கள் கொண்டாடும்படி அமைந்துள்ளது.

### 9. போக்த்ரு போக்ய பாவ ரூப ஸம்பந்தம்

இனி போக்த்ரு போக்ய பாவ ரூப ஸம்பந்தம். அதாவது போக்தா - என்றால் உண்பவன். போக்யம் - என்றால் எது உண்ணப்படுகின்றதோ அது. அதாவது சோறு போக்யம். உண்பவன் போக்தா என்று அறிந்ததே. இங்கு உண்ணப்படும் பொருள் ஜீவாத்மா. உண்பவன் ஸ்ரீமந் நாராயணன். சாஸ்திரங்களில் ஒரு பக்கம் ஜீவாத்மாவை போக்தா என்றும் (உண்பவன் என்றும்) பகவானை உண்ணப்படும் பொருளாகவும் பேசபட்டிருக்கிறது. அதற்கு மாறுபட்டு இங்கு சொல்லுவதின் தத்துவம் என்னவென்றால் பகவானைக்கிட்டி அனுபவிக்கை என்பது எதை ? அவனுடைய கல்யாண குணங்களை. அவைகள் பகவானிடமிருப்பதாலே கொள்ளமாளா இன்ப வெள்ளமாகிற அதை ஜீவாத்மா உண்ணுகிறான் என்னலாம். அவ்விடத்திலே **அஹமன்னம்** என்கிற வசனப்படி இந்த ஜீவாத்மாவை அடைந்த ஆனந்தம் பரமாத்மாவிடம் உள்ளது தானே. அதின் அளவு அவ்வளவு பெரியவனோ அவ்வளவு இருக்குமல்லவா ? அவன் மஹா விஷ்ணுவாயிற்றே ? எங்கும் வ்யாபித்த ஸ்வரூபமல்லவா, அதற்குத்தக்கபடி போக்தாவின் ஆனந்தம் இருக்குமே, போக்யம் ஸ்வரூபத்தால் சிறியதாயிற்றே அதின் அவா அதாவது பகவானை அனுபவிக்க வேணும் என்கிற ஆசை. அது இவ்வளவுதானே இருக்கும். இவன் அனுபவிக்கும் பகவானோ அறப்பெரியவன். போக்தா சிறியவன். பகவானோ மிகப்பெரியவன். அவன் அனுபவிப்பதும் உண்பதும் சிறியதேயானாலும் இவன் அவாவைக்கண்டு வயிறு நிறைந்தவனாக ஆய்விடுகிறான். பக்தர்களின் ஆசையைத்

தனக்கு அன்னமாகக் கொண்டு களிக்கிறான் அவன். அதுதானே பெரிது. ஆகவே இவன் அவா இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது.

இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் முடிவிலே **சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த** என்கிற பாசுரத்திலே அருளிச்செய்கிறார். அதாவது மூலப்ரக்ருதியைக் காட்டிலும் பெரியதாய் இருக்கும் ஜீவாத்மாவின் ஞானத்தைக் காட்டிலும் பெரியதாய் பரமாத்மாவிலும் பெரியதாய் உள்ளது என்னுடைய ஆசை என்று சொல்லி எதிர்த்தலையில் எம்பெருமானுடைய ஆசை எப்படிப்பட்டது என்று பார்க்கும்போது, மேருமலையின் உச்சியிலிருந்து கொண்டு கீழே கிடக்கும் கடுகைக் கண்டு எடுக்க முடியுமோ ? இருந்தாலும் இல்லை என்னவேண்டியதாகவன்றோ இருக்கும். அப்படி **என் அவா அற நீ சூழ்ந்தாயே** என்கிறார். இதனால் போக்தா-யார், எம்பெருமான்தானே. இதை ஆழ்வார் ஒரிடம் ஸாதிக்கிறார்;

**வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று**
**ஆர்வுற்ற என்னை யொழிய என்னில் முன்னம்**
**பாரித்து தான் என்னை முற்றப் பருகினான்**
**காரொக்கும் காட்கரையப்பன் கடியனே**

என்று. இங்கே காரொக்கும் என்கிற உவமையாலே மேகம் கடலைப் பருகுமாப்போலே என்னைப் பருகினான் என்றார். இதனால் போக்தா எம்பெருமானே என்பது திண்ணம். இதனால் ஜீவாத்மாவுக்கு பரமாத்ம லாபம் என்பதிலும் பரமாத்மாவுக்கு ஜீவாத்ம லாபம் என்பதே மிகவும் பெரியது. அதற்காகவே அவன் **"எதிர் சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே யருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்"** என்று ஸமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். நாம் இந்த ஸம்பந்தத்தை உணர்ந்தால் ஸகல சாஸ்த்ர ஸாரார்த்தங்களையும் அறிந்தவர்களாவோம். இது திருமந்திரத்தில் "நாராயணாய" என்கிற பதத்தில் முடிவாக உள்ள சதுர்த்தீ விபக்தி - அதாவது நான்காம் வேற்றுமையினால் உணர்த்தப்படுகின்றதாம். நாராயணனின் பொருட்டே இந்த ஜீவாத்மா என்பது தானே அதின் பொருள். அவன் அனுபவிக்க உரியதே இது, என்று தெரிந்து இவனுக்கு என்ன லாபம் என்று கேட்டால் **"தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே எனக்கே கண்ணனையான் கொள் சிறப்பே"** என்று அவனுகப்புக்காகவே தன்னை அவனுக்கு என்று ஆக்கி அவன் உகப்பாலே தரும் கைங்கரியம் அடியேனுக்கு ரஸமாகையாலே அதனைத் தந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறது என்பதே சதுர்த்தியின் ஸாரார்த்தம். இதனை பெருமாள் திருமொழியில் 5-9ல் காணலாம்.

**நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்**
**தன்னையே தான் வேண்டும் செல்வம்போல், மாயத்தால்**
**மின்னையே சேர்திகிரி வித்துவக் கோட்டம்மா**
**நின்னையே தான்வேண்டி நிற்பனடியேனே**

என்கிற பாட்டில் பக்தர்கள் செல்வத்தை வெறுத்து பகவானையே போக்யமாக விரும்புவார்கள். அப்படிப்பட்டவர்களை செல்வம் மேல் விழுந்து தானே வந்தடையும்

என்பதால் இந்த பக்தர்களை போக்யமாகக் கருதி எம்பெருமான்தான் போக்தாவாகி இவர்களுடன் கூடியிருந்து குளிர்ந்து ஆனந்தமயனாக இருப்பான் என்கிறது இங்கு அதுவே செல்வம்.

ஆக இவ்வளவால் ஒன்பது விதமான ஸம்பந்தங்களை இன்னதென்று உணரும் போது **மிக்கவிறை நிலையும்** என்கிற பகவானுடைய தத்வங்களையும் **மெய்யாம் உயிர் நிலையும்** என்கிற ஜீவதத்துவத்தின் நிலைமைகளையும் **தக்கநெறியும்** என்கிற உபாயத்தையும் **தடையாகித் தொக்கியலும் ஊழ் வினையும்** என்கிற விரோதி ஸ்வரூபமாகிற ப்ரக்ருதி ப்ராக்ருதங்களும் பாபங்களும் ஆகியவற்றையும் அதனைப் போக்கிக் கொள்ள இவன் செய்யும் செயல்களையும் **வாழ்வு** என்கிற பலம் இன்னது என்பதையும் ஆங்காங்கே தெளியக் கடவதாக இருக்கிறபடியாலே அர்த்த பஞ்சகத்தின் நிலைமையையும் அறியப்பட்டதாகிறது.

★★★

## ஸ்ரீராமாயணத்தில் நவவித ஸம்பந்தங்கள்

ஸ்ரீராமாயணத்தில் இந்த நவவித ஸம்பந்தங்களையும் ஸ்ரீராம பக்தர்களின் அநுஷ்டான விசேஷத்திலே கண்டு கொள்ளலாம். அதாவது,

**1. பிதா-புத்ர ஸம்பந்தம்:-** இதனை (லக்ஷ்மணன்) இளையபெருமாள், செய்தருளியவதிலும், சொன்ன சொற்களிலும் காணலாம்.

ஸ்ரீராமபிரானை வனத்துக்கனுப்புவதற்கு இசைந்த தந்தையாகிய தசரத சக்ரவர்த்தியிடம் இளையபெருமாள், ''எனக்குத் தகப்பன் என்கிற உறவே வேண்டுவதில்லை; இனி ஸ்ரீராம பிரானே ப்ராதா, பர்த்தா மற்றுமுள்ள எல்லா உறவு முறையும் தகப்பனாரும் ஆவர்'' என்று துணிந்துரைத்தார். இவர் மேலும் **நீக்கமில்லா அடியார்** என்ற நம்மாழ்வார் அருளிச் செயலின் படியே பெருமாளைத் தொடர்ந்து அடிமை செய்தார். இதற்குப் பற்றாசாக இவரைப் பெற்ற தாயாகிய ஸுமித்ரையாரும் சொன்னாள்; ''அதாவது ஸ்ரீராமனையே தசரதனாகவும், ஸீதையையே தானாகவும் (தாயாகவும்), காட்டையே அயோத்தியாகவும் நினைத்துக்கொண்டு ஸ்ரீராமனைப் பின்தொடர்ந்து செல்வாயாக'' என்று. **''அன்பாவாய், ஆரமுதமாவாய், அடியேனுக்கின்பாவாய், எல்லாமும் நீயாவாய்''** என்கிறபடி பக்தியினால் எல்லாவுறவிலும் பிதாபுத்ர ஸம்பந்தம் இங்கு முக்கியம்.

**2. ரக்ஷ்ய-ரக்ஷக பாவரூப ஸம்பந்தம்:-** இதனை அயோத்தியில் வாழும் மாந்தர்களின் துணிவான பேச்சினால் உணரலாகும். அதாவது தசரத சக்ரவர்த்தி ஸ்ரீராம பிரானுக்கு பட்டங்கட்ட வேணுமென்று தான் நினைத்ததை ஊராரிடம் தெரிவித்து, அவர்களின்

இசைவைப்பெற வேணுமென்று, ஸபையில் கேழ்க்க, ஊரார், ''அரசனே! இப்பொழுதே என்ன அவசரம்! இன்னம் சில நாள் நீயே அரசாண்டு பின்பு ஸ்ரீராமனிடம் விடலாம்'' என்று உபசாரத்துக்காகிலும் ஒரு வார்த்தை சொல்லாமல், விமானம் குலுங்குவது போலே, தலை துலுக்கி பெரிய ஆரவாரத்துடன் ''ஸ்ரீராமனுக்கு இப்பொழுதே முடிசூட்டுவாயாக'' என்று கூச்சலிட்டார்கள். அதற்கு அரசன், ''நான் உங்களைப் படுகுலையடித்து, கொடுங்கோன்மையினால் துன்புறுத்தினேனா ? என் கையிலிருந்து தப்பினால் போதும் என்று சொல்லுகிற மாதிரியாக இருக்கிறதே! நான் செய்த குற்றமென்ன ?'' என்று கேழ்க்க, ''இப்படி ஸகல கல்யாணகுண பரிபூர்ணனான ஸ்ரீராமபிரானைப் பெற்றதே உன் குற்றம், எங்களை ரக்ஷிக்கத்தக்க குணங்கள் உன்னிலும் ஸ்ரீராம பிரானிடமே அமைந்துள்ளது. நாங்கள் அவனால் ரக்ஷிக்கப்பட வேண்டியவர்கள்'' என்று துணிந்து உரைத்தார்கள். ஆகையால் ஸர்வரக்ஷகத்வம் எம்பெருமானிடம் இருக்கும் என்பதை இங்கு காணலாம்.

**3. சேஷ-சேஷி பாவரூப ஸம்பந்தம்:-** இதனை பரதாழ்வான் பக்கலிலே நன்கு காணலாம். அதாவது ''ஸ்ரீராமபிரானும் வனம் சென்று, தசரதனும் துஞ்சி, இளைய பெருமாளும் ஸ்ரீராமனைப் பின் தொடர்ந்து போய், அயோத்தியில் அரசாள ஆளற்றுப்போயிற்றே, பிதாவின் ஆணைப்படி நீயே அரசாளக்கடவாய்'' என்று பரதாழ்வானைக் குறித்து வஸிஷ்டர் முதலான மந்திரிகளும் ஊராரும் சொல்லவே அப்பொழுது, ''அந்தோ! மூத்தவராகிய ஸ்ரீராம பிரானுக்கு இந்த ராஜ்யம் எப்படி (சேஷமோ) ஸொந்தமோ அப்படியே அடியேனும் சேஷம்; அப்படியிருக்க ராஜ்யத்தை ஆளுவது நானேயாக வேணுமா? ராஜ்யமே என்னை ஆளட்டுமே!'' என்று சேஷத்வத்தின் எல்லை நிலமான அசித்வத் பாரதந்த்ர்யத்தை பரதாழ்வான் வெளியிட்டார். அதின்படியே அசேதநமாய் பெருமாளுடைய பாதுகையாகிற ராஜ்யத்தில் ஒரு தாழ்ந்த வஸ்துவை ஸிம்ஹாஸநத்திலே ஏற்றி வைத்து, தான் ராஜ புருஷர்களில் ஒருவனாக இருந்து அரசாண்டார் பதி நாலாண்டுகள். இப்படிப்பட்ட பரதாழ்வான் போல்வாரை **'சயமேயடிமைத் தலைநின்றார்'** என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஸாதித்தார் இதனால் சேஷ சேஷி ரூப ஸம்பந்தம் நிலை நாட்டப்பட்டது.

**4. பர்த்ரு-பார்யா ரூப ஸம்பந்தம்:-** இதனை ஸீதாப்பிராட்டியின் வசனாநுஷ்டானங்களிலே காணலாம். அதாவது ''காட்டுக்கு நீ கூடவரத்தகாது'' என்று சொன்ன பர்த்தாவான ஸ்ரீராம பிரானிடம், ''பார்யையாகிய நான் உம்மை விட்டுப்பிரிந்து இருக்க முடியுமோ ?'' என்று பலவாறு வாதாடி பின்தொடர்ந்து சென்றாள். இந்த நிலைமையிலே அனைவரும் பகவானுக்கு பத்தினியாகவே இருப்பது உசிதம். அநந்யார்ஹ சேஷத்வம் என்கிற தன்மையே இங்கு நிலைநாட்டப்பட்டதாம். இளையபெருமாள், ''நானும் ஸீதையும் உம்மைவிட்டுப் பிரிந்தால் ஜீவிக்கமாட்டோம்; நீரிலிருந்து எடுத்த மீன் போன்றவர்கள்'' என்று சொல்லியபடியாலே அனைவரும் இந்த உறவுக்குரியவர்களே, என்பது முக்யம்.

**5. ஜ்ஞாத்ரு-ஜ்ஞேய ஸம்பந்தம்:-** இதனை விச்வாமித்ர மஹரிஷியின் வாக்கியத்தால் அறியலாம். ''என் யாகத்தைக் கெடுக்கும் ராக்ஷஸர்களை அழிப்பதற்கு ஸ்ரீராமபிரானை என்னுடன் அனுப்பவேணும்'' என்று தசரத சக்கரவர்த்தியிடம் விச்வாமித்ரர் கேட்டார். ''பதினாறு பிராயமும் நிரம்பப்பெறாத இராமனை அனுப்பமாட்டேன்'' என்று தசரதன் சொன்ன போது, ''இராமன் நீ நினைத்திருப்பது போலே சிறியவனல்லன்; இவனை அறப்பெரியவன் (மஹாத்மா) என்பதை நான் அறிவேன்; வசிஷ்டரும் தபஸ்விகளும் அறிவார்கள்'' என்று சொன்னார். இதனால் எம்பெருமானே அனைவருடைய அறிவுக்கும் அறியப்படுமவனாகவும் அதாவது ஜ்ஞேயன் என்றும் அறிகிறவனான ஜீவாத்மாவை ஜ்ஞாதா என்றும் அறியத்தக்கது என்பதைக் காணலாம்.

**6. ஸ்வ-ஸ்வாமி பாவரூப ஸம்பந்தம்:-** இதனை ஸ்ரீ விபீஷணாழ்வானுடைய வாசகத்தால் அறியத்தகும், அதாவது ''தமையனான ராவணனை ஸ்வாமியாக முன்பெல்லாம் நினைத்திருந்தேன். ஸீதாபஹாரமாகிற தீச்செயலைச் செய்தவனை விட்டொழித்தேன்; எனக்கு ஸ்வாமி நீரே'' என்று ஸ்ரீராமபிரானையே சரணமாக வந்தடைந்து, ''என்னை உம்முடைய சரக்காகக் கைக்கொண்டருள வேணும்'' என்று வேண்டிக்கொண்டார். இதனால் சரணாகதி பண்ணுமவர்கள் அனைவரும் எம்பெருமானுடைய ஸ்வம்; அதாவது கைப்பொருள். அவனே ஸர்வ ஸ்வாமி என்பதை உணரத்தக்கதாகிறது.

**7. ஆதார-ஆதேய பாவரூப ஸம்பந்தம்:-** இதனை திருவயோத்தியில் வாழும் சராசரங்களின் தன்மையினால் அறியப்படுகிறது. அதாவது பெருமாள் வனவாஸத்துக்கு புறப்படும்போது மரம், செடி, கொடிகளும் அதின் பூ, காய், கனிகளும் வாடிவிட்டது. குளம், ஆறு, குட்டைகளும் கொதித்து விட்டது. பெருமாள் வனத்திலிருந்து திரும்பும் போது காலமில்லாமலிருந்தும் பூத்துக்காய்த்து பழுத்துக் குலுங்கியதாம் அம்மரம் செடிகொடிகளெல்லாமும். இதனால் சராசரங்களனைத்துக்கும் ஆதார பூதன் எம்பெருமானே என்பதும் உலகமெல்லாம் ஆதேயம் அதாவது பகவானால் தரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிவிக்கிறது.

**8. ஆத்மா-ஆத்மீய பாவரூப ஸம்பந்தம்:-** இதனை திருவடி என்கிற ஹநூமானிடமிருந்து அறியலாம். அதாவது ஆத்மா - ஸ்ரீராம பிரான், உடல் - ஹநூமான், உடலினால் உயிருக்கு எவ்வளவு உபயோகம் உண்டோ அவ்வளவும் ஹநூமானால் பெருமாளுக்கு உண்டாக்கப்பட்டது. பிராட்டியைப் பிரிந்து வருந்தும் பெருமாள் அவளைத் தன் கண்ணால் காண ஆசைப்பட்டார். அது முடியாத போது இந்த ஹநூமானைத் தூதுவிட்டு இவர் கண்களால் கண்டதையே தன் கண்களால் கண்டதாக நினைத்தும் அவளைத் தழுவப்பெறாத குறையை இவளைக் கண்டுவந்த ஹநூமானைத் தழுவிக் கொள்ளுவதினாலும் ஓரளவு ஆற்றாமை தீரப் பெற்றார். திருவடி இராவணனுடன் யுத்தம் பண்ணும் போது பெருமாளைத் தன் தோளிலே ஏற்றிக்கொண்டிருந்ததும் ராவணனால் எய்யப்பட்ட அம்புகளினால் ஹநூமானுடைய உடல் புண்படுத்தப்பட்டபோது இராமபிரான்

மிகுந்த கோபத்தை அடைந்து இராவணனைத் தோற்கடித்து விரட்டியடித்தார். தன் மேல் அம்பெய்த போது, இப்படிப்பட்ட கோபத்தை அடைந்தாரில்லை. இதனால் இராமபிரான் தன் திருமேனியிலும் இவரை அருமையாக எண்ணியிருந்தமை விளங்குகின்றது. பரலோகம் போமவர்கள் உடலை இவ்வுலகிலே விட்டுப்போமாப்போலே திருவடியை, ''என் கூட பரமபதம் வாரும்!'' என்றழைத்த போது அவர் வரமறுக்கவே இங்கேயே விட்டுப்போனார் என்பதும் ஒரு பொருத்தம். ஆனால் ஹநூமான் தன் உடலில் பெருமாளையே நிறைத்துக்கொண்டிருப்பதாலே தன் உடலைவிட்டுப்போக இசையவில்லை, ஸஹ போஜனம் செய்தபடியாலே உடலும் உயிருமாய்ச் சொல்லுவது மிகப் பொருத்தம். இதுவே அனைத்துயிருக்கும் உயிராகிய பரமாத்மா ஸர்வேச்வரன் என்கிற உண்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

**9. போக்த்ரு-போக்ய ரூப ஸம்பந்தம்:-** இதனை ஸ்ரீசத்ருக்நாழ்வானிடம் காணலாம். அதாவது போக்தா (உண்பவன்) எம்பெருமான், போக்யமான உண்ணப்படும் பொருள் இங்கு சத்ருக்நாழ்வானும், அவரைப்போன்ற அனைத்துயிர்களும். ஸ்ரீராமபிரானிடம் பரமபக்தி கொண்டவர் பரதாழ்வான். அந்த பரதாழ்வானிடம் பரமபக்தி கொண்டவர் ஸ்ரீசத்ருக்நாழ்வான். இப்படி பாகவதர்களிடம் பக்தியுடன் அவர்களையே எல்லாமாக நினைத்திருக்குமவர்களை எம்பெருமான் தனக்கு போக்யர்களாகக் கொண்டு, உகந்து, மேல் விழுந்து அங்கீகரிப்பான் என்கிற தத்வார்த்தத்தை இங்கு காணலாயிருக்கிறது. **உற்றதும் உன்னடியார்க்கடிமை** என்கிற நிலையுண்டான பக்தர்களைத் தனக்குப் போக்கியமாகக் கொள்ளுவான். ஆகையாலே சத்ருக்நாழ்வான் நிலையே நமக்குரியதாக வேணும்.

இப்படிப்பட்ட சத்ருக்நாழ்வானுடைய நிலையை **கோதிலடியார்** என்று நம்மாழ்வார் அருளிச்செய்திருக்கிறார். நம்மாழ்வாரையே **தேவு மற்றறியேன்** என்று பற்றிய மதுரகவிகளிடம் காணலாகும். **அந்த மதுரகவிகளின் நிலையே நமக்கும் ஆகப்பெற்றோம் என்று ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்திருக்கிறார்.**

இப்படிப்பட்ட நவவித ஸம்பந்தங்களை ஸ்ரீராமாயண புருஷர்களின் அநுஷ்டான சேஷமாகக் காண்கையாலே, ஸகல சாஸ்த்ர ஸாரமான திருமந்திரத்தின் உட்பொருளான இந்த ஸம்பந்தங்கள் பக்தர்களின் நிலையாக நிலைநாட்டப்பட்டதாகும்.

குறிப்பு: ஸ்ரீஸூக்திரத்னாகரம் ஸ்வாமியின் இந்த ''நவவித ஸம்பந்தங்கள்'' என்ற பதிப்பு கோயில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் ஸ்வாமி மடத்தில் (ஸ்ரீரங்கத்தில்)அரங்கேற்றப்பட்டது.

★★★

# ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

## "தன்சரிதைச் சுருக்கம் - அடியேன் மதித்த ப்ரவசன கர்த்தாக்கள்"

*என்னும் தலைப்பின் கீழ் (தம்முடைய மாதப் பத்திரிகையில் ) பதிப்பித்தவை.*

**- ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யஸ்வாமி -**

ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்பெருமாள் ஸந்நிதிக்கு வந்துசேர்ந்த இந்த ஸ்வாமி அடியேனுக்கு ஸம்பந்தியாக வாய்ப்பதற்கு முன்னமே - நாற்பது வருடங்களுக்கு முன்னமே ஸஹோதரப்ராயர். கோயிலிலும் திருச்சியிலும் இவருடைய ஸ்ரீஸூக்திவர்ஷங்கள் நடைபெற்று வருகின்றன. இவர் ஸாதாரணமாக யோக க்ஷேம ஸமாசாரக் கடிதங்களெழுதினாலும் ஆசார்யஹ்ருதயமாகவே இருக்கும். அதையிட்டே இவர்க்கு **ஸ்ரீஸூக்திரத்நாகர** பிருது மிகப்பொருத்தமாக அமைந்தது. ஸமீபகாலத்தில் **திருப்பாவைக்கடல் மணி**யென்னும் விருதும் பெற்றிருக்கிறார். இவருடைய ஸ்ரீஸூக்தி ரசநாசைலியை உலகமறியவேணு மென்பதற்காகவே இவருடைய உபந்யாஸ வியாஸமொன்று இதில் சேர்க்கப்பட்டுள்ளது. அது மேலே காணலாகும்.

**- ஸ்ரீமான் ஆயுஷ்மாந் இளையவில்லி. பூவராஹன்** M.A. -

மேலே ப்ரஸ்தாவித்த ஸ்ரீஸூக்திரத்நாகர ஸ்வாமியின் மூத்த திருக்குமாரர் E.S. பூவராஹன் என்பவர். இவர் M.A. பட்டம் பெற்றவராதலால் ஆங்கிலத்தில் உத்தீர்ணரென்பது தெரிந்ததே. இளமையிலேயே ஸம்ஸ்க்ருதப் பயிற்சியும் நன்கு பெற்றிருந்தபடியால் அந்த ஞானத்தை க்ரமேண அபிவிருத்தி செய்துகொண்டு உபந்யாஸங்களும் உயர்ந்த ரீதியில் நடத்தி வருகிறார். பெங்களூர் காலேஜில் உபாத்யாய பதவியில் அமர்ந்திருக்கின்றவிவர் அவ்விடத்திலேயே ஸமயோசித ப்ரவசனங்களும் செய்து போருகின்றார். இவர்க்கு விருது **"ஸம்ப்ரதாய ஸுதாநிதி"**.

**- ஸ்ரீராமாநுஜன்** மாத இதழ் (256,257 - பக்கம் 80,81)

# ஸம்பந்த ஜ்ஞான ஸம்ப்ரம ஸம்மோதம்

***கீர்த்திமூர்த்தி 'ஸ்ரீஸூக்தி ரத்நாகரம்'***
***ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி***
*(ஸௌம்ய வருஷம் மீன விசாகத்தன்று காஞ்சீ மஹாவித்வான்*
*ஸ்ரீமதுபயவே. ப்ர.ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி திருமாளிகையில் உபந்யஸித்தது)*

*மணவாளமாமுனிகள் **"உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்"** என்று, பிரபன்ன ஜனகூடஸ்தராய்த் திகழ்ந்த நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருளிய திருவைகாசித் திருநன்னாளைக் கொண்டாடினார் உபதேசரத்தின மாலையில். அது தன்னிலேயே **"ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! ஏழ்பாருமுய்ய எதிராசருதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை"** என்று எம்பெருமானார் திருவவதாரத் திருநன்னாளைப்பற்றி அருளிச்செய்திருப்பதால் நமக்கு வாழ்வளிப்பதில் ஆழ்வார்களிலும் மாறனடி பணிந்துய்ந்தவராகிய எதிராகத் திருவவதாரநாளுக்குள்ள சிறப்பை நிலைநாட்டியதாகிறது. **இந்த வழியை அடியொற்றிப் பார்த்தால் யதீந்த்ராவதாரத்திலுங்காட்டில் யதீந்த்ர ப்ரவணராகிய மணவாளமாமுனிகள் திருவவதாரநன்னாள் நமக்கு வாழ்வளித்தலில் சிறப்புடையது என்பது "மணவாளமாமுனி வந்திலனேல் ஆற்றில்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே" என்கிற பெரியோர் திருவாக்கினாலே நன்கறியப்படும்.***

***அதேபோல நம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி இக்காலத்தில் "யதீந்த்ர ப்ரவண ப்ரவணர்" என்கிற வைபவத்துக்குரியவராய்த் திருவவதாரம் செய்தருளாதிருந்தால் உபயவேதாந்தங்களும் கடலில் கரைத்த கற்கண்டாய்விடும் என்பதை நாடு நகரமும் நன்கறிந்திருக்கிறது.** இப்படிப்பட்ட ஸ்வாமியினுடைய திருவவதாரத் திருநன்னாளை நாம்*

***"உண்டோ இம்மீனவிசாகத்துக்கு ஒப்பொருநாள்***
***உண்டோ நம்மண்ணங்கரார்யர்க்கொப்பொருவர்"***

*என்று கொண்டாடும் நெஞ்சுடையராய் கூடியாடி விழாச்செய்து கோத்துக் குழைத்துக் குணாலமாடித்திரிய வேண்டியது நமக்குப் பணியாகும்; ஸ்வரூபஸித்தியுமத்தாலேயாம்.*

*திருப்பாவையில் "செல்வச்சிறுமீர்காள்" என்னுமிடத்தில் கண்ணன் திருவவதரித்த ஸமகாலத்திலே பிறந்தும், ஆண்களாயும் வயதுசென்ற பெண்களாயும் அல்லாமல் ஒத்த பருவத்திற் பெண்களாகப்பெற்ற பாக்யவதிகாள்! என்று கொண்டாடினாப்போலே ஸ்வாமியுடன் ஸமகாலத்திலே பிறக்கப்பெற்றும் கண்ணன் காலத்திலே கம்ஸசிசுபாலாதிகளைப்போலே "அவஜாநந்தி மாம் மூடா:" என்று*

வெறுக்கத்தக்கவர்களாகப் பலர் இருந்தாப்போலே ஸ்வாமியுடன் எதிரம்பு கோத்து நீங்கும் விரதத்தை ஏறிட்டுக்கொண்ட கூட்டத்துடன் சேராதே **“அன்பாவாய் ஆரமுதமாவாய் அடியேனுக்கின்பாவாய் எல்லாமும் நீயாவாய்”** என்று உள் கலந்து **உலகங்கட்கெல்லாம் ஓருயிராகிய ஸ்வாமிக்குப்** பல்லாண்டு பாடுமவர்களாகப் பெற்றோமே! என்கிற பேற்றை நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன். இப்படிப்பட்ட ஸ்வாமியுடன் ஏதாவது ஒரு ஸம்பந்தம் நமக்கமைய வேணுமென்று பல நாளழைத்தேற்கு பொருத்தமுடைய ஸ்வாமியே தான் புகுந்து **×என்றன் கருத்தையுற வீற்றிருந்தான் கண்டுகொண்டே×** என்று **தானொட்டி வந்து** என்கிறபடி ஸௌஹார்த்த ப்ரஸாதத்தை ஒருமடை செய்து **“அஹம்வோ பாந்தவோ ஜாத:”** என்று கண்ணன் இடையர்களுக்கருளியதுபோல நம்முடன் உறவு கொண்டாடி **நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும் கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிராக்கவல்ல ஸ்வாமியுடன்** நமக்குள்ள உறவுமுறையை அறிந்து பேசுவது ரஸாவஹமானது. அதில் எம்பெருமானுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவு முறைகளில் முக்கியமாக நவவிதமான ஸம்பந்தங்கள் மூலமந்திரமாகிய திருவஷ்டாக்ஷரத்தின் வழியாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில்,

**(பிதா ச)** தகப்பனும் மகனுமான உறவும் ‘ச’ என்று தாயும் சேயுமான உறவும். **“என்னைப்பெற்ற அத்தாயாய் தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேனறியேனே”** என்று ஆழ்வார் அருளிச்செய்த உபகார ஸ்மிருதிக்காகவே அமைந்த திருவாய்மொழியில் என்னைப்பெற்ற தாயார் தகப்பன் என்கிறவளவிலே நில்லாமல் “அறியாதன அறிவித்த அத்தா” என்று அஜ்ஞாத ஜ்ஞாபன முகத்தாலே ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தத்தைத் தலைசிறந்த தஞ்சமாகிய தந்தை தாயாகக் கொள்ளப்பட்டிருப்பதைச் சேர எடுத்துக் காட்டியருளினபடியே இங்கும் நம் ஸ்வாமியிடம் நம்போலியர்க்கு ப்ரியபரதையினால் தாயாகவும் ஹித பரதையினால் தமப்பனாராகவும் பத்ரிகை பிரசுரங்கள் உபந்யாஸங்கள் வழியாக ஜ்ஞான ப்ரதாநத்தாலே ஆசார்யத்வமும் ஒருங்கே அமைந்திருப்பதை நாமறிய வேண்டியது அவசியம்.

அடுத்தது **(ரக்ஷக:)** ரக்ஷ்யரக்ஷகபாவமானது தன்கப்பிலே கிடக்கும்போது ஸ்வாமி ரக்ஷகர்; நாம் ரக்ஷ்யவர்க்கம். ரக்ஷகரான நம் ஸ்வாமி **இடுமேயினிய சுவர்க்கத்தில்...** என்கிற பாசுரப்படி சரணாகதர்களை விட்டுக்கொடாதே காத்தளிக்க வல்லவர். ப்ரேம தசையில் தட்டு மாறி நாம் ரக்ஷகரானால் ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாட வல்லோமாய் ஸ்வரூப லாபத்தைப் பெற்று வாழ்ந்து மகிழ்வெய்துவோம்.

**(சேஷி)** சேஷத்வம் நம்மிடமும், ஸ்வாமியிடம் சேஷித்வமும் ப்ரகாசிப்பது (ராஜ்யஞ் சாஹஞ்சராமஸ்ய) என்ற பரதாழ்வானைப்போலே நாமும் ஸ்வாமிக்கு சேஷமாக நம்மை அநுஸந்தித்தால் (ததோப்யஷிஞ்சத் பரதம் மஹாத்மா) என்று புவனி முழுதாளீரோ என்று நம்மையே உபய விபூதி நாதனாக்கிவைக்க வல்லவராகிறார். இதுக்கு மூலம்

*(விதயச்ச)* என்கிற பரமாசார்ய வசனமும் அதுக்கு மூலமான ×அது நமது விதி வகையே × என்கிற ஆழ்வார் திருவாக்குமே யாகும்;

***(பர்த்தா)*** ஸ்வாமி பர்த்தா நாம் பார்யை, இந்த உறவு அமைந்திருக்கு மழகு ஸ்வாரஸ்யம். ஸ்ரீவசந பூஷணத்தில் தினசர்யாப்ரகரணத்தில் **"சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாற்போலேயும்"** என்னுமதுக்குச் சேர ஸத்புத்திஸ்ஸாதுஸேவீ என்கிறபடியான பரிபூர்ண சிஷ்ய லக்ஷணம் நம்மிடமில்லாதிருந்தாலும் தோல்கன்றுக்கிரங்கும் தாய்ப்பசுவைப்போலே. **"இத்தனையடியரானார்க்கிரங்கும் நம் அரங்கனாய பித்தனை"** என்கிறபடியே புறமே புறமே யாடிய நம்மிடம் அபிமத விஷயத்தைப் போலே ஆதரம் பெருக வைத்தருள்வதைக் கண்டோமுக்கு இந்த உறவு ஸுஸ்பஷ்டம்.

***(ஜ்ஞேய:)*** ஆரறிவுபடைத்தவர்களாயின் ஸ்வாமியுடைய வைபவத்தை அறிந்து **"ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு"** என்கிறபடியே ஸ்வாமியை அறியாதார் அறியாதாரேயாய் அறிவிலிகளே யாவர். ஸ்வாமியுடைய குணங்களையே **"உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும்"** என்கிறபடி த்யேய விஷயமாக்கிக் கொள்ள வேணுமேயாம்.

***(ஸ்வாமீ)*** ஸ்வம் நாம் (ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்) என்பதுபோலே செயற்கரிய செய்பவராகிற பெருமையால் ப்ருஹத்த்வம் ஸ்வாமியிடமிருப்பதால் ஸ்வாமித்வம் இங்கும் விளங்கக் குறையில்லை. ஆகவே தான் **'ஸ்வாமி'** என்றே உலகில் ப்ரஸித்தமாய் விட்டது என்பது ஒன்றே யமையும்.

***(ஆதார:)*** எம்பெருமானார் தர்சனஸ்தர்களுக்கு ஸ்வாமியல்லது ஆதாரபூதர்களில்லை என்பதை பன்னியுரைக்குங்கால் பாரதமாம். பலர் அதையுணராதவன்றும் ஸ்வாமி விட்டுக்கொடாதே ஸத்தையை நோக்கித் தருமவராய் இருந்தது. (செறுவாரும் நட்பாகுவர்) என்பதை கட்கூடாக்கி வைக்குமழகு ஸர்வாதாரபூதனான ஈச்வரனிடமும் உண்டோ இல்லையோ இங்கே உஜ்ஜ்வலம்.

***(ஆத்மா)*** உயிர். உயிருக்கு உள்ளதாவது தன் உடலில் ஆசை. ஸ்வாமிக்கு உடல் தம் திருமேனி யல்ல. நம் போன்றவர்களைப் பேணுவதிலேயேயாசை. அதாவது **"ஆசார்யன் உஜ்ஜீவனத்திலே ஊன்றிப்போரும்"** என்கிறபடி நமக்காகத் திருமேனியை நோக்காதே அல்லும் பகலும் உழைத்து வளர்ப்பதால் சரீரி படும் பாட்டை ஸ்வாமியிடம் ஸுஸ்பஷ்டமாகக் காணலாம்.

***(போக்தா)*** ஸ்வாமி நம்மைத் தம்மைப் போலேயாக்கிப் பயிற்றிப் பணிசெய்யக் கொண்டு இந்தத் திருநக்ஷத்திர மஹோத்ஸவ வ்யாஜத்தாலே செஞ்சொற்களைப் பாடுவித்து இன்பம்பயக்க இருந்து வானவர் போக முண்பதேயாகும். ....

**ஸௌம்யமீன விசாகோபந்யாஸஸாரம் முற்றிற்று.**

# ஸ்ரீஸூக்திரத்நாகரம் இளையவில்லி ஸ்வாமியின் வாழித்திருநாம வைபவம்

***ஸம்ப்ரதாய ஸூதாநிதி ஸ்ரீ உ.வே. இளையவில்லி***
***ஸ்ரீநிவாஸ பூவராஹாசார்யர் ஸ்வாமி***

*ஆழ்வார் திருநகரி*

ஸ்ரீமந்நாதமுனிகள் காலம் தொடங்கி பெரிய பெருமாள் முதலானவர்களுக்கு வாழித்திருநாமம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். எம்பெருமானுக்கும் அவன் அடியார்களுக்கும் அவன் விபூதிக்கும் மங்களம் பாடுவதே இதன் நோக்கமாகும். எம்பெருமானாராலே நியமிக்கப்பட்ட 74 ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கு தனித்தனியே வாழித்திருநாமங்கள் உண்டு.

இவர்களுள் எழுபத்திரண்டாம் ஸிம்ஹாஸநாதிபதியும் ஸ்வாமி எம்பெருமானாருடைய சிறிய தாயாரின் புத்ரருமான இளையவில்லி ஆச்சானுடைய திருவம்சத்தைச் சேர்ந்தவர் அடியேனுடைய திருத்தகப்பனாரான ஸ்ரீ உ.வே. ஸ்ரீஸூக்திரத்நாகரம் இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி. இவருக்கும் மிக விலக்ஷணமான வாழித்திருநாமம் சிஷ்யர்களால் அனுஸந்திக்கப்பட்டு வருகிறது. அதை இயற்றி அருளியவர் தமிழிலும் வடமொழியிலும் நிகரற்ற புலமையுடையவரும் ஸம்ப்ரதாயத்தைக் கசடறக் கற்றவரான மஹாவித்வான் ஆழ்வார் திருநகரி நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீ உ.வே. ராமக்ருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி ஆவார். இவர் அடியேனுடைய திருத்தகப்பனாருக்கு இளமைப்பருவமே பிடித்து மிகவும் நெருங்கிய நண்பர். ‘‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’’ என்கிற பழமொழியின்படி இவர்கள் இருவரும் ஒருவர் ஒருவரிடம் பேரன்பு பூண்டு வாழ்ந்தவர்கள். இந்த நல்லான் சக்ரவர்த்தி ஸ்வாமி இயற்றிய வாழித்திருநாமம் அன்பிலே தோய்த்து எழுதப்பட்டது என்பதில் வியப்புண்டோ ! சொல்லும் பொருளும் தொகுத்துரைத்த ஸ்ரீ உ.வே. நல்லான் ஸ்வாமி திருவடித் தாமரைகளில் சென்னி சேர்த்துக் கரம் குவித்து தொழுது நிற்கிறேன். இனி இவ்வாழித்திருநாம வைபவத்தைப்பற்றி சிறிது வரைகிறேன்

**அதில் முதல் வரி:**

**“வானோங்கு யதுகிரியில் வந்துதித்தோன் வாழியே”**

ஸ்ரீஸ்வாமி அவதரித்தது ‘யதுகிரி’யென்று புராணத்தில் புகழப்படுகிற மேலக்கோட்டை திருநாராயணபுரமாகும். (இவருடைய வாழ்க்கை வரலாற்றினைக் கூறுகிற ஆங்கிலக் கட்டுரையை இம்மலரிலேயே காண்க.) விசேஷார்த்தங்களை மட்டிலும் காட்டுகிறேன். (வானோங்கு யதுகிரி) எம்பெருமானாராலே காட்டைத்திருத்தி நாடாக ஆக்கப்பட்டபடியால் இந்த யதுகிரி பரமபதத்தளவும் (வான் - பரமபதம்) உயர்ந்து நிற்கிறது. **“நீ அவர்க்கு வைகுந்தமென்று அருளும் வான்”** (பெரிய திருவந்தாதி-53) என்ற

பாசுரம் காண்க. எம்பெருமானார் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பரமபதம் ஏறக் கட்டிய படி போன்றது திருநாராயணபுரம். இப்படியில் காலை வைத்தால்தான் அவன் நீட்டிய திருவடியை படியாகக்கொண்டு அவன் மடியிலேறி அமரலாம். அத்தகைய கிரியிலே அவதரித்தார் நம் ஸ்வாமி. (வந்துதித்தோன்) பிறந்தார் என்று கூறாமல் உதித்தோன் என்று கூறியிருப்பது கொண்டு ஸ்வாமியும் ஒரு கதிரவனாக உருவகப்படுத்தப்படுகிறார். சூரியன் தங்கமலையின் மேருவின் உச்சியில் உதிக்கிறான். அம்மேருவுக்கு தங்கத்தினால் மட்டுமே பெருமை. அது அசித் பதார்த்தம். ஆனால் யதுகிரியோ பரமபதத்துக்குப் படியாய் கிடந்து பாகவதர்களுடையவும் திருநாராயணன், செல்வப்பிள்ளை, உடையவர் ஆகியவர்களுடையவும் பவளவாய் கண்டுகொண்டே இருக்கும் வீறுடைமை பெற்றதாக விளங்குகிறது. ஆதித்யனுக்குப் போகாத உள்ளிருள் நம் ஸ்வாமியின் அவதாரத்தால் நீங்கிற்று. ஆகவே மேருவிலுதிக்கும் சூரியனைக்காட்டிலும் யதுகிரியில் உதித்த சூரியன் ஏற்றமுடையவன் என்று காட்டினார் ஆயிற்று.

***2வது வரி:***

**"வருபொருநல் குருகைநகர் வாழ வந்தோன் வாழியே"**

பொருநல் என்று தாமிரபரணியைக் குறிக்கும் சொல். வருபொருநல் என்றால் வரக்கூடிய தீர்த்தத்தையுடைய பொருநல் என்று பொருள். அல்லது ஆழ்வார்திருநகரியில் இருக்கும் திருச்சங்கணித்துறைக்கு வரும் பொருநல் என்றும் பொருள் கொள்ளலாம். **"மண்ணாடின ஸஹ்ய ஜலம் தோதவத்திச் சங்கணி துறையிலே துகில்வண்ணத்தெண்ணீராய் அந்தஸ்தத்தைக் காட்டுமாபோலே..........."** என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படி பொதிகை மலையிலிருந்து புறப்பட்ட மண்ணுடன் கூடிய தாமிரபரணி திருச்சங்கணித்துறை வந்து சேர்ந்தவாறே தெளிவை அடைந்ததாம். அந்த நதியின் மிகச்சிறந்த கரையில் நம்மாழ்வார் அவதரித்தார். **பொருநல் சங்கணித்துறைவன்** என்றே தம்மை கூறிக்கொள்ளுகிறார். இந்த ஆழ்வாருடைய அவதாரத்தைப்பற்றி ஸ்ரீ பாகவதம் 11வது ஸ்கந்தத்தில் கூறப்படுகிறது. இதைப்பற்றி ஆசார்ய ஹ்ருதயத்தில் **"தமிழ் மாமுனி திக்கு சரண்யம் என்றவர்களாலே க்வசித் க்வசித்தென்று கலியும் கெடும்போலே இவர் ஆவிர்பாவம் ஸூசிதம்"** என்று அருளிச்செய்கிறார். அதாவது நம்மாழ்வார் வாழ்ந்திருந்த காலத்தில் திருவாய்மொழியை திருவாய் மலர்ந்தருளிய போது அதைப்பட்டோலை கொண்டவர் (ஓலையில் எழுதிக்கொண்டவர் ஸ்ரீமதுரகவிகள்). அதில் ஐந்தாம் பத்தில் இரண்டாம் திருவாய்மொழியில் முதல் பாசுரம் "பொலிக பொலிக..." என்று தொடங்குகிறது. அதில் "கலியும் கெடும்" என்று ஆழ்வார் அருளிச்செய்ய, "ஸ்வாமிந்! கலியின் கொடிய தன்மை எப்படி அதைவிட்டு அகலும்?" என்று சிஷ்யர் கேட்க, "திருமங்கையாழ்வாரும் உடையவரும் அவதரிக்கப்போகிறார்கள். அவர்களுடைய நல்உபதேசத்தாலே இந்த நன்மை விளையும்" என்று வெகுகாலத்துக்கு முன்பே நம்மாழ்வான் தெரிவித்தாற்போல இந்த நம்மாழ்வாருடைய அவதாரமும் அவர் அவதரிப்பதற்கு வெகுகாலம் முன்பாகவே

‘‘க்ருதாதிஷு நரா ராஜந் ............’’ என்று ரிஷிகளால் அறிவிக்கப்பட்டது. அதாவது க்ருதயுகத்தில் பக்தர்கள் சிலர் பகவானிடம், ‘‘எங்களுக்கு இப்பிறவியின் முடிவில் மோக்ஷம் வேண்டாம். நாங்கள் கலியுகத்தளவும் மாறி மாறி பலப்பிறப்புக்களும் பிறக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஏனெனில் கலியுகத்தில் உண்ணும்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்று இருக்கும் பரமபாகவதோத்தமர்கள் (ஆழ்வார்கள்) அவதரிக்கப்போகிறார்கள். அவர்களைச் சேவித்தபின் நாங்கள் பரமபதம் வருகிறோம். அவர்கள் அவதரிக்குமிடம் யாதெனில் தாமிரபரணி, வைகை, பாலாறு, காவேரி, பெண்ணையாறு ஆகிய நதிகளின் கரையிலுள்ள திவ்யக்ஷேத்ரங்களாம்’’ என்று பிரார்த்தித்தார்கள். இப்படிப் பிரார்த்திக்கும்போது முதன்முதலில் தாமிரபரணியின் பேரைக் கூறுகிறார்கள். ஆகவே நம்மாழ்வாரின் அவதாரம் முன்பே அறிவிக்கப்பட்டதொன்று. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பொருநல் நதிக்கரையில் அமைந்த அழகான ஊர் குருகூர்.

(குருகைநகர்) குருகாபுரி என்றும் ஸ்ரீ நகரி என்று இதற்குப்பெயர். **கு$_3$ரும் கரோதி இதி கு$_3$ருகா** என்னும் வடமொழி இலக்கணப்படி ‘‘கு$_3$ருகா’’ என்ற வடசொல்லே தமிழில் குருகையாயிற்று என்று கொண்டால் ஒரு ரஸமான பொருள் கிடைக்கிறது. ஆத்மா அணுவானது. அதை (ஈஶ்வரனைக்காட்டிலும்) மிகப்பெரியதாக ஆக்கும் ஆற்றல் வாய்ந்தது இந்த வண்குருகூர். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் ‘‘புவியும் இருவிசும்பும்’’ என்ற பாசுரத்தில் ‘‘யான் பெரியன், நீ பெரியை என்பதனை யார் அறிவார் ?’’ என்று எம்பெருமானை நோக்கிக் கேள்விக் கணையொன்றை ஏவுகிறார். ‘‘எம்பெருமானே ! நீ உபயவிபூதியையும் உன்னிடத்தில் கொண்டவன். அப்படிப்பட்ட நீ என் செவியின் வழியாக புகுந்து என்னுள்ளே நித்யவாஸம் பண்ணுகிறாய். ஆகையால் நானே பெரியவன். நீ பெரியவன் என்று யார் அறிவார் ? உன்னுடைய திருக்கையில் உறையும் திருவாழியையே கேட்டுப்பார்க்கலாமே.’’ இந்த ஒரு பாசுரத்தினால் ஆழ்வாருக்கு பெரியன் என்கிற திருநாமமும், எண்பத்தேழே பாசுரங்கள் கொண்ட திருவந்தாதிக்கு (மற்ற திருவந்தாதி பாசுரங்களைக் கணக்கிடும்போது) ‘பெரிய திருவந்தாதி’ என்கிற பெயரும் ஏற்பட்டது. இப்படி ஆழ்வாரையும் திருவந்தாதியையும் பெரியதாக (கு$_3$ருவாக) ஆக்கக்கூடியது கு$_3$ருகாபுரி. ஆழ்வார் பெரிய பிராட்டியாருக்குச் சமம் ஆனவராகையாலே ஸ்ரீநகரி என்றும் ஆழ்வாரை மஹான் ஆக்கினபடியாலே மஹாபுரி என்றும் பெயர் பெற்றது.

**ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்ரபர்ண்யுத்தரே தடே |**
**ஸ்ரீ திந்த்ரிணீ மூல தாம்நே ஶடகோபாய மங்களம் ||**

என்ற மங்கள ச்லோகம் காண்க. இவையெல்லாவற்றையும் திருவுள்ளத்திலே கொண்டு ஸ்ரீ உ.வே. நல்லான் ஸ்வாமி ‘‘வருபொருநல்குருகை நகர்’’ என்று அருளிச்செய்துள்ளார்.

(வாழ வந்தோன் வாழியே) இங்கு ஓர் அதிசயம் கேண்மின். ஆழ்வார் எப்படி திருமங்கையாழ்வார் உடையவர் ஆகிய இருவரின் அவதாரத்தைப்பற்றி முற்கூட்டியே அறிவித்தாரோ அதேபோலே நம் ஸ்வாமியின் அவதாரத்தையும் திருவாய்மொழியில்

ஸூசிப்பிக்கிறார் என்று கொள்ள இடம் உண்டு. திருவாய்மொழியில் நாலாம் பத்தில் முதல் திருவாய்மொழி (ஒரு நாயகமாய்) திருநாராயணபுரத்தைப்பற்றியது. அதேபத்தில் 10ம் திருவாய்மொழி ஆழ்வார்திருநகரியைப் பற்றினது. "ஒருநாயகமாய்" என்று தொடங்கி "ஒன்றும் தேவும்" என்று முடிக்கிறார். இதிலிருந்து திருநாரணன் தாள் சிந்தித்து உய்யும் ஒருவர் கு₃ரு ஆவதற்காக (வாழ) திருக்குருகூருக்கு வரப்போகிறார் என்று கொள்ள மிகுந்த பொருத்தம் உண்டு.

இந்த வாழித்திருநாமத்தில் "குருகைநகர் வாழவந்தோன்" என்பதன் பொருளை இரண்டு வகையாகக் கொள்ளலாம்:- 1. தாம் வாழ்வதற்காக நம் ஸ்வாமி குருகை நகருக்கு வந்து சேர்ந்தார். 2. குருகை நகர் அதாவது அந்நகரில் உள்ளோர் வாழ்வதற்கு வகை செய்வதற்காக நம்மாழ்வாரால் ப்ரார்த்திக்கப்பட்டு திருநாராயணபுரம் செல்வப்பிள்ளையும் உடையவரும் நம் ஸ்வாமியை அனுப்பிவைத்தார்கள். இந்த இரண்டாவது பொருளை உண்மையாக்கும் வகையில் நம் ஸ்வாமி ஆழ்வார்திருநகரிக்கு வந்தபின் ஓர் திவ்யப்ரபந்தபாடசாலையை அமைத்து அதில் திவ்யப்ரபந்தம், ஸ்தோத்ர பாடம், ஸம்ஸ்க்ருதம் ஆகியவற்றையெல்லாம் அநேகம் பேருக்குக் கற்பித்தார். அதனால் வாழ்ந்ததிந்த மண்.

**3வது வரி:**

**"ஆனிதனில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே"**

(ஆனிதனில் அவிட்டத்தில்) ஆனிமாதம் பலபடியான ஏற்றங்களையுடையது. இம்மாதத்தில்தான் கேட்டை நக்ஷத்திரத்தில் நம்பெருமாள், நம்மாழ்வார் மற்றும் பல திவ்யதேசத்து எம்பெருமான்கள் தங்கள் தங்கள் திருமேனிக்கு சாத்தியிருக்கும் கவசங்களைப் படிகளைந்து உள்ளேயிருக்கும் திருமேனிக்குத் திருமஞ்சனம் விசேஷமாகக் கண்டருளுகிறார்கள். இதற்கு ஜ்யேஷ்டாபிஷேகம் என்று யாவரும் அறிந்த திருநாமம். அடுத்த படியாக ஆனிதனில் சோதி என்றால் ஞானியர்கள் உகந்து ஆதரிப்பார்கள். காரணம் ஆனி மாத ஸ்வாதி நக்ஷத்திரத்தில் பெரியாழ்வார் அவதரித்ததேயாகும். அவிட்ட நக்ஷத்திரம் நம் ஸ்வாமியின் அவதாரதினமாகும். "ஓணம் அவிட்டம் சதயமிவை ஒப்பிலவா நாள்கள்" என்று மாமுனிகள் கொண்டாடும் மூன்று நக்ஷத்திரங்களில் அவிட்டம் நடு நாயகமாக இருக்கும் ஏற்றம்படைத்தது. பூதத்தாழ்வார் அவதரித்த நக்ஷத்திரத்திலேயே நம் ஸ்வாமியும் அவதரித்தார். கடல் வண்ணன் பூதங்களில் ஒன்றாகத் திகழ்ந்தார். பூதம் என்றால் "பூ ஸத்தாயாம்" என்கிறபடியே ஸத்தையுடையவர். அதாவது வாழ்வின் பயனைப்பெற்றவர். வாழ்வின் பயனாவது வாசுதேவனை அறிந்து வணங்குவதே. அதை அணு அளவும் பிசகாமல் அனுஷ்டித்தவர் நம் ஸ்வாமி. ஆகவே பூதத்தாழ்வாரை ஒப்பர். ஆனிதனில் சோதியில் அவதரித்த ஆழ்வாரோ ஆண்டவனுக்கு மங்களாசாஸநம் செய்தார். நம் ஸ்வாமியோ தேவுமற்றறியேன் என்று ஆழ்வாருக்கே அனவரதமும் மங்களாசாஸநம் செய்து போந்தவர். ஆகவே பெரியாழ்வாரைவிடப் பெரியவரோ என்று ஆச்சரியப்படும்படியாய் இருப்பவர். (அவதரித்தான் வாழியே) அவதாரம் என்ற சொல்லால் நம் ஸ்வாமியும்

பூதத்தாரைப் போலவும் பெரியாழ்வாரைப்போலவும் இந்நிலவுலகில் நமக்காக வந்து தோன்றியவர் என்பது பெறப்படும்.

இனி 5வது வரியை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு நான்காவது வரியை எடுத்து உரையெழுதுவதில் ஓர் நயம் உண்டு. அது என்னவென்று காட்டுகிறேன்.

**5வது வரி:**

**“வானமாமலை முனிவனிடம் மறை தெளிவோன் வாழியே”**

(வானமாமலை முனி) வானமாமலை மடத்தில் 25வது பட்டத்தை அலங்கரித்தவர் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ உ.வே. சின்ன கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி. இவருடைய இன்னருளே காரணமாக நம் ஸ்வாமி ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினதும், அவ்விடம் வாஸம் பண்ணமுடியாமல் வானமாமலை முனிவரின் **பாதநிழலல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் காண்கின்றிலேன்** என்று வானமாமலையில் ஸ்ரீமடத்திலேயே ஸ்ரீ ஸ்வாமியின் கண்காணிப்பிலேயே நம் ஸ்வாமி பல வருடங்கள் எழுந்தருளியிருந்ததும் முதலானவற்றை இம்மலரிலேயே நம் ஸ்வாமியின் சரித்திரத்தைக் கூறும் கட்டுரையில் காணலாம். ‘‘முனிவன்’’ என்கிற சொல்லைப் பதித்திருக்கும் ஸ்ரீ உ.வே. நல்லான் ஸ்வாமியின் புத்தி கூர்மை வியந்து போற்றத்தக்கது. ***முநி:-மநநஶீல:*** என்பர் பெரியோர். அதாவது முநி என்ற சொல்லுக்குப் பொருள் எப்பொழுதும் ஒன்றைக் கருத்தில் கொண்டவர். வானமாமலை முநிவரின் கருத்தில் இருந்ததெல்லாம் இந்த இளையவில்லி ஸ்வாமியை இடைவிடாமல் கண்காணித்து உடலையும் உயிரையும் ஒருங்கே வளர்த்துக் கொண்டு போகவேண்டும். ஆமுதல்வன் என்கிற இந்த கடாக்ஷம்தான் நம் ஸ்வாமியின் எல்லாவிதமான ஏற்றங்களுக்கும் காரணமாகும். மேலும் வானமாமலை முனிவனிடமே உபயவேதாந்த சாஸ்த்ரார்த்தங்களையும் கசடறக் கற்றுத் தேர்ந்தார் என்பதை ‘‘மறை தெளிவோன் வாழியே’’ என்கிற வாழித்திருநாமப் பகுதி காட்டுகிறது.

இப்பொழுது நாலாவது வரியை எடுத்துக்கொள்வோம்.

**4வது வரி:**

**“ஆழ்வார்கள் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே”**

வானமாமலைமுனிவனிடம் ஐயந்திரிபு அறக் கற்றதினால் பெற்ற பயன் ஆழ்வார்கள் பதின்மர்கலை ஆய்ந்துரைக்கும் சாமர்த்தியம் பெற்றதேயாகும். நம் ஸ்வாமி ஆழ்வார்கள் பதின்மர் கலைகளையும் ஆசார்யர்களுடைய ரஹஸ்ய க்ரந்தங்களையும், ஸ்தோத்ரங்களையும் ஏனைய வைணவ நூல்களையும் நன்கு மனப்பாடம் செய்திருந்தார். அதனால் அவருடைய ஆய்வுத்திறன் மிகவும் மேம்பட்டதாக விளங்கியது. குடும்ப சமாசாரத்தைப்பற்றிக் கடிதம் எழுதும்போதும் ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்திகளைப்போல் அருளிச்செயல்களையும், இதிஹாஸ புராணாதிகளையும், ரஹஸ்ய க்ரந்தங்களையும் பிணைத்துக் கோத்து முகமறிந்தவன் முத்துக்கோத்தாற்போல எழுதும் அழகு

பன்னியுரைக்குங்கால் பாரதமாம். இந்த சாமர்த்தியத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி "ஸ்ரீஸூக்தி ரத்னாகரம்" என்கிற அரிய, பெரிய பொருள் பொதிந்த பட்டத்தை உளங்கனிந்து கொடுத்தருளினார் என்றால் அதில் வியப்பொன்றுமில்லை. அந்த மஹாவித்வான் ஸ்வாமியே இதைப்பற்றி எழுதியிருப்பதை இம்மலரிலேயே காணலாம்.

**6வது வரி:**

**"வரகுரு சீனிவாசார்யன்தன் வளர்மைந்தன் வாழியே"**

ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி நம் ஸ்வாமியை ஸ்வீகாரம் செய்து கொண்ட பெரியவர். அவரை "வரகுரு" என்கிற அடைமொழியால் வருணிக்கிறார். வர: என்றால் 'சிறந்த' என்று அர்த்தம். 'குரு' என்பதற்கு உலகத்தினரின் அறிவின்மையை அழிக்குமவர் என்று பொருள். மனிதர்களின் அறிவின்மையாவது. தேஹாத்ம ப்ரமம், ஸ்வஸ்வாதந்த்ர்யம், அந்யசேஷத்வம் முதலியவைகளாம். அவைகளைப் போக்கி அடிமைகொள்வதில் அதிஸமர்த்தார். அந்த ஸ்வாமியாலே இச்சீரிய வழியில் வளர்க்கப்பட்டவர் நம் ஸ்வாமி. அதனால் மைந்தனானார். மைந்தன் என்பதற்கு மூன்று பொருள்கள். 1. ராஜா 2. பிள்ளை 3. தகப்பனாரின் ஆணைக்கு அடங்கி நடப்பவர். இந்த மூன்று பொருள்களும் நம் ஸ்வாமி விஷயத்தில் மிகவும் பொருந்தும். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் முடி சூடா மன்னாயும் தம் திருத்தகப்பனாருக்குப் பிள்ளையாகவும் அவர் சொல்படி ஆழ்வார் ஆசார்யர்கள் கைங்கர்யத்தில் ஈடுபட்டு தொண்டுபூண்டு அமுதமுண்ணுமவராயும் திகழ்ந்தார் நம் ஸ்வாமி.

**7வது வரி:**

**"ஈனமற அடியவர்க்கு இதமுரைப்போன் வாழியே"**

நம் ஸ்வாமி அடியார்கள் அனைவருக்கும் அவர்களுடைய ஈனத்தன்மை (தாழ்ந்தநிலை) போகும்படியாக தம் உபதேசத்தால் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்குமவர். ஈனமாவது - உண்டியே உடையே உகந்து ஒடுவது, சுரிகுழலார் திறத்து காதலேமிகுத்து கண்டவா திரிதந்து ஓடுவது, இவை முதலானவை. **"ஆசாரியன் சிச்சன் ஆருயிரைப்பேணுமவன்"** என்கிற மாமுநிகளின் ஸ்ரீஸூக்தியின்படியே சீடர்களின் ஆத்மக்ஷேமத்தைக்கருதி அவர்களை நல்லுபதேசத்தால் திருத்தி நல்வழி நடத்துமவர்.

**8வது வரி:**

**"எழில் சடகோபார்யன் தன் இணையடிகள் வாழியே"**

ஸ்வாமியின் திருமேனி சௌந்தர்ய விசேஷத்தைப் பற்றி எல்லோரும் அறிந்ததே. கம்பீரமான தோற்றம். ஆஜாநுபாஹுவாய் த்வாதச ஊர்த்வ புண்ட்ரம், பஞ்சகச்சம், திருமணித்தாவடம், திருக்காதுகளில் வைரம் பதித்த சங்க சக்ர குண்டலங்கள், திருக்கைவிரல்களில் அணிந்த ஒளி பொருந்திய மோதிரங்கள் இவைகளுடன் வாரணம் பைய நின்று ஊர்வதுபோல் எழுந்தருளும்போது பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியாய் இருப்பர். இம்மலரின் முகப்பிலுள்ள அவருடைய திருவுருவப்படமே இதற்கு அத்தாக்ஷி.

(இணையடிகள்) ‘ஸ்ரீமந் நாராயண சரணௌ’ என்னுமாபோலே ‘ஸ்ரீமத் சடகோபார்ய சரணௌ’ என்று அனுஸந்திக்கப்படுகிறது. ‘‘சரணௌ - இத்தால் சேர்த்தி அழகையும் உபாய பூர்த்தியையும் நினைக்கிறது’’ என்கிற பிள்ளைலோகாசாரியரின் முமுக்ஷுப்படி சூர்ணை நினைவுபடுத்தப்படுகிறது.

பரஸ்பர ஸத்ருசமான இரு தாமரைப்பூக்களைச் சேர்த்து வைத்தாற்போலே அழகு பொலிந்து விளங்குமவைகள் நம் ஸ்வாமியின் திருவடித்தாமரைகள். த்விவசன ப்ரயோகம் (இருமை) உபாய பூர்த்தியைக் காட்டுகிறது. ஒருமைக்கும் பன்மைக்கும் இல்லாத தனிப்பட்ட ஏற்றம் ஒன்று இருமைக்கு உண்டு. ‘‘இது ஒரு ஜாதி நெல்’’ என்கிற வாக்கியத்தில் ஒரு நெல் என்பது பன்மைப் பொருளில் வந்த ஒருமைச்சொல் ஆகும். ‘‘குருக்கள் எழுந்தருளினார்’’ என்ற விடத்தில் ஒரு குருவே வந்திருக்க, குருக்கள் என்கிற பன்மைச்சொல் ஒருமைப்பொருளில் உள்ளது. ஆனால் இருமைச்சொல் ஒருமைப்பொருளிலோ பன்மைப்பொருளிலோ ஒருக்காலும் உபயோகிக்கப்படமாட்டாது. அதாவது இணையடிகள் என்பது உபாய பூர்த்தியைக்காட்டுகிறது. வேறு ஒரு உபாயம் புகுர ஸஹியாது. ஆதலால் இணையடியே உபாயம்.

இப்படி எல்லா விதத்தாலும் வாழி வாழி என்று எட்டுத்தடவைகள் அனுஸந்திப்பது ஒரு தடவை சொல்லி மனநிறைவு ஏற்படாமையாலே. இப்படிப்பட்ட ஸ்வாமியின் திருவடித்தாமரைகளைப் பற்றினவர்க்கு எல்லா மங்களங்களும் உண்டாக வேண்டும் என்று ஆண்டாளைப் புருஷகாரமாகக்கொண்டு ரங்கமன்னார் திருவடித்தாமரைகளில் வேண்டி நிற்கிறேன்.

## ஸ்ரீ ஸூக்திரத்நாகரம் ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசாரிய ஸ்வாமியின் வாழித்திருநாமம்.

**வானோங்கு யதுகிரியில் வந்துதித்தோன் வாழியே**
**வருபொருநல் குருகைநகர் வாழவந்தோன் வாழியே**
**ஆனிதனில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே**
**ஆழ்வார்கள் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே**
**வானமாமலை முனிவனிடம் மறை தெளிவோன் வாழியே**
**வரகுரு சீனிவாசார்யன்தன் வளர்மைந்தன் வாழியே**
**ஈனமற அடியவர்க்கு இதமுரைப்போன் வாழியே**
**எழில் சடகோபார்யன்தன் இணையடிகள் வாழியே.**

★★★

# இளையவில்லி ஸ்வாமிகளின் தனியன் / வாழித்திருநாமம்

**ஸ்ரீ உ.வே. இளையவில்லி குமார சடகோபாசாரியர் ஸ்வாமியின்**
**(நம் ஸ்வாமியின் பிதாமஹர்) தனியன் / வாழித்திருநாமம்**

ஶடகோப குரோஸ் ஸூநும் வாநாசலமுநி ப்ரியம் |
குமார ஶடகோபார்யம் வந்தே வாத்ஸல்ய பூஷணம் ||

தென் குருகை மாநகரம் சிறக்க: வந்தோன் வாழியே
சீர் இளையவில்லி வளர் திருக்குலத்தோன் வாழியே
மங்களம் சேர் கோதைபதம் பணிந்திடுவோன் வாழியே
வைகாசி ஆயில்யம் வந்துதித்தோன் வாழியே
மாறன் உரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
மாந்தர்கள் அனைவருக்கும் மதிநலம் அருளுமவன் வாழியே
எங்கள் சீனிவாசார்யன் தன் இனிய மைந்தன் வாழியே
எழில் சடகோப தேசிகன் தன் பொன்னடிகள் வாழியே

**ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியின்**
**(நம் ஸ்வாமியின் திருத்தகப்பனார்) தனியன் / வாழித்திருநாமம்**

குமாரஶடகோபார்ய தநயம் தத்பதாஶ்ரயம் |
ஶீலாதி குண ஸம்பூர்ணம் ஸ்ரீநிவாஸகுரும்பஜே ||

சிட்டர்கள் வாழ் திருக்குருகை சிறக்க வந்தோன் வாழியே
சிறந்த மார்கழியில் பூராடம் சகத்துதித்தோன் வாழியே
இட்டமுடன் மகிழ்மாறன் அடிபணிவோன் வாழியே
எங்கள் சடகோபர்க்கு இனிய மைந்தன் வாழியே
பட்டர்பிரான் கோதை பதம் பேணுமவன் வாழியே
பார்புகழும் இளையவில்லி குலத்துதித்தோன் வாழியே
திட்டமுடன் செந்தமிழைத் தேர்ந்துரைப்போன் வாழியே
எழில் சீனிவாசார்யன் தன் இணையடிகள் வாழியே

**ஸ்ரீ உ.வே. ஸ்ரீஸூக்திரத்நாகரம் இளையவில்லி சடகோபாசாரியர் ஸ்வாமியின்**
**(நம் ஸ்வாமியின்) தனியன் / வாழித்திருநாமம்**

ஸ்ரீநிவாஸ குரோஸ்ஸூநும் அநந்தார்ய குலோத்பவம் |
பால்தந்வி குலோத்தம்ஸம் ஶடகோபகுரும் பஜே ||

வானோங்கு யதுகிரியில் வந்துதித்தோன் வாழியே
வருபொருநல் குருகைநகர் வாழவந்தோன் வாழியே
ஆனிதனில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
வானமாமலை முனிவனிடம் மறை தெளிவோன் வாழியே
வரகுரு சீனிவாசார்யன்தன் வளர்மைந்தன் வாழியே
ஈனமற அடியவர்க்கு இதமுரைப்போன் வாழியே
எழில் சடகோபார்யன்தன் இணையடிகள் வாழியே.

## “நான் கண்ட இளையவில்லி ஸ்வாமி”

**ஸ்ரீ உ.வே. ஆத்தான் அப்பு சடகோபாச்சாரியார் ஸ்வாமி**
மேலத்திருமாளிகை, ஆழ்வார்திருநகரி.

உலகில் பிறப்பு இறப்புக்கள் அவரவர் முன் வினைப்பயனால் இறைவனால் ஏற்படுகின்றன. இத்தகைய பிறவிகளில் மிக உயர்ந்த பிறவி மனிதப்பிறவி. அப்பிறவியில் வாழ்வாங்கு வாழ்ந்தால் தெய்வநிலை அடையலாம். அப்படி “வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவரே” நான் கண்ட இளையவில்லி ஸ்வாமி - ஸ்ரீ உ.வே. சடகோபாச்சாரியார் ஸ்வாமி. இந்த ஸ்வாமி வைணவர்களால் அனுதினம் துதிக்கப்படுகின்ற கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் என்ற திவ்யதேசங்களில் ஒன்றான திருநாராயணபுரத்தில் பிறந்தார். பின்னர் பரமபதத்தெல்லை என்று போற்றப்படுகின்ற ஆழ்வார் திருநகரிக்கு ஸ்வீகாரப்புதல்வராக விளங்கினார். ஸ்வீகாரம் வந்த திருமாளிகையே இளையவில்லி திருமாளிகை. பிறந்த திருத்தலமும் ஏற்றமுடையது. ஸ்வீகாரம் வந்த திருத்தலமும் ஏற்றமுடையது. இவர் “உபயப்ரதான ப்ரணவமான உறைகோயில்” என்று போற்றப்படும் ஆழ்வார் திருநகரியில் எழுந்தருளியிருந்த இளையவில்லி ஸ்வாமியான ஸ்ரீ உ.வே. ஸ்ரீனிவாஸாச்சாரியார் ஸ்வாமியின் ஸ்வீகாரத் திருக்குமாரரானார். அதுமுதல் அவரது ஏற்றம் பலபடியாக உயர்ந்தது. பின்னர் ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவில் அத்யாபக மிராசுதாரர்களில் ஒருவரானார். இளமைக்காலம் முதலே அவர் தோற்றப்பொலிவுடன் விளங்கினார். அவரது தோற்றத்தைக் கண்டவர்களுக்கு அவரை வணங்க வேண்டும் என்ற எண்ணமே ஏற்படும். தோற்றத்தால் மட்டுமின்றி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். ஆதிநாதர் ஆழ்வார் கோஷ்டியை அலங்கரித்தார். தனது வித்வத் சிறப்பாலும், சொல்வன்மையாலும் பலரையும் கவர்ந்தார். அதனால் அவர் கோஷ்டியை அலங்கரிக்கும் போதெல்லாம் அவர்தான் கோஷ்டிக்குத் தலைவர் போலும் என்ற எண்ணமே பலருக்கும் ஏற்படும். அருளிச்செயலில் வல்லவராகவும், அதைச் சொல்லுகின்ற இளையதலைமுறையினரை ஊக்குவிப்பராகவும் விளங்கினார். குல மதம், தன மதம், வித்யா மதம் போன்ற முக்குறும் பற்றவராகவும் விளங்கினார். இத்தலத்தில் அவருக்கு விவாஹம் ஆயிற்று. எம்பெருமான் அருளால் மக்கட்பேறு வாய்த்தன. ஐந்து குமாரர்களும், நான்கு குமாரத்திகளும் பிறந்தனர். (ஐந்து குமாரர்களில் மூத்தவராகவும், “ஞானப்பிரான்” என்று போற்றப்படுகின்றவரும், தனது தந்தையாருக்கு இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுபவரான ஸ்ரீ உ.வே. ஸ்ரீனிவாஸ பூவராஹாச்சாரியர் அடியேனுடன் இங்குள்ள பாடசாலையில் நன்றாகப் படித்தவர். பின்பு நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீ உ.வே. இராமகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமியிடம் வித்யாப்யாஸம் பண்ணினார்.)

இளையவில்லி சடகோபாச்சாரியார் ஆழ்வார் திருநகரியில் இருந்த நம்மாழ்வார் சபை மூலம் பல உபந்யாசங்கள் செய்து வந்தார். மற்ற திருமாளிகை ஸ்வாமிகளுடன் கலந்து பரிமாறுபவர். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர். இவரது சகோதரர்களில் ஒருவரே ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்தநரசிம்மாச்சாரியார் ஸ்வாமி ஆவார்.

இளையவில்லி சடகோபாச்சாரியார் ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி ஆழ்வார் திருநகரியில் மிகச்சிறப்பாகப் கொண்டாடப்பட்டது. அதில் கலந்து கொண்ட காஞ்சீ மஹாவித்வான் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி இவரைப்பலபடியாகப் பாராட்டினார். மற்றும் பல வித்வான்களும் கலந்து கொண்டு பாராட்டினர். சடகோபாச்சாரியார் ஸ்வாமிக்கு வானமாமலை 27வது பட்டம் ஜீயர் ஸ்வாமியிடம் மிகுந்த மரியாதையும் பக்தியும் உண்டு.

அந்த ஜீயர் ஸ்வாமி பல நற்பணிகளுக்கு இவரது ஆலோசனைகளை ஏற்றார். இவருக்கு த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமியின் நட்பு ஏற்பட்டது. வானமாமலை 27வது பட்டம் ஜீயர் ஸ்வாமியுடனும் இளையவில்லி சடகோபாச்சாரியாரிடமும் மற்றும் சில வழக்கறிஞர்களுடனும் கலந்து திவ்யதேசங்களில் அருளிச்செயல் குறைவற நடக்க ஒரு அறக்கட்டளையை ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமி ஏற்படுத்தினார். அதன் செயலாளராக ஸ்ரீ இளையவில்லி சடகோபாச்சாரியார் விளங்கினார்.

1968ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17,18 தேதிகளில் ஆழ்வார் திருநகரியில் ராமானுஜ மிஷன் சார்பில் மாறன் செந்தமிழ் மாநாடு ஒன்று நடந்தது. அதில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று ஸ்ரீ சடகோபாச்சாரியார் ஸ்வாமி ஆற்றிய உரை அனைவரது கருத்தையும் கவர்ந்தது. அப்பொழுது “திருவாசிரியத்தின்” சிறப்பையும், திருமாலின் மேன்மைகளையும் எடுத்துரைத்தார்.

பின்னர் இவருக்கு ஸ்ரீரங்கத்தில் வாசம் ஏற்பட்டது. அங்கும் ஸ்ரீவைஷ்ணவ வளர்ச்சிக்கு பல உபந்யாஸங்கள் செய்து வந்தார். “திருக்கச்சி நம்பி சபையின்” சார்பில் திருப்பாவை உபந்யாஸங்கள் நடைபெற்றன. அங்கு ஆற்றிய “நவவித சம்பந்தம்” என்ற உபந்யாஸம் பின்பு நூல் வடிவாக்கப்பட்டு பலருக்கு உதவியாக இருந்தது. திருப்பாவை உபந்யாஸ முடிவில் அக்காலத்தில் சிறந்தவராக விளங்கிய ஐயம் பெருமாள் கோனார் இவருக்கு “திருப்பாவைமணி” விருதளித்து கௌரவித்தார். காஞ்சீ மஹாவித்வான் ப்ர.ப.அண்ணா ஸ்வாமி “ஸ்ரீ ஸூக்தி ரத்னாகரம்” என்ற சிறந்த விருதை இவருக்கு அளித்துப் பாராட்டியுள்ளார். பின்னர் இம்மஹாவித்வான் (அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி) இவருக்கு சம்பந்தியாகவும் ஆனார். அவருடன் பல பெரியவித்வான்களின் நட்பும் ஏற்பட்டன. திருவாலி திருநகரியில் சிறந்த வித்வானாக விளங்கிய எம்பார் ரோகிணி வேங்கடாச்சாரியார் ஸ்வாமியின் நட்பும் ஏற்பட்டது. பல திவ்யதேசங்களில் மஹாஸம்ப்ரோக்ஷண விழாக்களில் பங்கேற்று சொற்பொழிவாற்றினார்.

திருநாராயணபுரம், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், திருமலை இப்படி பல திவ்யதேசங்களின் தொடர்பு ஏற்பட்டது. பின்பு தமது குமாரருக்கு திருக்குறுங்குடியில் உள்ள நல்லதோர் நங்கையை மணம் முடித்ததால் அத்தலத்தின் சம்பந்தமும் ஏற்பட்டது. இப்படி ஒருவருக்கு இத்தனை திவ்யதேசச் சம்பந்தம் ஏற்பட்டதே பெரிய பெருமை. இதுபோல் வேறு யாருக்கும் ஏற்பட்டதில்லை.

இளையவில்லி சடகோபாச்சாரியார் ஸ்வாமி நம்மாழ்வாருக்கு சில திருவாபரணங்கள் செய்து சமர்ப்பித்துள்ளார். ஒப்பற்ற ந்யாய வேதாந்த மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாச்சாரியார் ஸ்வாமி இங்கு வந்து திருவாசிரியம் பற்றி ஏழு நாட்கள் உபந்யாஸம் செய்தபோது இளையவில்லி சடகோபாச்சாரியார் ஸ்வாமி தலைமை ஏற்று நடத்திக்கொடுத்தார்.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்”**

என்ற வள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாக இளையவில்லி சடகோபாச்சாரியார் விளங்கினார். 1910ல் தோன்றிய இந்த ஸ்வாமி 1970ல் மணிவிழா கண்டருளினார். உடனே 1971ல் ஸ்ரீரங்கத்தில் ஆசார்யன் திருவடியடைந்தார். ‘‘ஸ்ரீஸூக்திரத்னாகரம்’’ ஸ்வாமியின் பேரிழப்பை காஞ்சீ மஹாவித்வான் ப்ர.ப. அண்ணா ஸ்வாமி **ராமானுஜன்** பத்திரிகையில் மூன்று பக்க அளவிற்கு எழுதி வருந்தினார். இளையவில்லி ஸ்வாமியின் சரம கைங்கர்யம் ஸ்ரீரங்கத்தில் சிறப்பாக நடந்தது.

ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாச்சாரியார் ஸ்வாமியைப் பற்றிச் சில வரிகள்:

**“மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்”** என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக இளையவில்லி ஸ்ரீஸூக்திரத்னாகரம் ஸ்வாமியின் புதல்வரான பூவராஹாச்சாரியார் ஸ்வாமி விளங்கி வருகிறார். தந்தையிலும் பல மடங்கு சிறந்து விளங்குகிறார். தமது குமாரருக்கு அண்ணன் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமியின் சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். தமது சகோதரர் பொன்னப்பனுக்கு வானமாமலை வித்வான் ஜர்மன் ஸ்ரீனிவாசய்யங்காரின் குமாரத்தியாரை மணமுடித்தார். இப்படி தந்தையாருக்கும், மகனாருக்கும், பல திவ்யதேச சம்பந்தங்கள் ஏற்பட்டன. ஆழ்வார் திருநகரியில் பகவத் விஷய சாற்றுமறை செய்தவர் பூவராஹாச்சாரிய ஸ்வாமி. தகப்பனாரினும் மேலாக பூவராஹாச்சாரியார் ஆழ்வார் திருநகரியில் 25 ஆண்டுகட்கு முன்னரே கூரத்தாழ்வான் கோவில் ஸம்ப்ரோக்ஷணத்தையும் மற்றும் திருப்பணிகளையும் செய்தவர்.

ஆழ்வார் திருநகரியில் திருப்புளியாழ்வாரடியில் உள்ள - மணவாளமாமுனிகள் காலக்ஷேபம் சாதித்த மண்டபத்தில் பகவத் விஷய சாத்துமறை செய்தவர்கள் மிகச்சிலரே. ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாச்சாரியார் ஸ்வாமி ஒரு ஸம்வத்ஸரம் தங்கியிருந்து பகவத் விஷய காலக்ஷேபம் சாதித்து சாத்துமறை

பண்ணினார். அது மிகச்சிறப்பான முறையில் நடந்தது. மற்றபடி சிரோமணி ஸ்ரீ உ.வே. நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ உ.வே. தாதாச்சாரியார், டாக்டர் ஸ்ரீ உ.வே. கே.ஏ. மணவாளய்யங்கார் போல்வார் **"ஒன்றும் தேவும்"** திருவாய்மொழி பாசுரங்களுக்கு மட்டும் காலக்ஷேபம் சாதித்துச் சென்றனர். காஞ்சீ மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி "ஆசார்யஹ்ருதயம்" காலக்ஷேபம் 10 நாட்கள் செய்தார். அவரும் அந்த இடத்தில் பகவத்விஷய சாத்துமறை செய்யவில்லை, காரப்பங்காடு ஸ்ரீ உ.வே. வேங்கடாச்சாரியார் ஸ்வாமிக்கும் அந்த பாக்யம் கிட்டவில்லை. சதாபிஷேகம் கோவிந்த நரசிம்மாசாரியாருக்கும் கிட்டவில்லை. ஆனால் இளையவில்லி பூவராஹாச்சாரியார் பெங்களூரில் காலக்ஷேபம் சாதித்து ஆழ்வார் திருநகரி வந்து மணவாளமாமுனிகள் காலக்ஷேபம் சாதித்த இடத்தில் பகவத் விஷய சாத்துமறையை விசேஷமாக நடத்தினார். அதன் பின்னர் சமீபத்தில் நரசாப்பூர் ஸ்ரீ உ.வே. திருவேங்கடாச்சாரியார் தமது சிஷ்யர்களுடன் வந்திருந்து பகவத் விஷய சாத்துமறையை நடத்தினார். அதில் பூவராஹாச்சாரியார் குமாரர் கலந்து கொண்டு உபந்யசித்தார். இப்படி வாழையடி வாழையாக இளையவில்லி சடகோபாச்சாரியார் ஸ்வாமி குடும்பம் இன்றுவரை உபந்யாசத்தில் ஈடுபட்டு வருவது பாராட்டற்குரியதே.

பல மஹனீயர்களின் தொடர்புடையவரும் "ஸ்ரீஸூக்திரத்னாகரம்", "திருப்பாவைமணி" போன்ற பல விருதுகளைப் பெற்றவருமான தமது தந்தைக்கு (ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாச்சாரியர் ஸ்வாமிக்கு) மகன் (ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீனிவாஸ பூவராஹாச்சாரியர் ஸ்வாமி) எடுக்கும் விழாவே இந்த நூற்றாண்டு விழா. இதில் பல்வேறு வித்வத்ஸார்வபௌமர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். உள்ளூர் வாசியான அடியேனுக்கும் இவ்விழாவில் முதல் நாள் பங்குபெறும் வாய்ப்பினை அளித்த சகோதரர் பூவராஹாச்சாரியாருக்கும், அவரது சகோதரர்களுக்கும், வழித்தோன்றல்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி. இப்பெருமக்கள் **"தொண்டே செய்து என்னும் தொழுது வழியொழுக"** ஆதிநாதர் ஆழ்வார் திருவடிகளில் இறைஞ்சுகிறேன். இதுவரை இந்த ஊரில் யாருக்கும் இப்படியொரு நூற்றாண்டு விழா நடந்ததில்லை. அத்தகைய சிறப்பைச் செய்த பூவராஹாச்சாரியாரும் அவரது வழித்தோன்றல்களும் பாராடடுக்குரியவர்கள் என்பது திண்ணம்.

★★★

# ஸம்பந்த ஜ்ஞானம்

**ஸ்ரீ உ.வே. ஆத்தான் வேங்கடவரதாச்சாரியார் ஸ்வாமி**
வடக்குத்திருமாளிகை, ஆழ்வார்திருநகரி.

**'கு' ஶப்தஸ்து அந்தகாரஸ்யாத் 'ரு' ஶப்தஸ் தந்நிரோதக: |**
**அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே ||**

இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குக் கூட்டிவருபவன் 'குரு' எனப்படுகிறான். அதாவது அஞ்ஞானத்தைப் போக்கி ஞானமூட்டுபவன். ஆசார்யன் அறியாததை அறிவிக்கிறான்.

**அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க**
**சம்பந்தம் காட்டித் தடைகாட்டி - உம்பர்**
**திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்**
**அவனன்றோ ஆசாரியன்.**

என்பது விளாஞ்சோலைப்பிள்ளை திருவாக்கு. பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள நெருங்கிய தொடர்பைத் திருமந்த்ர உபதேச மூலம் ஆசாரியன் தெரிவிக்கிறான். பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள தொடர்பு ஒன்பது விதமானது என்று திருமந்த்ரம் தெரிவிக்கிறது.

**பிதா ச ரக்ஷக: ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: |**
**ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யமநூதித: ||**

என்று நவவித ஸம்பந்தங்களும் ஆத்யமநுவான திருமந்த்ரத்திலிருந்து கிடைக்கிறது.

| | மந்த்ர பகுதி | பரமாத்மா | ஜீவாத்மா |
|---|---|---|---|
| 1. | அ | பிதா | புத்ரன் |
| 2. | அ | ரக்ஷகன் | ரக்ஷ்யம் |
| 3. | லுப்தசதுர்த்தி | ஶேஷீ | ஶேஷம் |
| 4. | உ | பர்த்தா | பார்யா |
| 5. | ம | ஜ்ஞேயம் | ஜ்ஞாதா |
| 6. | நம: | ஸ்வாமி | ஸ்வம் |
| 7. | நார | ஆத்மா | ஶரீரம் |
| 8. | அயன | ஆதாரம் | ஆதேயம் |
| 9. | ஆய | போக்தா | போக்யம் |

இந்த ஒவ்வொரு ஸம்பந்தத்தையும் விளக்குவதற்கு அவகாசமும் இடமும் இப்பொழுது இல்லை. 'பன்னியுரைக்குங்கால் பாரதமாம்'. இவையெல்லாவற்றிலும் மிக முக்யமான இரண்டு ஸம்பந்தங்களை - அதாவது ஶேஷ-ஶேஷீ பாவம், பர்த்ரு-பார்யா பாவம் இரண்டையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

***ஶேஷ-ஶேஷீ ஸம்பந்தம்:*** எம்பெருமான் ஶேஷீ, அதாவது யஜமானன். ஜீவாத்மாவாகிய நாம் 'ஶேஷம்', அதாவது அடிமை. அதாவது எம்பெருமானுக்கு நாம் அடிமை. பொதுவாக அடிமையாயிருப்பது கஷ்டமான பிடிக்காத விஷயமல்லவா என்றால் அப்படியல்ல. நாம் விரும்புமவர்களுக்கு நாம் அடிமையாயிருப்பது ஸுகமானது தான். குழந்தைகளான பேரன், பேத்திகள் சொல்லுகிறபடி தாத்தா பாட்டிகள் செய்வதைப் பார்க்கிறோம். குழந்தைகள் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் வெகு ஸந்தோஷத்துடனே செய்வதைப் பார்க்கிறோம். எம்பெருமானும் கல்யாண குணங்கள் நிரம்பியவனாதலால், அவனுக்கு அடிமையாயிருப்பதும் ஸுகமானதே; துக்கமானதல்ல. ஜீவாத்மாவுக்கு ஞானம், ஆனந்தம் போன்ற குணங்களும் உண்டு. ஆனால் அவையெல்லாம் வெளிப்புறமானது.

ஶேஷத்வம் தான் ஆத்மாவுக்கு ஸ்வரூபம். **'அஹமர்த்தத்துக்கு ஜ்ஞானானந்தங்கள் தடஸ்தம் என்னும் படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்'** என்பது பிள்ளைலோகாச்சாரியார் திருவாக்கு. பூவுக்கு மணமும் ரத்னத்துக்கு ஒளியும் போலே ஆத்மாவுக்கு ஶேஷத்வம்.

***பர்த்ரு-பார்யா 'ஸம்பந்தம்':*** எம்பெருமான் பர்த்தா. அதாவது புருஷன். ஆத்மா பார்யா. அதாவது மனைவி. இது ஶேஷ ஶேஷீ ஸம்பந்தத்தை மேலும் வலுவாக்குகிறது. காலஅட்டவணை போட்டுக்கொண்டு வீட்டு வேலை செய்யும் ஒருத்தி, பல வீடுகளிலும் வேலை செய்யலாம். அதே போன்று எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பதோடு, இதரதெய்வங்கயையும் தொழலாமோ? என்றால், **"கொண்டானை அல்லால் அறியாக்குலமகள் போல்"**, எம்பெருமான் ஒருவனுக்கு மட்டுமே உரிமைப்பட்டிருக்க வேண்டும் என்பது பர்த்ரு-பார்யா ஸம்பந்தம்.

இனி இதை ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்வதைப் பார்ப்போம். எம்பெருமான் ஆழ்வாருக்கு மதி, நலம் இரண்டையும் அருளினான். மதி-ஞானம், நலம்-பக்தி, ப்ரேமம். ஆழ்வாருக்கு ஞானகுணம் ஓங்கியிருக்கும் போது தாமான தன்மையில் பாசுரமருளிச் செய்வார். ஆழ்வாருக்கு ப்ரேமம் தலையெடுக்கும் போது நாயிகா பாவத்தில் - அதாவது பெண்ணாக எண்ணிப் பாசுரமிடுவார். நாயிகா பாவத்தில் ஆழ்வார் அருளிச் செய்தவை 27 திருவாய்மொழிகள் (270 பாசுரங்கள்). **'ஜ்ஞானத்தில் தம்பேச்சு. ப்ரேமத்தில் பெண் பேச்சு'** என்று நாயனார் அருளிச் செய்கிறார். இந்த 27ல் 17 திருவாய்மொழிகள் தலைவிப்பாசுரங்கள்; 7 திருவாய்மொழிகள் தாய்ப்பாசுரங்கள்; 3 திருவாய்மொழிகள் மட்டும் தோழிப்பாசுரங்கள். இந்த மூன்று திருவாய்மொழிகளிலும் ஸம்பந்த ஜ்ஞானத்தை ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

மூன்றில் முதலாவது தோழிப்பாசுரம் 4ம்பத்து 6ந்திருவாய்மொழி “தீர்ப்பாரையாமினி”. இதில் ஜீவாத்மா பிறர்க்குரியதன்று - அந்யசேக்ஷத்வம் கழிகை - என்று வெறி விலக்குகிறார். இரண்டாவது தோழிப்பாசுரம் 6ம்பத்து 5ந்திருவாய்மொழி “துவளில் மா”. இதில் ஆத்மால தனக்கும் உரியதன்று - ஸ்வஸ்வாதந்தர்ய நிவ்ருத்தி - என்று ஆசையறுக்கிறார். மூன்றாவது தோழிப்பாசுரம் 8ம்பத்தில் 9ந் திருவாய்மொழி. “கருமாணிக்க மலை”. இதில் ஆத்மா எம்பெருமானுக்கு ஆட்பட்டது - அநந்யார்ஹ சேஷத்வம் - என்று அறத்தொடு நிறுத்துகிறார். ஆக இந்த மூன்று திருவாய் மொழிகளிலுமாக “ஜீவாத்மா பிறர்க்குரியதன்று. தனக்குரியதுமன்று. எம்பெருமான் ஒருவனுக்கே உரிமைப்பட்டது” என்ற ஸம்பந்த ஜ்ஞானத்தைத் தெரிவிக்கிறார் ஞானதேசிகனான, ப்ரதமாசாரியரான ஸ்வாமி நம்மாழ்வார்.

**‘காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்’** என்றாற்போலே, இளையவில்லி ஸ்வாமியின் ஶதமானோத்ஸவத்தில் அடியேனும் உபந்யஸிக்க ஒரு ஸந்தர்பத்தைத் தந்தமைக்காக அடியேனுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்பர்ண் யுத்தரேதடே |**
**ஸ்ரீதிந்த்ரிணீ மூலதாம்நே ஶடகோபாய மங்களம் ||**

**ஸ்ரீமத்ரங்க நிவாஸாய ரஹஸ்யார்த்த ப்ரதாயிநே |**
**க்ருஷ்ணபாத தநூஜாய லோகார்யாயாஸ்து மங்களம் ||**

★★★

# ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமியின் மிக உயர்ந்த ஆத்ம குண பூர்த்தி விசேஷங்கள்

**ஸ்ரீ உ.வே. இளையவில்லி கண்ணமாசார்யர் ஸ்வாமி**

*கற்குளம் ஸ்வாமி திருமாளிகை, ஆழ்வார்திருநகரி.*

ஸ்ரீ ஸ்வாமியின் குணங்களை விசேஷித்துக் கூறவேண்டும் எனில் அதற்கு மிக உயர்ந்த பண்டிதர்களால் தான் முடியும். ஆனால் அடியேன் அவர் விசேஷகுணங்களை எழுத ஆசைப்பட்டதுக்குக் காரணம் அவருடைய தேஹ ஸம்பந்தம் தான். ஸ்ரீஸ்வாமியின் குமாரராக இருந்து அவருக்கு கைங்கர்யம் செய்யும் பரமபாக்யம், அவருடைய மிகஅற்புதமான திருப்பாவை உபந்யாஸங்கள் கேட்கும் பெருமையும் பாக்யமும் பெற்றேன்.

ஸ்ரீ ஸ்வாமி அவதரித்த திருத்தலம் திருநாராயணபுரம். **எமக்காக அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்** என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸாதித்தபடி நம் ஸ்வாமியை - குழந்தையாக இருந்த அவருடைய திருமேனி வைலக்ஷண்யத்தைப் பார்த்த ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமி மிகவும் கவரப்பட்டு ஆழ்வார் திருநகரியில் ஆழ்வார் கைங்கர்யத்துக்காகவே ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு அவரை அழைத்து வந்தார்.

ஸ்வீகாரம் சென்றபிறகும் ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமி விசாலமான திருவுள்ளத்துடன் தமது திருத்தம்பிமார்களான ஸ்ரீ உ.வே. அனந்தாழ்வான் ஸ்வாமி, ஸ்ரீஉ. வே. கோவிந்த நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. ரங்காச்சாரியர் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. பாவனாச்சார் (கண்ணன்) ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. பாஷ்யம் ஸ்வாமி ஆகியோரை மிகவும் பரிவுடன் வளர்த்து அவர்களுக்கு வேண்டிய ஸஹாயங்களை எல்லாம் செய்து அவர்களின் முன்னேற்றத்தில் மிகவும் பரிவுடன் இருந்தவர்.

தனது எல்லா சகோதரர்களிடமும் பெற்ற தாய் தந்தையார்களிடமும் முறையே மிகவும் அதிப்ரீதியுடனும், பக்தியுக்தராகவும் விளங்கினார். குறிப்பாக ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமியை தன் உயிருக்கு மேலாகக்கருதி ஸகலசாஸ்த்ரங்களையும் கற்பித்து, நம் ஸம்ப்ரதாயத்தில் பகவத் விஷயம், ரஹஸ்ய க்ரந்தங்கள் காலக்ஷேபங்கள் ஸாதித்து, மிகச்சிறந்த வித்வானாக உருவாக்கி, பகவத் பாகவத கைங்கர்யங்களில் ஈடுபடும்படி செய்தார். மற்ற சகோததர்களுக்கும் எல்லாவிதமாக - மேன்மையான படிப்பு, மற்றும் சகலவிதமாக பொருள் உதவிகளையும் செய்து அனைவரையும் நல்ல நிலையில் வைத்தார்.

ஸ்ரீ ஸ்வாமி பெரிய குடும்பஸ்தர். இவருக்கு ஒன்பது குழந்தைகள். எல்லோரையும் ஒருகுறையும் இன்றி வளர்த்து அவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்து, திருக்கல்யாணம் எல்லாம் செய்வித்தார். அதே சமயத்தில் அடியேன் பகவத் பாகவத கைங்கர்யத்தில் எள்அளவும் குறைவு இன்றி ஈடுபடச்செய்தார்.

தன் குமாரர்கள் க்ஷேமத்தைக் கருதி தினமும் திருமாளிகையில் தாமே தளிகை செய்தும் அவர்களை நன்கு கவனித்தும் மேன்மை அடையச்செய்தார். எவ்வளவோ உயர்ந்த நிலையில் இருந்த நம் ஸ்வாமி மிகவும் எளிமையான வாழ்வை நடத்தி வந்தார். குடத்திலிட்ட விளக்கு மாதிரி ஸ்வாமியின் வாழ்க்கை உயர்ந்த ஞானம் நல்ல மேதாவிலாசம், பகவத் பாகவத கைங்கர்யத்தில் பூர்ண ஈடுபாடு இருந்தும், சம்சாரத்தில் ஈடுபட்டதால் அவரால் மிக உயர்ந்த புகழ் ஏணியின் உச்சியில் போக இயலவில்லை. ஆனால் தன் சிஷ்யர்கள், குமாரர்கள், குமாரத்திகள் எல்லோருடைய உள்ளங்களிலும் தெய்வமாக எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமி ஞானம் அனுஷ்டானம் இவைகள் இரண்டையும் பூர்ணமாக உடையவர். ஸகல சாஸ்த்ரங்கள் மற்றும் திவ்யப்ரபந்தங்கள் அதன் வியாக்கியானங்களுடன் கசடறக் கற்றவர், ஸம்ஸ்க்ருதம், கன்னடம் போன்ற இதரபாஷைகளிலும் மிகவும் மேன்மையான ஞானம் பெற்றவர். தமிழில் அவருக்கு உள்ள அழ்ந்த திறமையான ஞானம் வேறு எதிலும் கிடையாது. கன்னடத்தில் மிகவும் அற்புதமாக உபந்யாஸம் செய்வர். பங்களூர் ஹனுமந் தையா என்ற அமைச்சர் (விதான் சௌதா கட்டியவர்) நம் ஸ்வாமியின் கன்னட உபந்யாஸங்கள் கேட்டு, சந்தோஷம் அடைந்து மிகவும் கொண்டாடிப் போற்றியுள்ளார்.

ஸ்ரீ ஸ்வாமி தனது உயர்ந்த சகல சாஸ்திர பாண்டித்தியத்துடன் கலியன் அருளிய திருமொழி வ்யாக்கியான காலக்ஷேபம் திருச்சியில் திருச்சச்சி நம்பி சபையில் பல வருடங்கள் விமரிசையாகச் செய்தார். திருமொழியின் மிகவும் விசேஷமான அர்த்தங்களை அற்புதமாக சாதித்தார் என்று எல்லோராலும் போற்றப்பட்டவர்.

நம் ஸ்வாமியின் எழுத்திலும் பேச்சிலும் பூர்வாசாரிய ஸ்ரீசூக்திகளே மலிந்திருப்பதைக் கண்டு வியந்து **ஸ்ரீஸூக்திரத்நாகரம்** என்ற அரிய பெரிய விருதை நம் ஸ்வாமிக்கு காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அளித்து கௌரவித்துள்ளார். மேலும் திருப்பாவை உபந்யாஸம் மூலம் அநேக பாகவத உத்தமர்களைக் கவர்ந்து **திருப்பாவைக் கடல்மணி** என்ற புகழும் விருதும் பெற்றார்.

நம் இளையவில்லி ஸ்வாமியின் கீழ்க்கண்ட விசேஷ ஆத்ம குணபூர்த்தியால் மிகவும் பிரகாசித்தார்:

ஸ்ரீவைஷ்ணவ பாஹ்ய, ஆந்தர லக்ஷணங்களைப் பூர்ணமாக உடையவர். அதன்படி நடந்தும் வாழ்ந்தும் காட்டினார்.

குற்றத்தையே குணமாகக் கொள்ளும் மிக உயர்ந்த திருவுள்ளம் படைத்தவர். கோபதாபங்களுக்கு இடம் கொடுக்காதவர்.

மிக உயர்ந்த தளிகை தாமே செய்து, திருமாளிகைக்கு யார் எந்த சமயத்தில் வந்தாரும் தானே சாதித்து உவகை கொள்ளும் திருவுள்ளம் கொண்டவர்.

தன் சொந்த சகோதரர்கள், குமாரர்கள், குமாரத்திகள், மாப்பிள்ளைகள், பேரன்கள், பேத்திகள் எல்லோரிடத்திலும் சரிசமமான ப்ரீதி கொண்டவர்.

ததீயாராதனை செய்வதில் அவரை யாரும் மிஞ்ச முடியாது. மிகவும் அற்புதமாகவும் ப்ரீதியுடனும் அவர் செய்யும் ததீயாராதனையை நவதிருப்பதி ஸ்வாமிகள் அமுது செய்து மிகவும் போற்றுவர்கள். கற்குளம் இளையவில்லி ஸ்வாமி திருமாளிகை ததீயாராதனம் என்றால் மிகவும் ப்ரசித்தம்.

பூர்ண ஆத்மகுண பூர்த்தியுடன் விளங்கி தன் சிஷ்ய வர்க்கத்தையும் தன் விரோதிகளையும் தன்னை மிகவும் நேசிக்கும் படி செய்தவர்.

ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்வாமியிடம் இருந்த மிகமிக உயர்ந்த ஆத்மகுண பூர்த்தி அவருடைய உண்மை வாழ்க்கையிலும் வெளிப்பட்டது. பெரிய குடும்பஸ்தராக ஐந்து குமாரர்கள், நான்கு பெண்கள் பெற்று ஸம்ஸார ஸாகரத்தில் இருந்து கொண்டு ஸ்ரீரங்கநாதன் கைங்கர்யத்தில் ஈடுபட்டதோடு நில்லாமல், இடைவிடாமல் உபந்யாஸங்கள் ஸ்ரீஸூக்திகள் மூலம் மிக உயர்ந்த அவர்களுடைய சொல் / எழுத்து வன்மையை வெளிப்படுத்தினார்.

**அடியேனும் ஸ்ரீ ஸ்வாமியும்:**

ஸ்ரீ ஸ்வாமியின் 8வது குழந்தையாக பிறந்த அடியேனுக்கு கண்ணன் என்ற பெயர் இட்டு சிறுவயதிலிருந்து மிகுந்த அதிப்ரீதியுடன் வளர்த்து, மேன்மையான குணங்களுடன் திகழவேண்டும் என்ற திருவுள்ளத்தில் அடியேனைப் படிக்க வைத்து பெரிய இன்ஜினீயர் ஆக்கினார்.

ஸ்ரீஸ்வாமியுடன் சிறுவயதில் பள்ளிப்படிப்பு முடித்தவுடன் இன்ஜினீயர் கல்லூரி கல்விக்கு செல்வதற்கு முன்பு அவருடன் மிகவும் நெருங்கிப் பழகும் பாக்யம் ஏற்பட்டது. அப்பொழுது ஆழ்வையில் இருந்து திருவரங்கத்துக்கு அவர்கள் எழுந்தருளினார். ஸ்ரீரங்கநாச்சியார், ஸ்ரீரங்கநாதன் மஹோத்ஸவங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு எஞ்சியுள்ள வாழ்க்கை பூராவும் திருவரங்கத்தில் கைங்கர்யம் செய்தார். அப்பொழுது அவருடைய திருப்பாவை உபன்யாசத்துக்கு முப்பதும் தப்பாமல் திருச்சியில் உள்ள "திருக்கச்சிநம்பி சபைக்கு" பல ஆண்டுகள் சென்று அனுபவிக்கும் பேறு பெற்றேன்.

**ஸ்ரீ ஸ்வாமி உருவாக்கி அளித்த இரண்டு ரத்தினங்கள் :**

நம் இளையவில்லி ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்காக கண்ணும் கருத்துமாக இரண்டு ரத்தினங்களை உருவாக்கி வளர்த்து அதனால் இவ்வையகமே வியக்கும்படி அவர்களை பகவத் பாகவத கைங்கர்யத்தில் ஈடுபடும்படி செய்து மகிழ்ந்தார்.

அந்த இரண்டு ரத்தினங்கள்: 1. ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, 2. ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹாசாரியர் ஸ்வாமி. இரண்டு ஸ்வாமிகளும் பகவத் கைங்கர்யமானதும் மிக உயர்ந்ததுமான ஸ்ரீ கூரத்தாழ்வான் ஸந்நிதி, ஸ்ரீ மணவாளமாமுனிகள் ஸந்நிதி திருப்பணி ஸம்ப்ரோக்ஷணங்களை விசேஷ செய்து வைத்தார்கள். ஸ்ரீரங்கத்தில் கூரத்தாழ்வான் ஸந்நிதி, ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸந்நிதி, ஆழ்வார்கள் திருநகரியில் ஸ்ரீ கூரத்தாழ்வான்

ஸந்நிதி, ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸந்நிதி, ஸ்ரீ ஆதிநாதர், ஆழ்வார் ஸந்நிதிகள், தென்திருப்பேரை ஸ்ரீமகர நெடுங்குழைக்காதர் ஸந்நிதி ஆகிய ஸந்நிதிகளில் விசேஷ கைங்கர்யங்கள் செய்து பகவத் க்ருபைக்கு பாத்திரமானார்கள்.

இரண்டாவது ரத்தினமான ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசார்ய ஸ்வாமியின் பூர்ண த்ரவிய ஸஹாயத்துடன் முதல் ரத்தினமான ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் ஸ்வாமி ஆழ்வையில் பல கோயில்களை ஜீர்ணோத்தாரணம் செய்வித்தார்.

ஸ்ரீ உ.வே. ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசார்ய ஸ்வாமி ஆங்கிலத்திலும், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் மிகவும் ஆழ்ந்த ஞானம் / புலமை பெற்று தம் வாக்சாதுர்யத்தால் பகவத் பாகவத கைங்கர்யத்தில் பெங்களூர் மாநகரில் உள்ள அனேக பக்தர்களை ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு வேண்டிய கைங்கர்யம் செய்யும் படி ஊக்குவித்தார்.

ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமி (தம் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவத்தில்) தம் திருக்குமாரர் இளையவில்லி ஸ்ரீநிவாஸபூவராஹாசார்ய ஸ்வாமி ஸாதித்த உபந்யாஸத்தைக் கேட்டு அகமகிழ்ந்தார். அந்த உபந்யாஸ நடை திருத்தகப்பனார் திருவுள்ளம் குளிரும்படியாக மிகவும் அற்புதமாக இருந்தது. அப்பொழுது ஸ்ரீ உ.வே. பூவராஹாசார்ய ஸ்வாமி தம் திருத்தகப்பனார் ஸ்ரீ உ. வே. இளையவில்லி சடகோபாசார்யரை ஸ்வாமி எம்பெருமானாருக்கு ஸாம்யப்படுத்தி அற்புதமாக உபந்யஸித்தார். **பஞ்சாசார்ய பதாஶ்ரித:** என்கிறபடி எம்பெருமானாருக்கு எப்படி ஐந்து ஆசார்யர்கள் வாய்த்தார்களோ அப்படியே நம் இளையவில்லி ஸ்வாமிக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை சின்னகலியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. திருநாராயணபுரம் அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமி முதலான ஐந்து ஆசார்யர்கள் வாய்த்தார்கள். அவரைத் திருத்தகப்பனாராகப் பெற்றது எம் எல்லோருடைய பரமபாக்யமும் என்று மிகவும் விசேஷித்து உபந்யஸித்தார்.

**“ஞானம் அனுட்டானமிவை நன்றாகவே உடையனான குருவை அடைந்தக்கால் மாநிலத்தீர்! தேனார்கமலத் திருமாமகள் கொழுநன் தானே வைகுந்தம் தரும்”** என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் தெரிவித்தபடி நம் இளையவில்லி ஸ்வாமியின் திருவடிகள் சம்பந்தம் உடைய அடியோங்கள் மற்றைய ஏனைய சிஷ்யர்கள் எல்லோருக்கும் அந்த தேனார் கமலத் திருமாமகள் கொழுநன் வீற்றிருக்கும் வைகுந்தத்தில் இடம் நிச்சயம் / பரமபத ப்ராப்தி நிச்சயம் என்ற மனோ நிம்மதியுடன் இந்த கட்டுரையை அவர் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.**
**ஸ்ரீஇளையவில்லி ஸ்வாமி திருவடிகளே சரணம்.**

★★★

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே பாலதந்வி மஹாகுரவே நம:

# இளையாழ்வாரும் இளையவில்லியும்

**ஸ்ரீ உ.வே. கொமாண்டூர் இளையவில்லி பாஷ்யகாரர் ரங்கராஜன் ஸ்வாமி**
ஓய்வுபெற்ற ஆணையர், இந்திய வருமான வரித்துறை.

இளையாழ்வார் விஷயமான ச்லோகங்கள் :

மேஷார்த்ரா ஸம்பவம் விஷ்ணோர்தர்ஶந ஸ்தாபநோத்ஸுகம் |
துண்டீர மண்டலே ஶேஷ மூர்த்திம் ராமாநுஜம் பஜே ||

புண்ட்ரைர் த்வாதஶபிர்யுதம் விலஸிதம் தண்டைஸ்த்ரிபிர்
மண்டிதம் காஷாயேந ஶிகோபவீத ருசிரம் தோர்மூல சக்ராம்புஜம் |
ஆஸீநம் ஜலஜாஸநே ச துலஸீ பத்மாக்ஷ மாலாஞ்சிதம்
யுக்தஞ்சாஞ்ஜலி முத்ரயா ரவிநிபம் ஸ்ரீபாஷ்யகாரம் பஜே ||

நம: ப்ரணவ ஶோபிதம் நவகஷாய கண்டாம்பரம்
த்ரிதண்ட பரிமண்டிதம் த்ரிவித தத்த்வ நிர்வாஹகம் |
தயாஞ்சித த்ருகஞ்சலம் தளிதவாதிவாக்வைபவம்
ஸமாதி குணஸாகரம் சரணமேமி ராமாநுஜம் ||

இளையவில்லி விஷயமான ச்லோகங்கள் :

யதீந்த்ர மாத்ரு ஸ்வஸ்ரீய: ப்ரதிதார்யபதே ஸ்தித: |
மூலபூத: கௌஶிகாநாம் தம் வந்தே பாலதந்விநம் ||

ஸ்ரீகௌஶிகாந்வய மஹாம்புதி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீபாஷ்யகார ஜநநீ ஸஹஜா தநூஜம் |
ஸ்ரீஶைலபூர்ண பதபங்கஜ ஸக்த சித்தம்
ஸ்ரீபாலதந்வி குருவர்யமஹம் பஜாமி ||

‘இளையாழ்வார்’ என்கிற இயற்பெயருடையவராய் ‘எம்பெருமானார்’ என்கிற சிறப்புத் திருநாமமுடையவராய் ஸ்ரீவைஷ்ணவர்கள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றிருக்கும் அனைத்துலகும் வாழப்பிறந்த இராமாநுசமுனியைப்பற்றியும் அவருடைய சிறிய தாயாரின் திருக்குமாரராய் எம்பெருமானார் தரிசனம் தழைத்தோங்க எழில் மறையின் ஏரிக்கு (வீரநாராயணபுர ஏரிக்கு) அவரால் நிறுவப்பட்ட எழுபத்தி நான்கு ஆசார்ய புருஷர்களில் (எழுபத்தி நான்கு மதகுகளில் ஒன்றான) ஒருவரும் அடியோங்களுடைய கூடஸ்தருமான கோயில் கொமாண்டூர் இளையவில்லி என்கிற திருநாமமுடைய ஸ்ரீபாலதந்வி மஹாசார்யரைப் பற்றியும் (இளையாழ்வாருக்கும் இளையவில்லி ஸ்வாமிக்கும் உள்ள

நெருங்கிய தொடர்பினைப் பற்றி) சில செய்திகளைப் பெரியோர்களிடம் கேட்டறிந்தவாறே அஸ்மத் ஆசார்ய குருபரம்பரையை த்யானித்தவாறே விண்ணப்பிக்கத் தலைப்படுகின்றேன்.

## திருவனந்தனின் அம்சமாகும் இளையாழ்வாரும் இளையவில்லியும்

### 1. த்ரேதா யுகத்தில் திருவனந்தனின் அம்சமாகும் இலக்குவனும் சத்ருக்னனும்

இளையாழ்வாருக்கும் இளையவில்லிக்கும் உள்ள தொடர்பு கலியுகத்தில் அவர்கள் திருவவதரித்திருந்த காலத்தில்தான் ஏற்பட்டதொன்றல்ல. இருவருமே இரு நா படைத்த திருவனந்தாழ்வானின் அம்சமாதலின் இத்தொடர்பு திரேதாயுகம் தொட்டே இருந்து வருவதாகும். திருநாட்டில் எம்பெருமானுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும் ஆதிசேஷனாகிற திருவனந்தனும் த்ரேதா யுகத்தில் எம்பெருமான் இராமபிரானாக திருவவதரிக்க, தானும் அவனோடு அவதரித்து இலக்குவன் என்கிற திருநாமத்துடன் இராமபிரானின் வெளியில் உலவும் ப்ராணன் என்று பேசப்படுமளவில் ஒரு அங்கத்தால் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டு இராமனுக்குப் பணிசெய்து போந்தனன். அஃதன்றிக்கே திருவனந்தனே சத்ருக்னன் என்கிற திருநாமத்துடன் இலக்குவனுக் கிளையவனாகவும் அவதரித்து இராமனின் அம்சமான பரதாழ்வானின் உயிருக்கு மேலானவன் என்று பேசப்படுமளவில் தனது மற்றொரு அங்கமும் பயனுற வேண்டி பாகவத கைங்கர்யத்தில் ஈடுபட்டு பரதனுக்குப் பணிசெய்து போந்தனன்.

இவ்விரண்டு அவதாரங்களில் இலக்குவன் படமெடுத்தாடும் திருவனந்தனாக செயல் பட்டானெனின் சத்ருக்னன் புற்றுக்குள்ளிருக்கும் திருவனந்தனாக செயல்பட்டான் என்று கூறலாம். புற்றுக்குள்ளிருக்கும் பாம்பின் தன்மை சட்டென்று புலப்படாததுபோல் ஸ்ரீராமாயணத்தில் இலக்குவனைப்போன்று சத்ருக்னனின் செயல்பாடுகள் வெகுவாகக் கூறப்படவில்லை. சத்ருக்னனை பரதனின் உறைவாளைப் போன்றவன் என்றும் ஆசார்யர்கள் குறிப்பிடுவர். புற்றரவு என்பதற்கு புற்றிலிருந்து புறம்பே புறப்பட்டுப் புழுதியடைந்த உடம்பன்றிக்கே தன்னிலமான புற்றிலிருக்கும் பாம்பின் பணத்தின் ஒளியும் கழுத்தின் அகலமும் குறைவு படாமலிருக்கும் என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருப்பாவை (11வது) பாசுர வ்யாக்யானத்தில் அருளிச்செய்வர்.

இங்ஙனம் இலக்குவன் புற்றிற்கு வெளியிலிருக்கும் அனந்தன் என்றால் அவனுக்குப் புழுதி எப்படி யுண்டாயிற்றென்னில், திருச்சித்ரகூடத்திலிருந்த பொழுது இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்துப்போக படையுடன் வந்த பரதனை யுத்தத்திற்கு வருவதாகத் தவறாக எண்ணி பரதனைக் கொல்ல விரும்பியதால் புழுதி படிந்தது. பின்னர் திருமூழிக்களத்தெம் பெருமானைப் பணிந்து தவறுக்கு மன்னிப்பு கேட்டபொழுது பரதனே அங்கு வந்து இலக்குவனை மன்னித்த வகையில் இன்சொற்கள்

கூறி ஆரத் தழுவிக்கொண்டதாக ஸ்தலபுராணம் கூறுகின்றது. பரதனின் இன்சொற்களைத் தானும் செவியுற்று இலக்குவனை அனுக்ரஹித்ததால் இத்தலத்தெம்பெருமானுக்கு திருமொழிக்களத்தான் என்கிற திருநாமமுண்டாயிற்று.

## 2. துவாபர யுகத்தில் திருவனந்தனின் அம்சமாகும் பலராமனும் சுதனும்

த்ரேதாயுகத்தில் யோகத்தில் நிலைநின்ற இராமபிரானுக்கு தன்னியல்பான சேஷத்வ நிலையில் திருவனந்தன் கைங்கர்யம் செய்திருக்கையில், துவாபர யுகத்தில் போகத்தில் நிலைநின்ற கண்ணனுக்கு தமையனாக சேஷத்வ தட்டுமாறி இலக்குவனே நம்பி மூத்தபிரானாக அவதரிக்க நேர்ந்தது. சேஷிக்கு அதிசயத்தை விளைவிக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூப லாபமும் ப்ராப்யமுமாகையாலே அதற்கிசைந்தான். எனினும் தன்னியல்பான சேஷத்வம் நிலை நிற்க வேண்டி சத்ருக்னனின் அம்சமாக சுதன் என்கிற திருநாமத்துடன் வஸுதேவரின் மற்றொரு மனைவியான ஸுநாமை என்கிற தேவரக்ஷிதாவுக்கு அவதரித்துக் கைங்கர்யம் செய்தனன். ருக்மிணி பிராட்டி கண்ணனுக்கு எழுதிய கடிதத்தில் சுதாக்ரஜ: என்று விளித்து சுதனைப்போன்று தானும் தன் ஸ்வரூபானுரூபமான கைங்கர்யம் செய்வதற்கே விரும்புவதைத் தெரிவிக்கிறாள். ருக்மிணி உகந்த இந்தத் திருநாமத்தை பீஷ்மரும் ஸஹஸ்ரநாமத்தில் அனுஸந்திக்கிறார். சத்ருக்னனின் சரித்திரம் போல் சுதனின் சரித்திரமும் பாரதத்திலோ பாகவதத்திலோ அதிகம் பேசப்படவில்லை.

## 3. ‘இளைய’ என்கிற அடைமொழி ஏற்பட்டதன் காரணம்

இளையவில்லி என்கிற திருநாமம் திடமாயிற்று. எனவேதான் ஆராவமுதனுக்குப் பரம்பரா ப்ராப்தமான கைங்கர்யம் செய்து வருகையில் இவரது திருவம்சத்தரான மங்கலத்தில் அப்பன் என்கிற வரதாசார்யர் ஸ்வாமியின் ஞான அனுஷ்டானங்களைப் பறைசாற்றும் வகையில் ‘பட்டர் ஆச்சான்’ (பாட்ராச்சாரியர்) - ஸகல சாஸ்த்ர வல்லுநர் என்கிற சிறப்புத் திருநாமம் ஆராவமுதாழ்வானால் சூட்டப்பட்டது. இன்னமும் இவ்வம்ஶத்தவர்க்கு ஆராவமுதன் ஸந்நிதியில் தனுர்மாதம் முதல் நாளன்று திருவத்யயன கோஷ்டி தொடங்கும் முன்பு ‘சிறுபுலியூர் கந்தாடை பாட்ராச்சாரியர்’ என்கிற அருளப்பாடிட்டு மாலை, பரிவட்டம், ஸ்ரீ சடகோப மரியாதை வழங்கப்படுகிறது. மேலும் திருக்குடந்தையில் யோக நித்திரையில் எழுந்தருளியுள்ள திருமழிசையாழ்வார் ஸந்நிதி தீர்த்த மரியாதைகளும் இளையவில்லி ஸ்வாமி திருவம்ஶத்தவர்க்கு ஏற்பட்டுள்ளது.

## 4. கலியுகத்தில் திருவனந்தனின் அம்சமாக இளையாழ்வாரும் இளையவில்லியும் அவதரித்ததன் காரணம்:

கலியுகத்தில் எம்பெருமான் அவதரிக்காதிருக்கச் செய்தே திருவனந்தன் மீண்டும் இளையாழ்வாராகவும் இளையவில்லியுமாக அவதரிக்க நேர்ந்ததன் காரணத்தை இனி காண்போம். உலகில் பிறக்கும் மனிதர்களுக்கு கல்யாண காலங்களில் அம்மான் சீர்

என்று தாய்மாமன் சீர் வழங்கப்படுவது வழக்கம். இராமாவதார காலத்தில் பரதனுக்கு வாய்த்ததுபோல் இலக்குவனுக்கும் சத்ருக்னனுக்கும் தாய்மாமன் வாய்க்கப்பெறவில்லை எனலாம். இருந்திருந்தால் பரதன் தாய்மாமன் இல்லத்திற்குச் சென்ற போது சத்ருக்னன் பரதனுடன் சென்றிருக்க வேண்டியதில்லை. பின்னர் க்ருஷ்ண, பலராம, சுதனாக அவதரித்த பொழுது தாய்மாமனான கம்ஸன் விரோதியாக இருந்தானே அன்றி அம்மான் சீர் வழங்கவில்லை. எனவே திருவனந்தன் தான் மீண்டும் எம்பெருமானின் நியமனப்படி கலியுகத்தில் பிறக்க நேரிட்டால் திருநாட்டில் தன் கைங்கர்யத்துக்குற்ற துணையாயிருந்து வரும் ஸுமுகனையொத்த தாய்மாமன் வாய்க்க வேண்டும் என்று விரும்பினான்.

மேலும், இராமனுடன் இலக்குவனாக அவதரித்த திருவனந்தன் அப்பிறவியில் இராமபிரான் விபீஷண ஶரணாகதியையேற்றபொழுது கடற்கரை வார்த்தையாக அருளிச்செய்த ராம சரமஶ்லோகத்தை அனுமனுடன் கூடியிருந்து கேட்கப்பெற்றான். அடுத்து கண்ணபிரானோடு பலராமனாக அவதரித்திருந்தபொழுது அர்ஜுனனின் சரணாகதியையேற்று தேர்த்தட்டு வார்த்தையாக கண்ணபிரான் அருளிச்செய்த கீதா ஶாஸ்த்ர சரமஶ்லோகத்தை தேர்க்கொடியிலிருந்த அனுமன் மட்டும் கேட்டிருந்தானேயன்றி அவ்வமயம் தீர்த்த யாத்திரை மேற்கொண்டிருந்ததால் பலராமன் கேட்கப் பெறவில்லை. எனவே திருவனந்தனுக்கு மீண்டும் எம்பெருமானின் நியமனப்படி கலியுகத்தில் பிறக்க நேரிட்டால் இவ்விரண்டு சரமச்லோகங்களின் ஆழ்பொருளை அறவே கற்றறிருந்து மற்ற உயிர்களுக்கும் அறிவித்து அவ்வுயிர்களைப் பெற பத்தியுழவனான எம்பெருமானின் க்ருஷி பலனடையச் செய்யவேண்டும் என்று விரும்பினான்.

இவை மட்டுமின்றி எம்பெருமானின் நியமனப்படி கலியுகத்தில் காரிமாறனாக திருவவதரித்திருந்த சேனையர்கோனைப் பாதுகாக்கத் திருப்புளியாழ்வாராகத் திருவவதாரம் செய்தபொழுது ஆழ்வாரின் ஈரத்தமிழில் இவ்விரண்டு சரமஶ்லோகங்களின் ஆழ்பொருளைக் கேட்டறியப் பெற்றாலும் பிறர்க்கு உபதேசிக்கும் வாய்ப்பு கிட்டாததால் மீண்டும் எம்பெருமானின் நியமனப்படி கலியுகத்தில் பிறக்க நேரிட்டால் ஆழ்வார் அருளிச்செயலால் விளக்கமுறும் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களையும் உலகோர்க்குணர்த்துவதே இரு நா படைத்த பயனாகும் என்று கருதி அதற்கான வாய்ப்பினை எம்பெருமான் அளிக்கும் வரை வாளா விருந்தான். அதே ஸமயம் அவ்வாறு தன்னால் வெளியிடப்படும் மறைப்பொருளை முறைப்படி உபதேசித்து மயர்வற மதிநலமருளும் ஆசார்யனை விட்டுக் கனவிலும் அகலமாட்டாத கனத்த ப்ரேமமும் ஆசார்யன்பால் உண்டாக வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்கவும் விருப்பம் கொண்டிருந்தான்.

உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியும் எம்பெருமானும், தனது அம்சமாக யமுனைத்துறைவரென்கிற ஆளவந்தார் அவதரித்து ஸ்ரீராமாயணத்தின்

செம்மைப்பொருளை ஸு முகனின் அம்சமாய் அவதரித்திருந்த பெரிய திருமலை நம்பியிடத்தும் கீதையின் செம்மைப் பொருளைத் திருக்கோட்டியூர் நம்பியிடத்தும் சேமித்து வைக்க, பெரிய திருமலை நம்பியைத் தாய்மாமனாகக்கொண்டு திருவவதரிக்க திருவனந்தனை நியமித்தனன். அதன்படியே திருவனந்தனும் இலக்குவனையொத்த இளையாழ்வாராக முதலில் திருவவதரித்தனன்.

அவ்வாறு அவதரித்த பொழுது தனது மற்ற பணிகளின் காரணமாகத் தாய்மாமனின் அன்பைப் பூரணமாக அனுபவிக்க இயலாததால் மீண்டும் பெரிய திருமலை நம்பியைத் தாய்மாமனாகக் கொண்டு சத்ருக்னனையொத்த இளைய வில்லியாகத் திருவனந்தன் திருவவதரித்தனன்.

**இளையாழ்வார் வாழித்திருநாமமொன்று**

எண்டிசையெண் ணிளையாழ்வா ரெதிராசன் வாழியே
எழுபத்துநால்வர்க்கெண்ணான்குரைத்தான் வாழியே
பண்டைமறையைத் தெரிவித்த பாடியத்தோன் வாழியே
பரகாலனடியிணையைப் பரவுமவன் வாழியே
தண்டமிழ்நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே
தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே
தெண்டிரைசூழ் பூதூரெம்பெருமானார் வாழியே
சித்திரையிற் செய்ய திருவாதிரையோன் வாழியே

**இளையவில்லி வாழித்திருநாமம்**

பத்தியுடன்பதின்மர்கலைப் பகருமவன் வாழியே
பண்டரங்கர் பதம்நெஞ்சில் பற்றிநின்றான் வாழியே
எத்திராசர் இணையடியே தஞ்சமென்றான் வாழியே
எழில்மறையின் ஏரிக்கோர் மதகானான் வாழியே
முத்திதரும் நெறிதன்னை மொழிந்தருள்வோன் வாழியே
மூது திருமலைநம்பிக் காட்செய்தான் வாழியே
சித்திரையில் ஆயில்யம் சிறக்கவந்தான் வாழியே
சீர் பாலதன்வி குரு திருத்தாள்கள் வாழியே.

★★★

SRIMATE RAMANUJAYA NAMAH
SRIMATE BALADHANVI MAHAGURAVE NAMAH
SRIMATE VARAVARAMUNAYE NAMAH

# A PROFILE OF SRI U.VE. ELAYAVILLI SATAKOPACHARIAR SWAMI (1909 - 1971)

Sri U.Ve. **Elayavilli B. Sriram Swami,** Alwar Thirunagari
(Grandson of Sri U.Ve. Satakopachariar Swami and son of Sri U.Ve. Elayavilli Bhuvarahachariar Swami)

Sri U.Ve.Satakopachariar Swami was born at Melukote (Thirunarayanapuram - Karnataka State) as the scion of the illustrious Anandalwan, the devoted disciple of Sri Ramanuja. His father was by name Sri U.Ve T.A. Tiruvenkatachariar Swami, the mother being Smt. Alamelu Ammal. His paternal Uncle was Sri U.Ve. Govindappangar Swami, a renowned Scholar of four Shastras and the Principal of Melukote Sanskrit College who subsequently became His Holiness Sriranganarayana Jeeyar at Srirangam.

Sri Swami during his childhood days joined the above said Sanskrit College for his primary education. When he was about six years old, he was seen by His Holiness Chinna Kaliyan Ramanuja Jeeyar Swami, the highly reputed 25$^{th}$ pontiff of Sri Vanamamalai Mutt at Nanguneri. The young boy with his charming smiling face and golden bangles adorning his frearms and the curly locks of hair tied up to form a tuft and his forehead being adorned by beautiful and erect thiruman-kaappu (Srivaishnava caste mark), and pure white dhoti with an angavastra embellishing his thin waist, attracted the attention of His Holiness who in turn made kind enquiries about the young charming boy. When he came to know about the boy’s birth and parentage, he drew him with his hands and put him on his lap embracing him tightly. This rare and strange behaviour of His Holiness caused astonishment to all devotees who were assembled there. As his holiness was an expert astrologer, he summoned for the horoscope of the boy and after going through the horoscope, he directed the parents to give the boy in adoption to Sri U.Ve. Elayavilli Srinivasachariar Swami of Alwarthirunagari, who was childless even after having two wives and was in search of a boy for adoption. His Holiness also made necessary arrangements for the adoption. So Sri U.Ve. Satakopachariar Swami became the son of Sri U.Ve. Elayavilli Srinivasachariar Swami. But owing to ill luck, the Swami (Elayavilli Srinivasachariar Swami) could live with his adopted son only for about three years.

Even before the adoption, Sri U.Ve. Srinivasachariar Swami had to fight in the court of law for temple honors at the Alwar Sannidhi, Alwarthirunagari. Finally though he was successful in this attempt, it fetched him several enemies in his village, as a result of which no one was ready to give his son for Sri Swami’s adoption. Finally this culminated into the adoption of a son from Melkote.

Sri Satakopachariar Swami after the demise of his adopted father had to live in the hostile atmosphere. His Holiness Sri U.Ve. Chinna Kaliyan Swami understanding the prevailling condition at Alwarthirunagari, took the boy to his Vanamamalai Math at Nanguneri and under his personal supervision brought him up bestowing on him lavishing love and affection and showering his choicest blessings. He also taught him all texts pertaining to SriVaishnavism. Later on Sri U.Ve. Satakopachariar Swami

moved to Thirunarayanapuram and under the able guidance and tutorship of Sri U.Ve. Govinda Appangar Swami, the Principal of Melkote Sanskrit College and his paternal uncle, learnt all Shastras. He also studied Sribhashyam under Sri U.Ve. Mahavidwan Asoori Periya Ramanujachariar Swami, Prinicipal of Sanskrit College at Sriperumbudur. He also started a school at Alwarthirunagari to teach Nalayira Divya Prabhandam and Sanskrit. He married Mrs. Sriranga Nacchiyar and the couple was blessed with five sons and four daughters. Sri Swami was highly reputed for his scholarship in our Sri Vaishnava Sampradayam. His deep knowledge of Sampradayam and his very attractive appearance drew the attention of Jagadacharya Simhasanadipathi, Sri U.Ve.Kanchi Prativadi Bhayankaram Annangarachariar Swami who not only conferred on him the very meaningful title “Srisookti Ratnakaram”, but also married one of his (Srisookti Ratnakaram Swami’s) daughters to his adopted son, Sri U.Ve. Ranganathachariar alias Selvamani.

Sri Swami was a versatile scholar in Vedic lore, Divya Prabhanda and Itihasa Puranas. He imbibed deep erudition in Nalayira Divya Prabhandam and Rahasya Granthas with their commentaries as a result of which his writings were saturated with powerful and meaningful expressions of Alwars and Acharyas. Even while writing personal letters, he made it a point to write the same on the model of Acharya Hrudayam. This kind of command over the religious texts filled the heart of Sri U.Ve. P.B.A. Swami with astonishment and admiration that was forced to confer the sobriquet Srisookti Ratnakaram on our Sri Swami.

Our Swami was always very gentle in his spirit. Anger was under his control. With his pious and loving qualities, he won the heart of all scholars and laymen alike. He always wore a cheerful countenance and his sense of humour was beyond description. His gigantic appearace, mode of gait, his smiling face, clothing and Dwadasha Urdvapundras (twelve tirumankappu) - all these added to the grandeur of his enslaving personality. He conducted Several Kalashepams both at Alwarthirunagari and its surroundings like Tirunelveli etc. Not being satisfied with this, he moved to the capital city of SriVaishnava realm namely Srirangam, following the path pursued by our Acharyas. There he conducted Periya Tirumozhi Kalakshepam and several Tiruppavai discourses which earned him the encomium, Tiruppavai Kadalmani.

Owing to the ill luck of Srivaishnava world, he embellished Srivaikunta Loka (passed away) after completing 60 years only. The whole Srivaishnava world was plunged in the ocean of misery on hearing his untimely demise. The only consolation was that he left behind him his scholarly son Sri U.Ve. Elayavilli Srinivasa Bhuvarahachariar Swami to contiue his service to the Lord and His devotees.

Sri Swami’s centenary celebrations took place from 26-06-2010 to 30-06-2010 at the Tirumaligai (Mansion) situated at Alwarthirunagari where he lived for several years. Erudite scholars and learned vidwans, arrived at Alwarthirunagari during this period to pay rich and glowing tributes to our Swami.

“Ramanujarya Divya Aagnya Vardhatam Abhi Vardhatam”

★★★

# ஸ்வரூப ப்ரயுக்த தாஸ்யம்

**ஸ்ரீ உ.வே. திருமலை விஞ்சிமூர் ஸ்ரீநிவாஸ வேங்கடாசார்யர் ஸ்வாமி**

ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே எம்பெருமானை ஸமஸ்த கல்யாண குணபரிபூர்ணன் என்று சொல்லியிருக்கின்றார்கள். இதர ஸித்தாந்தங்களுக்கும் நம்முடைய ஸித்தாந்தத்திற்கும் உண்டான வாசி - பகவான் குண பூர்ணன்; அவனுடைய குணானுபவமே நமக்குப் பொழுது போக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். தவிர அந்த குணானுபவத்தை எல்லோரும் ஒத்துக் கொண்டதாக வேதாந்தங்களிலே தெரியவில்லை. இதிலே பெரிய விவாதங்கள் எல்லாமிருக்கிறது. ஆழ்வார் அவதாரம் பண்ணின பிற்பாடு எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணங்களை விபவங்களை எல்லாம் நன்றாக அனுபவித்து, குணமில்லை என்று யார்யாரெல்லாம் சொல்லுகின்றார்களோ அவர்களை எல்லாம் (கழுத்தை) மென்னப்பிடிக்கிறார் ஆழ்வார் என்று முதல் பாசுரத்திலேயே வியாக்யானம் பண்ணியிருக்கிறார் நம்பிள்ளை. **"உயர்வற உயர் நலமுடையவன்"** என்று சொன்ன உடனேயே குணமில்லை என்று சொல்லுகிறவர்களுடைய கண்டத்தை ஆழ்வார் பிடிக்கிறார். குணமில்லை என்று சொல்லுவது அஸம்ப்ரதாயம்; அவைதிகம்.

வேதமே பகவானுடைய குணங்களைப் பற்றி நிறையச்சொல்லியிருக்கிறது. அது ஸ்வபாவமானது. அந்த குணம் ஸ்வாபாவிகமானது. **"ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச"** என்ற இது வேதவாக்யம். ஆகவே ப்ரஹ்மம் ஸகுணமே ஒழிய நிர்குணமில்லை. இதை ஆழ்வார் ஸ்பஷ்டமாக காட்டிக் கொடுத்தார். அந்த அடிச்சுவட்டிலே வந்தவர்களான ஆசார்யர்கள் எம்பெருமானுடைய குணங்களைப் பரக்கப்பேசி அனுபவித்திருக்கிறார்கள். இந்த வேதத்துக்கும் ஆழ்வாருடைய திவ்யப்ரபந்தத்துக்கும் இடையிலே இதிஹாஸங்கள் புராணங்கள். அவைகளிலே பார்க்கிறபோது **"ஸமஸ்தகல்யாணகுணாத்மகோ஽ஸௌ"** என்றும் **"ஸமஸ்தகல்யாண குணாம்ருதோததி:"** என்றும் எம்பெருமானுடைய குணங்களைக் கடலாகப்பேசி அனுபவித்திருக்கின்றார்கள் மஹரிஷிகள். இப்படி எல்லாம் வேதத்திலே இதிஹாஸங்களிலே புராணங்களிலே ஆழ்வார் திவ்ய ஸூக்திகளிலே ப்ரமாணங்கள் நிறைய இருக்கிறபோது பகவானை குணமில்லாதவன் என்று சொல்லலாமா ? ஆகவே பகவான் குணபரிபூர்ணன் என்று ப்ரமாணம் நிர்தாரணம் பண்ணியிருக்கிறது.

திருப்பாவையில் "அங்கண் மாஞாலத்து" என்ற பாசுரத்திலே நம்பின்னைப் பிராட்டி கோபிமார்கள் கோஷ்டியிலே வந்து சேருகின்றாள். "நானும் உங்களிலே ஒருத்தி. நாம் எல்லோருமாகச் சேர்ந்த க்ருஷ்ணனுடைய குணங்களை வாயாரச் சொல்லுவோம்; வாருங்கோள் !" என்று நப்பின்னைப் பிராட்டி எல்லா கோபிகைகளையும் சேர்த்து, கண்ணனுடைய பள்ளிக்கட்டிற்கீழே கூட்டமாயிருந்து அவனுடைய குணங்களை வாயாரப் பேசுகின்றார்கள். யார்யார் எந்தெந்த குணத்திலே ஈடுபட்டார்களோ மனதைப்

பறிகொடுத்தார்களோ அந்தந்த குணத்தை வாயாரச்சொல்லித் துதிக்கிறார்கள் கோபிமார்கள் என்பது இந்தப் பாசுரத்தினுடைய சாரார்த்தம்.

இதுக்குமேலே ஜீவன் எம்பெருமானுக்கு அடிமையாயிருக்கிறது - இரண்டு விதத்திலே. அதைப்பற்றி ரஹஸ்ய க்ரந்தங்களிலே நம்முடைய பூர்வாசார்யர்கள் விரிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ''ஸ்வரூப ப்ரயுக்த தாஸ்யம்'' என்றும் ''குணக்ருத தாஸ்யம்'' என்றும் இரண்டுவிதமான அடிமை. ஸ்வரூபக்ருத தாஸ்யம் என்றால் ஸகலசேதனங்களும் எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பது ஸஹஜம். அதற்கு ஸ்வரூபக்ருத தாஸ்யம் என்று பெயர். 'அடியேன்' 'அடியேன்' என்று சொல்வது எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஸமானமானது. நித்யசூரிகளுக்கும் முக்த ஆத்மாக்களுக்கும் நாச்சிமார்களுக்கும் பத்த ஜீவாத்மாக்களுக்கும் முமுக்ஷுக்களுக்கும் பொதுவானது. ஜீவாத்மாக்கள் என்று சொன்னால் எத்தனை படியாக ஜீவாத்மாக்கள் பார்க்கப்படுகின்றார்களோ, அத்தனை ஜீவாத்மாக்களுக்கும் அடியேன் என்று சொல்லுவது ஸஹஜம். அது அவர்களுடைய ஒரு கடமை. இதற்குத்தான் ஸ்வரூபம் என்று பெயர். ''நீர் யார் ?'' என்று கேட்டால் ''அடியேன்'' என்றுதான் சொல்ல வேணுமே ஒழிய வேறு வார்த்தை கிடையாது.

இனிமேல் இதிலே இன்னமொரு விஶேஷம் என்ன என்றால் பகவானுடைய ஶௌர்ய வீர்ய பராக்ரமங்களுக்குத் தோற்று 'அடியேன்' என்று சொல்லுவது. அவனுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களுக்குத் தோற்று 'அடியேன்' என்று சொல்லுவது. இதற்கு 'குணக்ருத தாஸ்யம்' என்று பெயர். இதை இரண்டு த்ருஷ்டாந்தங்களாலே ஆசார்யர்கள் நமக்கு விளக்கியிருக்கின்றார்கள்.

பிராட்டி பெருமாளோடு தண்டகாரண்யத்திற்கு புறப்பட்டாள். அப்போது அவளுக்கு அரண்யத்தினுடைய வாஸம். அந்த தண்டகாரண்யத்தினுடைய த்வாரம் என்று சொல்லப்படக்கூடிய இடத்திலே அத்ரி பகவான் ஆஶ்ரமத்தை அமைத்துக்கொண்டு வசிக்கிறார். அத்ரிபகவானுடைய மனைவிக்கு அநஸூயைப்பிராட்டி என்று பெயர். அங்கே போய் பெருமாள், இளையபெருமாள், பிராட்டி ஆகிய மூன்று பேரும் அத்ரி பகவானை ஸேவித்துவிட்டு அங்கேயிருக்கிறார்கள்.

அப்போது பிராட்டி அநஸூயைப் பிராட்டியினிடத்திலே தனியாகப் பேசுகிறாள். பிராட்டிக்கும் அநஸூயாதேவிக்கும் நடக்கக்கூடிய அந்த பேச்சிலே ஒரு கேள்வி கேட்டாள் ரிஷியினுடைய பத்தினியான அநஸூயை, ''அம்மா ஸீதை ! ஸ்ரீராமனோடு கூட காட்டுக்குப் புறப்பட்டு வந்திருக்கிறாயே நீ ஸஹஜமாக வந்திருக்கிறாயா ? இல்லை இராமனுடைய ஸௌந்தர்யாதி குணங்களிலே ஈடுபட்டு வந்திருக்கிறாயா ? நீ எப்படி வந்திருக்கிறாய் ?'' என்று கேட்கிறாள். ஏன் என்றால், ''அவன் மிகவும் அழகன்; குணபரிபூர்ணன். அவனுடைய குணங்களிலே மனதைப் பறிகொடுத்து வந்திருக்கலாமல்லாவா ? நீ எப்படி வந்திருக்கிறாய் ?'' என்று அநஸூயைப் பிராட்டி ஸீதா பிராட்டியைப் பார்த்துக் கேட்கிறாள். அப்போது பிராட்டி பதில் சொல்கிறாள்: ''அம்மா அநஸூயாதேவி ! நீர் நினைக்கின்ற மாதிரி இராமனுடைய குணங்களிலே ஈடுபட்டோ

அழகு முதலான சிறப்புகளிலே ஈடுபட்டோ அவர் பின்னாலே நான் வரவில்லை; அவர் எனக்கு பர்த்தா; அவரோடு கூட வர வேண்டியது எனக்குக் கடமை; அவர் அழகில்லாதவராக இருந்தாலும் குணமில்லாதவராக இருந்தாலும் இப்படித்தான் நான் வருவேன்; அவரை விட்டுப்பிரியாமலிருப்பேன்'' என்று தன்னுடைய மனதிலே இருக்கக்கூடியதை பிராட்டியே வெளியிட்டிருக்கிறாள்.

இந்த சரித்ரத்தை மனதில் கொண்டே **“அநஸூயைப் பிராட்டிக்கு பிராட்டி அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது”** என்று ஸ்ரீவசநபூஷணத்திலே பிள்ளைலோகாச்சார்யார் அருளிச் செய்திருக்கிறார். ஒரு ஜீவாத்மா எம்பெருமானுக்கு அடிமையாய் இருப்பது அவன் குணத்தைக் கண்டோ அவனுடைய மற்றச் சிறப்புக்களைக் கண்டோ இல்லை. ஜீவாத்மா இயற்கையாகவே எம்பெருமானுக்கு அடிமைதான்.

**ஸ்வத்வம் ஆத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்.** ஆகவே எம்பெருமான் ஸ்வாமி; எல்லா ஜீவாத்மாக்களும் அவனுக்கு சொத்துக்கள். அவனுக்கு அடிமைகள். இப்படி வேதாந்தம் ப்ரம்ஹத்திற்கும் சேதனர்களுக்கும் ஸம்பந்தம் சொல்லுகிறபோது ஸ்வாமி - தாஸ பாவம் சொல்லியிருக்கிறது. இதுதான் இயற்கை; ஸஹஜம். இதை நம்மாழ்வார் அருளிச் செய்தார்;

**கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட**
**அடியன் அறிவருமேனிமாயத்தன் ஆகிலும்**
**கொடிய என்நெஞ்சம் அவன் என்னே கிடக்கும் எல்லே!**
**துடிகொள் இடைமடத்தோழி! அன்னை என் செய்யுமே.**

தோழியைப் பார்த்து பராங்குச நாயகி பேசுகின்றாள்: ''அம்மா! என் நாயகன் என்னை ரொம்ப கொடுமைப்படுத்தினாலும் சரி. அவர் எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தாலும் சரி. நான் அவரை மறக்கமாட்டேன். எனக்கு அவரைத்தவிர வேறு ஒருவரும் கிடையாது. அவன் கடியன்; கொடியன்; நெடியமால்; உலகங்கொண்ட அடியன்; அறிவருமேனிமாயத்தன். இத்தனையும் தன் நாயகனுக்குரிய தோஷங்கள். சின்னக்காலைக்காட்டி பெரியகாலாலே அளந்தானே அது ந்யாயமா. அவன் ஸேவை சாதிக்காமல் அந்தர்யாமியாக மறைந்திருக்கிறானே இது ந்யாயமா. இப்படிப்பட்ட கடியன் கொடியனாகயிருந்தாலும் அவனைத்தவிர என்நெஞ்சு வேறு ஒன்றைச் சிந்திக்காது. கொடிய என் நெஞ்சம் அவன் என்னே கிடக்கும். இதனாலே அந்த ப்ரஹ்மமான பகவான் குணமில்லாத வனாகயிருந்தாலும் கூட நான் தாஸானுதாஸனாகத்தான் இருப்பேன். இது என்னுடைய ஸ்வரூபம். அவனுடைய சிறப்புக்களைப் பார்த்து நான் அடிமையில்லை'' என்று எந்த ப்ரமாணங்கள் இப்படிச் சொல்லுகிறதோ இதை வைத்துப்பார்க்கிற போது இந்த ஆத்மாவிற்கு அடிமை என்பது ஸ்வரூபம். இதுக்கு ஸ்வரூபக்ருத தாஸ்யம் என்று பெயர். ஒரு காரணத்தைப் பற்றி இந்த அடிமை வரவில்லை,

இனிமேல் அடுத்தது ஸ்ரீராமாயணத்திலே ஒரு வசனம். பெருமாள் இளையபெருமாள் இரண்டுபேரும் பிராட்டியைத் தேடிக்கொண்டு வருகிற காலத்திலே திருவடி தென்பட்டார். திருவடிக்கும் இவர்களுக்கும் ஸம்பாஷணை நடைபெறுகிறது.

அப்போது, ‘‘நீங்கள் யார்?’’ என்று திருவடி கேட்கிறார். அப்போது தங்களுடைய வ்ருத்தாந்தங்களையெல்லாம் பெருமாளும், இளைய பெருமாளும் சொல்லுகிறார்கள். அப்போது இளைய பெருமாள் சொல்லுகிற போது தன்னுடைய வ்ருத்தாந்தங்களை எல்லாம் சொல்லி, ‘‘**அஹம் அஸ்ய அவரோ ப்ராதா குணைர் தாஸ்யம் உபாகத:** இவர் எனக்கு சகோதரர். உடன் பிறந்தவர். ஆனால் அவரைப்போலே நான் ஸமானமாக இருக்கிறவனில்லை. லோகத்திலே ஸஹோதரர் என்று சொன்னால் நாலுபேரும் சமானமாகயிருப்பவர். சொத்திலே எல்லாரும் பங்குபோட்டு பிரித்துக்கொள்ளுவார்கள். நான் அப்படிப்பட்டவன் இல்லை. இவருடைய குணங்களிலே நான் ரொம்ப அடிமையாக்கப்பட்டேன். இப்படி இவருடைய குணங்களுக்கு தாஸபூதனாக ஆகி, அவர் பின்னாலே வந்துவிட்டேன். இவர் குணங்கள் இவருக்கு என்னை அடிமையாக்கிவிட்டது. ஆகையினாலே **அஹம் அஸ்ய அவரோ ப்ராதா** இவருக்கு நான் இளைய சஹோதரன். ஆனாலும் **குணைர் தாஸ்யம் உபாகத:** குணங்களாலே நான் அவருக்குத் தோற்றுப்போய் அடிமையாகி அவருக்குக் கைங்கர்யம் பண்ணுவதற்காக வந்திருக்கிறேன்’’ என்று சொன்னார்.

இப்படி இளையபெருமாளுடைய வாக்யத்தைப் பார்க்கிறபோது பகவானுடைய குணங்களிலே தோற்று அடிமையானது என்று ஒன்று உண்டு என்று தெரிகிறது. ஆக இயற்கையாக ஸ்வரூபத்தை உணர்ந்து அடிமையாவது ஒன்று. அவனுடைய குணங்களுக்குத் தோற்று அடிமையாவது மற்றொன்று. இப்படி எம்பெருமானுடைய குணங்களுக்குத் தோற்றுப்போய் ‘அடியேன்’ என்று அவன் திருவடிகளிலே விழுவது ‘‘அங்கண் மாஞாலத்து’’ என்கிற இந்தப்பாசுரத்திலே சொல்லுவதற்கு உதாரணமாக ஆகிறது. இங்கு கோபிமார்கள் ஸ்வரூபத்தை உணர்ந்து அடியேன் என்று சொல்லவில்லை. கண்ணனுடைய குணங்களுக்குத் தோற்று யார் யார் எப்படி எல்லாம் தோற்றார்களோ அந்த தோற்ற துறையிலே குணங்களை வாயாரக் கொண்டாடுகிறார்கள் என்பது இளையபெருமாள் பெருமாளுடைய குணங்களுக்குத் தோற்றுப் பின் வந்தது போலே கண்ணனுடைய குணங்களிலே தோற்று வாயார குணங்களைப் பேசுகிறார்கள் என்பது இந்தப் பாசுரத்திலே ஸாரமாக அனுபவிக்கக்கூடியதான அர்த்தம். இந்த குணங்கள் என்று சொல்லுகிறபோது நம்ம ஸித்தாந்தத்தினுடைய தனிப்பெரும் சிறப்பை நாம் அவஶ்யம் வாயாரச்சொல்லி அனுபவிக்க வேண்டியவர்கள். (ஏனென்றால் நிர்குணப்ரஹ்மம் என்ற தத்வத்தை சிலர் சொல்லியிருக்கிறதினாலே.) நாம் பகவானுடைய குணங்களை வாயாரச்சொல்லி அவஶ்யம் அனுபவிக்க வேண்டும்.

ஆசார்யர்கள் ஒரு வாக்யம் எழுதுகிறார்கள் - **‘‘வஸ்துவிற்கு குணத்தாலேயிறே உத் கர்ஷம்’’.** லோகத்திலே பார்க்கலாம். ஒரு வஸ்து நன்றாகயிருந்தால் ஆசைப்படுகிறார்கள். அந்த வஸ்து நன்றாக இல்லையானால் தூர தூக்கி எறிந்து விடுகிறார்கள். ஒரு வஸ்துவுக்கு அதை ஆதரிப்பது என்பது எப்பொழுது வருகிறது. அந்த வஸ்துவினிடத்திலே உண்டான குணத்தினாலே. குணமில்லையானால் அதை யாரும்

ஏற்கமாட்டார்கள். இது உலகத்திலே பார்க்கப்படுவது. இராமாயணத்தை ஆரம்பிக்கிற போது கம்பன் சொல்லுகின்றார்: ''இந்த ராமாயணக் கதையை நான் எதுக்காகச் சொல்கிறேன் தெரியுமா ? இராமனுடைய குணங்களை அனுபவிப்பதற்காகத்தான் இராமாயணக்கதையைச் சொல்கிறேன்'' என்றார். **''அவன் குணக்கடல் ஆடுதல் நன்றன்றோ''** இராமனுடைய குணங்களை அனுபவிக்கிறது தான் நமக்கு அனுபவம் - பொழுதுபோக்கு. இராமாயணத்துக்கு உள்ளே சொல்கிறார்: ஒரு குஹன், ஒரு சுக்ரீவன், ஒரு திருவடி, ஒரு விபீஷணன் மற்றும் அயோத்யா வாஸி ஜனங்கள், தண்டகாரண்யத்திலேயிருக்கக்கூடிய மஹரிஷிகள், இப்படி எத்தனையோ பேர் பார்க்கப்படுகின்றார்கள். எல்லோரும் இராமனிடத்திலே ஈடுபடுகின்றார்கள். குஹன் ஏன் இராமனிடத்திலே ஈடுபட்டான் ? அங்கே சொல்லுகிறார் கம்பன் **''குணங்கண்டன்றே இராமன்மேல் நிமிர்ந்த காதல்''** இராமனுடைய குணத்திலே ஈடுபட்ட நான் ஒரு நீசன். அவன் பெரியவன். அப்படிப்பட்ட ஒரு உயர்ந்தவன் ஒரு நீசனான என்னோடு கூட பரிமாறினானே; என்னகுணம் என்று அவனுடைய ஸௌசீல்ய குணத்திலே ஈடுபட்டான் குஹன். அவனுடைய ஸௌலப்ய குணத்திலே ஈடுபட்டார்கள் மஹரிஷிகள். நாம் எந்த ப்ரஹ்மத்தை மனதிலே த்யானம் பண்ணிக்கொண்டிருக்கிறோமோ அந்த ப்ரஹ்மம் இப்படி ஒரு ரூபத்தோடே வந்து நமக்கு சேவை கொடுக்கிறதே.

**ரூப ஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் விஶேஷத: |**
**தத்ருஶு: விஸ்மிதாகாரா: ராமஸ்ய வனவாஸிந: ||**

என்று ஒருகாயும் கிழங்கும் சருகு இலையும் சாப்பிட்டு வாழக்கூடியவர்களான மஹரிஷிகள் பெருமாளுடைய ஸேவையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். இது ஸௌலப்யகுணம். தோஷங்களைப்பார்த்து தூரத்தள்ளாமல் ஒரு விபீஷணனைப் பெருமாள் சேர்த்துக் கொண்டாரே. அது வாத்ஸல்ய குணம். இப்படி எம்பெருமானுடைய வாத்ஸல்யம், ஸௌலப்யம், ஸௌசீல்யம் முதலான குணங்களிலே ஈடுபட்டார்கள்.

இப்படி இந்த ஆத்மாவிற்கு தாஸ்யமாய் இருக்கும் இருப்பை இரண்டு விதமாகச் சொன்னாலும் ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யம் (இயற்கையாகவே அடிமையாய் இருக்கும் இருப்பு) தான் ப்ரதானமாகச் சொல்லப்படுகிறது. **''குணக்ருததாஸ்யத்திலும் காட்டில் ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதானம்''** என்னும் ஸ்ரீவசனபூஷண சூர்ணிகையையும் காணலாம். இப்படி ஜீவாத்மாத்மாக்களைத் திருத்தி அவர்களுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யத்தை காட்டிக்கொடுத்து திருத்திப் பணிகொண்டு ஆழ்வார் திருநகரியில் ஆழ்வாருக்கு அந்தரங்க கைங்கர்யங்களைச் செய்து கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீஸூக்தி ரத்னாகரம் ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாச்சார்ய ஸ்வாமியினுடைய ஶதாப்தி மஹோத்ஸவத்தில் அந்வயிக்க பொருளல்லாத அடியேனைப் பொருளாக்கி இந்த வாய்ப்பு கொடுத்த ஸ்வாமியின் திருக்குமாரர்களுக்கும் திருப்பேரன்மார்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★★★

# கூரேசரும் இளையவில்லி ஸ்வாமியும்

**ஸ்ரீ உ.வே. வானமாமலை வித்வான்**
**திருமலை அனந்தாண்பிள்ளை N.S. கிருஷ்ண ஐயங்கார்**
ஸ்ரீரங்கம்.

எம்பெருமானுடைய வைபவத்தை பேசி முடித்திடலாம். எம்பெருமானார் வைபவத்தை பேசித்தலைக்கட்டி விட முடியாது என்பர் முதலியாண்டான், எம்பார் முதலான ஆசார்யர்கள். ஆனால் எம்பெருமானார் வைபவத்தைப் பேசித்தலைக்கட்டினாலும் ஆழ்வான் வைபவத்தைப் பேசித்தலைக்கட்ட முடியாது என்பர் ஆசார்யர்கள் அனைவரும்.

இவ்வாழ்வானோடு ஒத்தாரும், மிக்கானவர்களும் முன்னும் அவதரித்ததில்லை. பின்னும் அவதரிக்கப் போவதில்லை. எம்பெருமானின் திருவாணையினால் ஆழ்வான் தாமே மீண்டும் இந்நிலவுலகில் அவதரித்தாலும் முன்பு அவதரித்த தன் நிலையை அநுகரிக்க எவ்வளவு முயன்றாலும் எவ்வகையிலும் வல்லவர் அல்லர் என்று கூறும்படியாக இருக்கும் இவர் வைபவம்.

புருஷகுணங்கள் யாவற்றிலும் சிறந்த காருண்யம், ஆசார்ய பக்தி, பகவத் பக்தி, வைராக்யம், பாண்டித்யம், ஸத்கர்மாநுஷ்டாநம் முதலிய எண்ணில் பல்குணங்களுக்கு நிலைகளனாக விளங்கும் ஆழ்வானது சரிதத்தை அநவரதம் அநுஸந்திப்பது ஸ்ரீவைஷ்ணவர்கட்கு இன்றியமையாததாகும்.

**அவதாரம்:**

கச்சியம்பதிக்கு வடமேற்குத் திசையில் உள்ளது கூரம் என்னும் மாநகரம். அங்கு இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஸௌம்ய வருஷம் தை மாதம் ஹஸ்த நக்ஷத்திர நன்னாளில் அவதரித்தவர். இவருக்குத் திருமறுமார்பன் என்று பெயர். வடமொழியில் ஸ்ரீவத்ஸாங்க மிச்ரர் என்று வழங்குவர்.

எம்பெருமான் நல்லோர் வாழவும், தீயோர் அழியவும், அறந்தனை நிறுத்தவும் அவதாரம் செய்யத்திருவுள்ளம் பற்றி அவ்வாறே செய்தருளினான். அத்தோடு நில்லாமல்

**"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்**
**நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்**
**புணையாம் அணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்**
**அணையாம் திருமாற்கரவு"**

என்கிற பொய்கையாழ்வார் திருவாக்குப்படி எல்லா அடிமைகளையும் செய்யும் ஆதிசேஷனை ஸ்வாமி எம்பெருமானாராக அவதரிக்கச் செய்து, தான் கூரத்தாழ்வானாகத் திருவவதரித்து, கூடவே இருந்து கைங்கர்யங்கள் பல புரிந்தான்.

**ஆழ்வான் என்ற திருநாமம்:**

கூரேசர் பகவத் விஷயத்தில் மிகவும் ஆழங்காற்பட்டவர். எம்பெருமானார் இவரிடம் பகவத் விஷயம் கேட்க ஆசைப்பட்டார். கூரேசர் அடிமைதனில் எல்லைநிலமாகத் தம்மை எண்ணியிருப்பவர். அதனால் ஆசார்யரான தான் (எம்பெருமானார்) எங்ஙனம் கேட்க இயலும்! என் செய்வது? என்று சிந்தித்தார். அதன் விளைவாக ஆழ்வானையிட்டு முதலியாண்டான் முதலியவர்கட்கு திருவாய்மொழி விரிவுரை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு கேட்ட முதலிகள், மறுநாள் எம்பெருமானாரிடம் ஆழ்வான் சாதித்ததை வந்து விண்ணப்பிக்க வேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்யப்பெற்றது.

திருவாய்மொழியின் முதற்பாசுரத்தை (உயர்வற உயர்நலம் எனத்தொடங்கும் பாசுரம்) சொல்லப்புக்கவாறே, கூரேசர் மதியெல்லாம் உள்கலங்கி மோஹித்து வீழ்ந்தார். எம்பெருமானுக்கு குணம் என்பதே கிடையாது என்று கூறும் பிற சமயிகளின் மிடற்றை பிடித்தாற்போலே "உயர்வற உயர்நலமுடையவன் எனறு பேசுவது என்னே!" என்று வியந்து கண்ணும் கண்ணீருமாய் மேலே பேசமுடியாமல் மூர்ச்சையடைந்தார்.

இப்படி இவர் மோஹித்த விஷயத்தை முதலிகள் எம்பெருமானாரிடம் விண்ணப்பித்தனர். அவரும் விரைந்து வந்து கூரேசரைப் பார்த்தார். உகந்தார். **"எத்திறம் உரலினோடு ஏங்கியிருந்த எளிவே"** என்று கண்ணனின் எளிமையை நினைத்து நம்மாழ்வார் ஆறுமாதம் மோஹித்துக் கிடந்ததை ஸேவிக்கப்பெறாத குறைதீர இன்று நம் ஆழ்வானை சேவிக்கப்பெற்றோம் என்று மனமுருகிக்குரல் தழுதழுத்துப் பேசி, தண்டனிட்டு நெடும்போது பார்த்திருந்தும் அவர் உணராமையினால் அவரது முதுகைத்தட்டி "ஆழ்வான்! ஆழ்வான்!" என்று உணர்த்த, கூரத்தாழ்வானும் உணரும் போதே "உயர்வற உயர்நலம் உடையவன்" என்று கூறிக்கொண்டே எழுந்திருந்தார். உணர்வில் ஆழ்வாரைப்போலேவே விளங்கியமையால் எம்பெருமானார் "ஆழ்வான்" என்றே கூறினார். அன்றுமுதல் இவருக்கு ஆழ்வான் என்று திருநாமம் வழங்கலாயிற்று.

**ஆழ்வானுடைய ஆத்ம குணபூர்த்தி:**

அக்காலத்தில் ஆண்டுவந்த சோழ அரசன் ஸ்ரீவைஷ்ணவ சமய விரோதியாய் விளங்கினான். அவன் எல்லா விஷ்ணு ப்ரதிமைகளையும் எடுத்துவிட வேண்டும் என்று எண்ணினான். அப்போது அவனுக்கு வேண்டியவர்கள் மந்த்ரபூர்வகமாக ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற ப்ரதிமைகளை அழியச்செய்தால் உனக்குப் பெருத்த தீங்கு விளையும் என்றனர். அதற்கு அவன் அப்பிரதிமைகளில் உள்ள தெய்வத் தன்மையை அழியச் செய்ய, ஒரு பிராம்மணனுக்குப் பணம் கொடுத்து "நீ அத்ருச்யாஞ்சனம் (பிறர் கண்ணில் படாதவாறு ஒருவரை மறைக்க வல்ல ஒரு வகையான மையை) இட்டுக்கொண்டு அழியச்செய்" என்று ஏற்பாடு செய்தான். அதன்படி அவன் பல கோயில்களில் பகவத் விக்ரஹங்களைக் கடலில் எடுத்து எறிகிற செய்தியை எம்பெருமானார் கேட்டு, "நாம் நெடுநாளாகத் திருவரங்கம் பெரிய கோயிலை விடாமல் காத்து வருகிறோம். இதற்கு

அழிவு வரும்படி ஆஸுரவர்க்கம் ஏற்பட்டுவிட்டதே! இனி என் செய்வோம்!'' என்று கவலைப்பட்டுப் பெரிய நம்பிகளுடன் ஆலோசனை செய்தார். பெரிய நம்பிகள் ''நாம் பெருமாளுடைய எல்லையிலே ஒரு பிரதக்ஷிணம் வருவோம் என்றும், உம் சிஷ்யர்களில் ஒருவனை என் பின்னே வரும்படி செய்ய வேண்டும். அவன் ஒருவன் பின்னே போகிறோமே என்று நெஞ்சில் தோன்றாதபடி வரக்கூடியவனாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிஷ்யனை அனுப்பும்'' என்று எம்பெருமானாரிடம் வேண்டினார்.

இப்படிப்பட்ட குண பூர்த்தியுள்ள சிஷ்யன் ஆழ்வான் ஒருவரே என்பது எம்பெருமானாருக்குத் தெரியும். ஆனால் அது பெரிய நம்பிகளின் திருவாயிலிருந்து வரவேணும் என்று கருதி இப்படிப்பட்ட சிஷ்யன் இவ்விடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினார். பெரிய நம்பிகள் அருகில் ஆழ்வான் இருந்ததை அறிந்து ''நம் கூரத்தாழ்வானை அனுப்பலாகாதோ!'' என்று கூறியதைக் கேட்ட ஆழ்வான், ''நம்பிகள் நம் ஸ்வரூபத்தின் உண்மையை இங்ஙனே அறிந்து பல சிஷ்யர்களின் முன்னே இப்படி அருளிச் செய்யும்படியான பாக்கியம் பெற்றோமே'' என்று பெருமகிழ்ச்சியடைந்து நம்பிகளின் திருவுள்ளப்படியே ப்ரதக்ஷிணத்திற்கும் பின்னே சென்றார். இந்த ஐதிஹ்யம் ''பலரடியார் முன்பருளிய பாம்பணையப்பன் அமர்ந்துறையும்'' (திருவாய் 7-10-5) என்ற பாசுர வ்யாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது.

**கூரத்தாழ்வானின் ஊராண்மை:**

''பேராண்மை என்பதறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு'' - (குறள் - பொருட்பால் - 78-3)

பகைவன்மேல் போரிடும்போது தாட்சணியம் கொள்ளாமல் வீரத்தைக்காட்டி அழித்தல் பேராண்மை ஆகும். ஆனால் போரில் பகைவர்க்கு ஒரு தாழ்வுவரின் இரக்கம் கொண்டு அது தீர்த்தற்பொருட்டு உபகரிக்கும் தன்மை அதன் கூர்மை என்பர். இதற்கு எடுத்துக்காட்டாக இலங்கை வேந்தன் போரிடைத்தன் தானை முழுதும் பட தமியனாயகப்பட்டானது நிலையை நோக்கி அயோத்தியார் இறை மேற்கொள்ளாது ''இன்று போய் நாளை நின்தானையோடுவா'' என விட்டாற் போல்வது என்று பரிமேலழகர் கூறுபர். இராவணன் முதல் நாள் போரில் எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையோடு நின்ற காலையில் பெருமாள் ''இன்று போய் போர்க்கு நாளைவாவென நல்கினான் நாகிளங்கமுகின் வாளைதாவுறு கோசலை நாடுடை வள்ளல்'' என்று கூறினான் என்பது பிரசித்தமானது. இக்குணத்தை ஆழ்வான் **''யத்தாத்ருசாகசம் அரிம் ரகுவீரவீரக்ஷ்ய விச்ரம் யதாம் இதி முமோசித முக்த மாஜௌ! கோயம் குண: கதன கோடிகத: கியான்வா கஸ்ய ஸ்துதே: பதம் அஹோ பத கஸ்ய பூமி:''** என்று அதிமாநுஷஸ்தவத்தில் புகழ்ந்தும் வியந்தும் பாராட்டுகிறார்.

சோழராஜன் அவையில் நாராயணன் சமயத்தை நாட்டும் காலையில் கூரத்தாழ்வான் கண்ணிழப்பதற்குக் காரணமானவன் நாலுரான் என்பவன். கண்களை

இழந்த கூரத்தாழ்வான் எம்பெருமானார் நியமனப்படி பேரருளாளனிடம் கண்ணைப்பெற வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டியிருக்க, **“பாகவதாபசாரத்தால் நரகில் செல்ல வேண்டிய நாலூரானுக்கும் நான்பெற்ற பேறு கிடைக்க வேண்டும்”** என்று வேண்டினார். “அன்று சனகராசன் திருமகளார்க்கு அல்லல் இயற்றும் அரக்கனை ‘இன்றுபோய் நாளை வா’ என்னும் இறையவன் என் ஆழ்வானுக்கு இணை ஒவ்வான்”, “அன்று தன்னை நலிவித்த நாலூரானுக்கு நலம் புரிந்தோன் என்றும் வாழ்க வாழ்க” (இராமாநுசார்ய திவ்ய சரிதை) என்றபடி இராமபிரானைக்காட்டிலும் கருணையில் கூரத்தாழ்வான் விஞ்சியவர் என்பது போதரும். சக்ரவர்த்தி திருமகனிடம் கண்ட இக்குணத்தை மிக வியந்து போற்றிய ஆழ்வானிடம் இக்குணம் விஞ்சியிருந்ததால் “இராமபிரானும் ஆழ்வானுக்கு நேர் ஒவ்வான்” என்று கூறினார். ஆதலால் ஆழ்வானுக்கு நிகர் இல்லை! இல்லை! இல்லை!

ஆழ்வானிடம் விஞ்சியிருந்த இவ்வகை ஒப்பற்ற குணங்களை நாம் நம் காலத்தில் ஸ்ரீஸூக்திரத்நாகரம் ஸ்வாமியிடம் கண்டு அநுபவித்தது நம் பரம பாக்யமாகும்.

அனைவரும் போற்றும் இக்குணங்களைப் பெற்றிருந்த நம் இளையவில்லி (கற்குளம்) ஶடகோபாசார்யரிடம் நெல்லை மாநகர வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு மார்கழி மாஸத் திருப்பாவை உபந்யாஸத்தில் முப்பது நாட்களும் நேரில் அநுபவித்தேன். அத்வைதிகளும் ஸ்மார்த்தர்களுமே நிறைந்த நெல்லையில் நம் ஸ்வாமியையும் அவர்தம் திருக்கல்யாண குணங்களையும் ஜ்ஞானவைஶத்தையும் அவர்கள் கொண்டாடியதை நினைத்துப் பரவசப்பட்டு நின்றேன்; இந்த ஸ்வாமி பொற்காலிட்டதால் (இந்த நெல்லை வரதராஜப்பெருமாள் முதன் முதலில் உபந்யஸித்ததால்) இந்த வேற்று சமயத்தினரே பின்பு ஒருகால் வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ உ.வே. ந்யாய வேதாந்த வித்வான் வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியை அழைத்து, அவரிடம் “பகவத்கீதை பாஷ்யம்” கேட்டு மெய்மறந்தனர்.

★★★

# ப$_4$க$_3$வானுடைய நிர்ஹேதுகோபாயத்வம்

**திருப்புல்லாணி ஸ்ரீ உ.வே. பா. ஸுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி**
ஸ்ரீரங்கம்

## “ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே”

– ஸ்ரீவசநபூ$_4$ஷணம் 70

ப்ராப்தாவும் ப்ராபகனும் ப$_2$லியும் (ப்ராப்திக்கு உகப்பானும்) அவனே என்பதால் அவனுடைய உபாயத்வமானது நிர்ஹேதுகம் என்றர்த்த$_2$ம். சேதனன் ப$_4$க$_3$வானுக்கு ப்ராப்யனாகிறான், ஈஶ்வரன் இவனைப் பெறும் ப்ராப்தாவாகிறான். பரமாத்மாவான அவன் ஸ்ரீவைகுண்ட$_2$த்தில் பரிபூர்ணனாக இருந்தாலுங்கூட ப$_4$க்திசபலனாகவே இருக்கிறான். அதாவது லீலாவிபூ$_4$தியிலுள்ள நம்மிடம் தன் விஷயமான ப$_4$க்தி உண்டாக வேணும் என்று ஆசைப்படுபவனாகவே உள்ளான். நித்யர்களாலும் முக்தர்களாலும் ப$_4$க்தியானது செய்யப்பட்டாலுங்கூட அபி$_4$நவப$_4$க்திசபலத்வம் (புதிதாக உண்டான ப$_4$க்தியை விரும்புகை) அவனிடம் உள்ளது. எனவே நிரதிஶயஸௌந்தர்ய ஸௌஶீல்யாதி$_3$ கு$_3$ணாவிஷ்காரரூபமான தன்னுடைய ஸாத$_4$நாநுஷ்ட$_2$ாநத்தால் அக்ரூர-மாலாகாராதி$_3$களிடத்திலும் கோ$_3$பிகைகளிடத்திலும் அபி$_4$நவ(புதிதான) ப$_4$க்தியை உண்டாக்கி அப்படிப்பட்ட சேதநனைத் தானே அவதரித்துப் பெறுகிறான்.

உபாஸகர்களுக்கும் அபி$_4$நவப$_4$க்தியானது (புதிதாக உண்டான ப$_4$க்தியானது) இருக்கிறது. ஆனாலும் அது மோக்ஷத்துக்காகப் பண்ணப்படுவதால் ஸ்வாதிஶயஸாத$_4$நமாயுள்ளது (தனக்கு மேன்மையை விளைவிப்பதற்காக உள்ளது). எனவே அதில் ப$_4$க$_3$வானுக்கு அத்யந்த ப்ரீதி என்பதில்லை. எனவே அவன் அபி$_4$நவப$_4$க்திசாபல்யத்தினால் ராமக்ருஷ்ணாதி$_3$ரூபேண மநுஷ்யஸஜாதீயனாய் அவதரித்தும், அர்ச்சையாக அவதரித்தும் ஸௌந்த$_3$ர்யாதி$_3$ கு$_3$ணாவிஷ்காரரூபமான ஸாத$_4$நத்தை அநுஷ்டி$_2$த்து அதனால் உண்டானதாகையால் அயத்ந ஸித்$_3$த$_4$மாய் வேறு ப்ரயோஜநத்தைக் கருதாததாயுள்ள ப$_4$க்தியையடைந்த சேதநனைத் தானே ப்ராபிக்கிறான் (அடைகிறான்). அவனுடைய விப$_4$வாவதாரமும் (மநுஷ்யஸஜாதீயனாகப் பிறக்கையாகிற அவதாரமும்) அர்ச்சாவதாரமுமே அவனுடைய ப்ராப்த்ருத்வமாகும். ஆக இரண்டு வித$_4$மாகவும் அவதரிக்கும் செயலே இவனைப் பெறும் தன்மையாகும். அவதரித்த பிறகு பண்ணும் கு$_3$ணாவிஷ்காரமே ப்ராபகத்வமாகும் (இவனைப் பெறுவதற்காக உபாயத்தையநுஷ்டி$_2$க்கும் தன்மையாகும்). அநந்யப்ரயோஜநபரர்களான சேதனர்களைப் பெறுகையே அவனுடைய அவதரணத்தின் ப$_2$லமாகும்.

அநந்யப்ரயோஜந ப$_4$க்த்யுத்பாத$_3$நமானது (வேறு ப்ரயோஜநங் கருதாத ப$_4$க்தியை உண்டாக்குதலானது) அவதரணமில்லாமல் ஸங்கல்பத்தால் செய்யப்பட முடியாததாகும்.

அவனுடைய அர்ச்சாவதாரத்தால் அநந்யப்ரயோஜநமான ப$_4$க்தியையடைந்த ஆழ்வார்களின் திருவாக்குகளாவன-

**'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு**
**உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்**
**மற்றை நங்காமங்கள் மாற்று'**

- ஆண்டாள் / திருப்பாவை **29**

**'........................................... மேலால்**
**பிறப்பின்மை பெற்று அடிக்கீழ்க் குற்றேவலன்று**
**மறப்பின்மை யான் வேண்டும் மாடு'**

- நம்மாழ்வார் / பெரிய திருவந்தாதி **58**

**'................................................. நின் புகழில்**
**வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு**
**வைகுந்தமென்றருளும் வான்'**

- நம்மாழ்வார் / பெரிய திருவந்தாதி **53**

**'ஐயார் கண்டமடைக்கிலும் நின்கழல்**
**எய்யாதேத்த அருள்செய் எனக்கே'**

- நம்மாழ்வார் / திருவாய்மொழி **2-9-3**

**'அவிஸ்ம்ருதிஸ் த்வச் சரணாரவிந்தே$_3$**
**ப$_4$வே ப$_4$வே மேSஸ்து ப$_4$வத்ப்ரஸாத$_3$ாத்'**

- குலசேகராழ்வார் / முகுந்த மாலை **3**

(எனக்குப் பிறவிதோறும் தேவரீருடைய அனுக்$_3$ரஹத்தினால்
தேவரீருடைய திருவடித் தாமரையில் மறப்பின்மை வேணும்).

ஆழ்வார்கள் பிறவிகளைப் பற்றிக் கவலை கொண்டார்களல்லர், அநந்யப்ரயோஜநமான ப$_4$க்தி மேன்மேலும் வளர வேணும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே இருந்தார்கள் என்றே இந்தத் திருவாக்குகளிலிருந்து தெரிகிறது.

இத்தால் அவர்கள் ப$_4$க$_3$வானுடைய போ$_4$க$_3$த்துக்கு அர்ஹர்களாகி அவனுடைய நிர்ஹேதுகோபாயத்வத்தைப் ப$_2$லிக்கச் செய்தார்கள்.

நாமும் அப்படி ஆவதற்காகவே எம்பெருமான் க்ருஷி பண்ணுகிறான். அதைப் ப$_2$லிக்க செய்வதற்கு நாம் நம்முடைய ஆசார்யர்கள் தங்களுடைய க்$_3$ரந்த$_2$ங்களில் சொல்லியபடி நடக்க முயல வேணும். எறும்பியப்பா அருளிச்செய்தது -

> **இச்சேதனன் ப$_4$க$_3$வத்$_3$போ$_4$க$_3$ார்ஹனாம்போது வைஷ்ணவத்வமாத்ரம் போராது, ப்ரபந்நனாக வேணும்; அதுவும் போராது, ஏகாந்தியாக வேணும்; அதுவும் போராது பரமைகாந்தியாக வேணும். அஹங்காரமமகாரங்கள் ஸவாஸநமாக நிவ்ருத்தமாக வேணும். விஹிதநிஷித்$_3$த$_4$விஷய ப்ராவண்யம் நிவ்ருத்தமாக வேணும். அது செய்யுமிடத்தில் விருத்$_3$த$_4$மென்று த்யஜிப்பிக்க போகாது. "க்ஷேத்ராணி மித்ராணி த$_4$நாநி நாத$_2$ புத்ராஶ்ச தா$_3$ரா: பஶவோ க்$_3$ருஹாணி | த்வத் பாத$_3$ பத்ம ப்ரவணாத்மவ்ருத்தே: ப$_4$வந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா: || என்கிற ஶ்லோகத்தில் அவஸ்தை$_2$ பிறக்க வேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு" என்று ஸ்வரூபஸித்$_3$த்$_4$யர்த்த$_2$மாக இவையெல்லாம் வேணுமென்று ஒருக்கால் சொன்னாப்போலே பலகால் சொல்லிக்கொண்டு ஆழ்வார்களும் ஆசார்யர்களும் சேதநனனுடைய ஹிதத்துக்காகப் படாதனபட்டு ஒன்றிரண்டிலன்றிக்கே பல ப்ரப$_3$ந்த$_4$ங்களிலும் ஒருவர் சொன்னத்தை வேறொருவர் சொல்லி ஏககண்ட$_2$மாகக் கூப்பிட்டுக் கொண்டு கிடந்தார்கள்.**

(விலக்ஷணமோக்ஷாதி$_4$காரி நிர்ணயம் பக்கம் 60 – 61,
கோயில் ஆத்தான் ஸ்ரீ உ.வே. விஜயராகவாசார்யர் ஸ்வாமி பதிப்பு)

எனவே நாமும் ஆசார்யர்கள் உபதே$_3$ஶித்தபடி அதி$_4$காரங்களைப் பெற்று ப$_4$க$_3$வத்$_3$போ$_4$க$_3$ார்ஹர்களாகி அவனுடைய நிர்ஹேதுகோபாயத்வத்தை ஸப$_2$லமாக்கவேணும்.

★★★

# ஸ்ரீ ஸூக்திரத்நாகரம்
# ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாச்சாரியர் ஸ்வாமி - பிறந்தவாறும் வளர்ந்தவாறும்

**ஆழ்வார் திருநகரி Dr. A. திருவேங்கடத்தய்யங்கார்**

**பிறந்தவாறும்:** திருக்குருகூர், (ஆழ்வார் திருநகரி) கொமாண்டூர் இளையவில்லி ஆச்சான் வம்சயராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி. இவருக்கு இரு மனைவிகள் இருந்தும் ஸந்தானம் இல்லை. (இவர்களில் இரண்டாவது மனைவி அடியேனது தாயாரின் அத்தையாவார்.) ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியுடைய திருமாளிகைக்கு **இளையவில்லி திருமாளிகை** என்று பெயர்.

இளையவில்லி ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி வானமாமலை மடத்தில் எழுந்தருளியிருந்த 25வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ச சின்னகலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கு நெருக்கமானவர். ஒரு ஸத்புத்ரன் வேண்டுமென்று பாரித்திருந்த காலத்தில் சின்னக்கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, ஒருசமயம் திருநாராயணபுரத்திற்கு (மேல்கோட்டைக்கு) எழுந்தருளியிருந்த போது அனந்தாண்பிள்ளை திருவம்சத்தில் திருவவதரித்துள்ள ஒரு அழகான, ஸர்வ லக்ஷணங்களும் பொருந்திய குழந்தையைப் பார்த்ததாகவும், அந்தக் குழந்தையை ஸ்வீகாரம் செய்து கொள்ள இஷ்டமானால் அவ்வாறே செய்யுமாறும், இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிக்குத் தெரியப்படுத்தினார். அவரும் இசைந்தார். திருநாராயணபுரத்திற்குத் தமக்கு ஆப்தரானவர்களை அனுப்பி அக்குடும்பத்தினரின் இசைவைப் பெறுமாறு கூறினார்.

திருநாராயணபுரத்தில் அனந்தாண்பிள்ளை வம்சத்தில் ஸ்ரீ உ.வே. திருவேங்கடாசாரிய (சின்னசாமி அய்யங்கார்), ஸ்ரீமதி அலமேலு அம்மங்கார் ஆகியோருக்கு ஆறு ஆண் குழந்தைகள் உண்டாயினர். அதில் மூத்தவருக்கு பிள்ளைலோகாச்சார்யர் என்று பெயரிட்டிருந்தார்கள். இவர் பிறந்த வருடம் 1910. அவருக்கு அடுத்து ஸ்ரீ உ.வே. அநந்தாழ்வான், ஸ்ரீ உ.வே. கோவிந்த நரஸிம்ஹாசாரியர், ஸ்ரீ உ.வே. ரங்காசாரியர், ஸ்ரீ உ.வே. கண்ணன் ஸ்வாமி. பிற்காலத்தில் இந்த கண்ணன் ஸ்வாமியே ஸ்ரீ உ.வே. பாவனாச்சார்யர் ஸ்வாமியால் ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டு ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்தார். கடைசியாக ஸ்ரீ பாஷ்யம் என்றொரு குழந்தை யுவாவாயிருக்கும் சமயம் மரணமடைந்தார்.

ஆழ்வார் திருநகரியிலிருந்து சென்றவர்கள், மூத்த குழந்தையான பிள்ளைலோகாசார்யரை, ஆழ்வார் திருநகரி, இளையவில்லி திருமாளிகைக்கு ஸ்வீகாரம் கொடுக்குமாறு வேண்டினார். மிகுந்த தயக்கத்திற்குப் பின் அவர்களும் இசைந்தனர். (இந்த ஸ்ரீ உ.வே. சின்னஸ்வாமி அய்யங்காரின் மூத்த ஸஹோதரரே பிற்காலத்தில்

ஸ்ரீரங்கநாராயண ஜீயராக எழுந்தருளிய ஸ்ரீ உ.வே. கோவிந்தப்பங்கார் ஸ்வாமியாவர்.) ஸ்வீகாரவைபவமும் ஆழ்வார் திருநகரியில் நடந்தேறியது. ஸ்வீக்ருத குழந்தைக்கு சடகோபாசாரியர் எனப் பெயரிட்டனர். குழந்தை சிறியவனாயிருந்தபடியால் திருநாராயணபுரத்திலிருந்து அவரின் பெற்றோர்களையும் ஆழ்வார் திருநகரிக்கு அழைத்து வந்து தங்க வைத்தனர். குழந்தையின் தேஜஸ்ஸையும், பன்னிரு திருமண்காப்பு அணிந்திருந்த அழகையும் பார்த்து ஊரார் ஆச்சர்யப்பட்டனர்.

சடகோபாசார்யர் என்னும் இக்குழந்தையின் பேரழகுக்குச் சான்று. ஒரு சமயம் அடியேனுடைய தாயார் (தன் தாய்வழிப்) பாட்டியைப் பார்க்கச் சென்றார். அந்தப் பழைய காலத்தில் விதவைகள் திரைக்குப் பின்னால் இருப்பார்களாம். இப்படிப் பல வருஷங்கள் இருந்தாளாம். திருமாளிகைக் குழந்தையான சடகோபாசார்யர் தம் வீட்டிற்கு வருவதாகத் தெரிவித்தனர். அச்சிறுகுழந்தை பன்னிரு திருமண் தரித்து, பூணூல் பூண்டு ஸேவித்த பொழுது அவள் குழந்தையின் தேஜஸ்ஸைக் கண்டு ஆச்சரியப்பட்டு போனாராம், இதை என் தாயார் அடிக்கடி சொல்லிவருவாள்.

**வளர்ந்தவாறும்:** சில வருடங்கள் கழிந்தன. ஊரார் உள்ளூரில் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளவில்லை என்பதனால் மிக்க அஸூயையும், கோபத்தையும் கொண்டிருந்தனர். அது வெளிப்பட்டது. இதைக்கேட்டுப் பயந்த ஸ்ரீ உ.வே. சின்னக்கலியன் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, அந்தசிறுவனுக்கு எந்த ஆபத்தும் நேராமலிருக்க வானமாமலைக்கு அழைத்து சென்று தன் வசம் வைத்திருந்து, வளர்த்து, திவ்யப்ரபந்தத்தைச் சந்தை சொல்லி, க்ரமேண காலக்ஷேபங்களையும் ஸாதித்து அருளினார். தக்க பருவத்தில் ஆழ்வார் திருநகரிக்குத் திரும்பி வந்தவுடன் அவருக்கு விவாஹம் செய்து வைக்கத் தீர்மானித்தனர். ஊரில் விவசாயம் செய்து கொண்டும், திருக்கோயில் தர்மகர்த்தாவாகவும் ஊராரால் மதிக்கப்பட்டுமிருந்தவர் ஸ்ரீ உ.வே. ரா. பொன்னப்பய்யங்கார் ஸ்வாமி. இவர் தம் மூத்த மனைவியின் குமாரத்தியான ஸ்ரீரங்கநாச்சியாரை இளையவில்லி திருமாளிகையின் மணாட்டுப் பெண்ணாகக் கொடுக்க விரும்பினார். மிக விமரிசையாக விவாஹமும் நடந்தேறியது.

ஸ்ரீ உ.வே. சடகோபாசார்யர் ஸ்வாமிக்கு சில வருஷங்கள் புத்திரசந்ததி ஏற்படாததால் ஸ்ரீ முஷ்ணம் வராஹப் பெருமாளைப் பிரார்த்தித்ததின் பலனாக ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு (ஸ்வீகாரத்) தகப்பனார் பெயருடன் வராஹப் பெருமாள் பெயரையும் சேர்த்து ஸ்ரீநிவாஸபூவராஹன் எனப் பெயரிட்டனர். (உரிய காலத்தில் இவருக்கு காஞ்சிபுரத்தை சேர்ந்த ஸ்ரீ உ.வே. V.S. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமியின் திருக்குமாரத்தி ஸௌ. சாந்தாலட்சுமி என்ற ஒரு உத்தமமான பெண்ணை திருமணம் செய்வித்தார்.) இவர்க்கு பின் பிறந்த நான்கு ஆண்குழந்தைகளுக்கு ரங்கமன்னார், பொன்னப்பன், கண்ணன், திருவேங்கடாச்சாரி (ரகு) என்று பெயரிட்டனர். ஸ்ரீ ரங்கமன்னாருக்கு தனது மைத்துனரான ஸ்ரீ உ.வே. R.P. ராமய்யங்காரின் ஸ்வாமியின் இரண்டாவது குமாரத்தியான ஸௌ. விஜயலட்சுமி

என்ற பெண்ணைத் திருமணம் செய்வித்தார். மூன்றாமவரான ஸ்ரீ பொன்னப்பனுக்கு வானமாமலை ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியின் திருக்குமாரத்தியான ஸௌ. ஸ்ரீவரமங்கையை (ஜெயஸ்ரீயை) மணம் செய்வித்தார். இந்த ஸௌ. ஜெயஸ்ரீ வானமாமலை மடம் ஸ்ரீமத் பரமஹம்ஸ 27வது பட்டம் சின்ன ராமானுஜ ஜீயர் ஸ்வாமியின் பூர்வாசிரமப் பேத்தியாவார். நான்காமவரான ஸ்ரீ கண்ணன் மன்னார்குடியை அடுத்த சேரங்குளத்தைச் சேர்ந்த ஸ்ரீ உ.வே. V. திருவேங்கடாசாரியர் ஸ்வாமியின் திருக்குமாரத்தியான ஸௌ. வத்ஸலா என்ற பெண்ணைத் திருமணம் செய்வித்தார். ஐந்தாமவரான ஸ்ரீ திருவேங்கடாச்சாரியருக்கு சேரங்குளத்தைச் சேர்ந்த ஸ்ரீ உ.வே. V. வரதாசாரியார் ஸ்வாமியின் திருகுமாரத்தியான ஸௌ. ஸௌந்தரவல்லி என்ற பெண்ணைத் திருமணம் செய்வித்தார். ஸ்ரீ உ.வே. சடகோபாசார்ய ஸ்வாமிக்கு நான்கு பெண்கள். திருவிந்தளூர் ப்ரதிவாதி பயங்கர வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ உ.வே. திருமலாச்சாரிக்கு முதல் பெண்ணான ஆண்டாளை மணம் செய்வித்தார். இரண்டாவது பெண்ணான ஸௌ. திருவேங்கடம் என்பவளை திருமணம் செய்து கொண்டவர், திருவரங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ உ.வே. தோதாத்ரி ஸ்வாமி. அடியேன் மூன்றாவது பெண்ணான ஸௌ. அலமேலுவை மணந்து கொண்டேன். நான்காவது பெண்ணான ஸௌ. ஸ்ரீவரமங்கையை ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி காஞ்சீ மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி (P.B.A. ஸ்வாமி) தன் தௌஹித்ரனும் ஸ்வீகார புத்ரனுமான ஸ்ரீ உ.வே. ரங்கநாதாசாரியர் (செல்வமணி) ஸ்வாமியின் மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமியின் குமாரர்களுள் ஸ்ரீ உ.வே. பொன்னப்பன் ஸ்வாமி துரதிர்ஷ்டவசமாக சில ஆண்டுகளுக்கு முன் அகால மரணமடைந்தார். இவர் பார்மஸி நடத்திக் கொண்டும், விரும்பியவர்களுக்கு வைத்யம் செய்து கொண்டுமிருந்தார். ஸ்ரீரங்கத்தில் பிரபல டாக்டர்களைவிட நல்ல வைத்தியம் செய்தவர் என்று பெயர் பெற்றவர். முதல் பெண்ணான ஸ்ரீமதி ஆண்டாளும் சில வருடங்களுக்கு முன் ஆசார்யன் திருவடியடைந்தார்.

ஸ்ரீ உ.வே. சடகோபாச்சார்யர் ஸ்வாமி தம் திருமாளிகையிலும் ஆண்டாள் ஸன்னிதியிலும் ஸ்ரீரங்கத்திலும் பலவருடங்கள் காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். ஆழ்வார் திருநகரியில் காலக்ஷேபம் செய்தபோது ஊராரைத் தவிர பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமி, ஹெட்மாஸ்டர் சுதர்சன ராமானுஜய்யங்கார், சம்பந்தியான ஸ்ரீ உ.வே. R.P. ராமய்யங்கார், வேப்பிலைப்பாட்டி, அடியேனது தாயார் ஆகியோர் தொடர்ந்து கேட்டு வந்தனர். விடுமுறை நாட்களில் அடியேனும் கலந்து கொள்வேன்.

ஸ்ரீ உ.வே. சடகோபாச்சார்யர் ஸ்வாமி தம் மூத்த குமாரரான ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸ பூவராஹாசாரியர்க்கு அருளிச்செயல் மற்றும் வ்யாக்யானங்கள் பூர்வாசார்யர் அருளிய ஸ்தோத்ரங்கள் ஆகியவற்றைப் போதித்தார். (கல்லூரிப் படிப்பின் போது இந்த ஸ்ரீநிவாஸபூவராஹாசாரியர் ஸ்வாமியும் அடியேனும் ஸஹபாடிகள். இருவரும் சேர்ந்தே

காஞ்சீ (ப்ர.ப. அண்ணா) ஸ்வாமிக்கு அந்தரங்கமாயிருந்து வந்தோம். இது நாங்கள் செய்த பூர்வஜன்ம ஸுக்ருத பலன்.)

ஸ்ரீ உ.வே. சடகோபாச்சார்யர் ஸ்வாமி (கன்னட பாஷையைப் பேசி வந்த) திருத்தம்பியாரான சதாபிஷேகம். ஸ்ரீ உ.வே. கோவிந்த நரஸிம்ஹாசார்யருக்கு தமிழைப் போதித்ததுடன் அருளிச்செயல் மூலம், வ்யாக்யானங்கள் உட்பட ஸகல ஸம்ப்ரதாயார்த்தங்களையும் தாமே கற்பித்தார். காலக்ஷேபங்கள் செய்து வந்த இளையவில்லி ஸ்வாமி கையெழுத்துப் பிரதிகளை நிரம்ப எழுதி வைத்துள்ளார். இவைகளில் அச்சானது இவரது **நவவித ஸம்பந்தம்** என்ற நீண்ட கட்டுரையும், (இம்மலரில் இக்கட்டுரை தனியாக சேர்க்கப்பட்டுள்ளது) நம்மாழ்வாரின் ஐம்பது திருநாமங்கள் கொண்ட தொகுப்பு ஒன்றும் மட்டும் மு. கோவிந்தசாமி பிள்ளை என்ற கோவிந்தசாமிக் கோனார் என்ற திருச்சியைச் சேர்ந்தவர் 1967-ல் பதிப்பித்தார். இந்த நவவித ஸம்பந்தமும் திருச்சி ஸுந்தரராஜ செட்டியார் என்பவரது வேண்டுகோளின்படி நிகழ்த்திய பல உபயன்யாஸங்களில் ஒன்றாகும்.

இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி அருளிச் செயல் மற்றும் வ்யாக்யானங்களில் மட்டுமின்றி, பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் அஷ்ட ப்ரபந்தத்தையும் கற்றுத் தேர்ந்தவர். அஷ்ட ப்ரபந்தம் என்பது தமிழ் பண்டிதர்களுக்கே கஷ்ட ப்ரபந்தம். இவர் ஆசார்ய ஹ்ருதயத்தை ஆராய்ந்து நுணுக்கமான பல அர்த்தங்களை விளக்குவார். இவற்றையெல்லாம் கண்டே காஞ்சீ ஸ்ரீ உ.வே. P.B.A. ஸ்வாமி இவருக்கு 'ஸ்ரீ ஸுக்திரத்னாகரம்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார். இந்தப்பட்டம் பெற்றவர்கள் இவருக்கு முன்பும் இருந்ததில்லை பின்பும் இருக்கப்போவதில்லை.

ஆலயப்ரவேச சமயத்தில் ஆழ்வார் கோயில் திருவாராதனங்கள் ஏறத்தாழ நின்று போய்விட்டன. ஆசார்ய புருஷர்கள் ஆலயத்துள் செல்லவில்லை. கோஷ்டியினரும் போகவில்லை. நம் ஸ்வாமியும் மற்ற ஆசார்ய புருஷர்களைப் போல் ஆலயத்துள் செல்லாமலிருந்தார். காலத்தின் போக்கைச் சரிவர உணர்ந்த நம் ஸ்வாமி சில மாதங்கள் கடந்த பின் ஆலயத்துக்குச் செல்ல ஆரம்பித்தார். காலப்போக்கில் எல்லோரும் வர ஆரம்பித்தனர். அவரது பரந்த மனப்பான்மையை அறிந்த ஊரார் பாராட்டினர்.

### ஆழ்வார் திருநகரி அரையரும் நம் இளையவில்லி ஸ்வாமியும் :

ஆழ்வார் திருநகரியில் பொலிந்து நின்ற பிரானுக்கும் ஆழ்வாருக்கும் கைங்கர்யம் செய்து வந்த பெரிய திருவடியரையர் பரமபதித்த பிறகு அவரது குமாரர் சாரங்கன் ஸ்வாமி கோயிலில் எந்த வருமானமும் இல்லை என்ற காரணத்தால் உத்யோகத்திற்குச் சென்றுவிட்டார். அரையரின் பெருமைகளை எடுத்துக்கூறி அவர் மனதை மாற்றி மறுபடியும் கைங்கர்யத்துக்கு வரவழைத்து நம் இளையவில்லி ஸ்வாமியும் திருவாய்மொழிப்பிள்ளையும் சாரங்கன் ஸ்வாமிக்கு அருளிச்செயல் சொல்லிக்கொடுத்து அபிநய முறைகளையும் கற்றுக்கொடுத்தனர். இது நம் ஸ்வாமி ஆழ்வாருக்குச் செய்த

கைங்கர்யமாகும். ஊரார் அவ்வப்பொழுது சிறுசிறு உதவிகளைச் செய்தாலும், சாரங்கன் ஸ்வாமி வருமானக்குறைவு காரணமாக மறுபடியும் கைங்கர்யத்தை விட்டுவிடாமலிருக்க, ஊரார் எதிர்ப்பையும் மீறி அவரைச் சென்னைக்குக் கூட்டி வந்து அப்பொழுதுள்ள எண்டோமெண்ட் போர்டு கமிஷனர் ஸ்ரீ உத்தண்டராமப்பிள்ளை, பிரபல நடன ஆசிரியர் வழுவூர் ராமையாபிள்ளை, திருமதி.பாலசரஸ்வதி, Dr. ராகவன் மற்றும் பிரபல சங்கீத வித்வான்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டினேன். அழைப்புகள் உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். அந்த சமயம் முத்துக்குறி வ்யாக்யானத்தின் சுருக்கத்தை அபிநயத்துடன் நடத்திக்காட்டினார் சாரங்கன் ஸ்வாமி. அனைவருக்கும் வியப்படைந்து சாரங்கன் ஸ்வாமியைப் பாராட்டியதுடன் அரையர்கள் கைங்கர்யத்தை அரசாங்கம் கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினர். இது மைலாப்பூர் சாஸ்திரி ஹாலில் 1962ம் ஆண்டு நடந்தது. உடனேயே ஸ்ரீ உத்தண்டராமப்பிள்ளை, மாதந்தோறும் அரைக்கோட்டை நெல்லை அரையருக்குக் கொடுக்கும்படி கோவிலாருக்கு ஆணை பிறப்பித்தார். காலக்கிரமத்தில் மாதம் ரூ. 120ம் கொடுக்கும்படி செய்தனர். இது அந்தக் காலத்தில் ஒரு கணிசமான தொகையாகும். **நம் இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமி அரையர் ஸ்வாமி உசிதமானவற்றைக் கற்றுக்கொடுக்காமலிருந்தால் அரையர்கள் கைங்கர்யம் நின்றிருக்கக்கூடும்.**

பெரியதொரு குடும்பத்தை நிர்வகிக்க வேண்டியிருந்ததாலும் விவசாயத்தைக் கவனிக்க வேண்டியிருந்ததாலும் நம் ஸ்வாமி உள்ளூரிலேயே காலக்ஷேபங்களை வைத்துக்கொண்டு வெளியூர்களுக்குச் செல்லாமலிருந்தார். வெளியூர்களுக்குச் சென்று உபன்யாசங்கள் செய்திருந்தால் பிரபல உபன்யாஸகராகி இருப்பார்.

திருநாராயணபுரம் ஆழ்வார் ஸ்வாமி, ஆழ்வார் திருநகரி ந்யாய வேதாந்த வித்வான் நல்லான் ஸ்ரீ உ.வே. ராமகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி (இவர்களிடமே நம் ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தின் நுணுக்கங்களை கற்றார் என்று கேள்விப்பட்டுள்ளேன்), ஸ்ரீ வில்லிப்புதூர் விஞ்சிமூர் ஆழ்வார் அய்யங்கார் ஸ்வாமி, ஜ்யோதிஷத்தில் சிறந்த வானமாமலை வித்வான் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி (நம் ஸ்வாமியும் ஜ்யோதிஷத்தில் நல்ல ஞானம் கொண்டவர்) வானமாமலை மடம் ஏஜெண்ட் சடகோபாச்சாரியார் ஸ்வாமி, மன்னார் கோயில் புரோஹிதர் திருமலை அய்யங்கார் ஆகியோர் நம் இளையவில்லி ஸ்வாமிக்கு நெருங்கிய நண்பர்களாவர். இவர்கள் ஸம்பாஷிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாலே ஒருவருக்கு ஸம்ப்ரதாயத்தின் நுணுக்கமான அர்த்தங்கள் கிடைக்கும்.

கொமாண்டூர் இளையவில்லி ஆச்சான் வம்சத்தைச் சேர்ந்த இந்தத் திருமாளிகையினருக்கு ஆழ்வார் பொலிந்து நின்ற பிரான் கோஷ்டியில் ‘‘கொல்லி காவல் தாஸர்’’ என்றே அருளப்பாடு வழங்கப்பட்டு வருகிறது. (இத்திருமாளிகையினருக்கு கற்குளம் என்ற கிராமத்தில் நன்செய் நிலங்கள் உண்டு. ஆகவே இந்த திருமாளிகைக்குக் கற்குளம் திருமாளிகை என்றே ப்ரஸித்தமானது.) **கொல்லி காவல் தாஸர் என்பவர் மணவாளமாமுனிகளுக்குத் தாய்வழிப்பாட்டனார் ஆவார்.** மாமுனிகளின்

தகப்பனார் திருநாவீனுடைய பிரான் தாதகண்ணர் என்பவர் ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்து வந்தார். இவர் சிக்கில் கடாரத்திலிருந்த (கொக்கரகுளம்) கொல்லி காவல் தாஸர் பெண்ணான ஸ்ரீரங்கநாச்சியாரை மணந்து கொண்ட காரணத்தினாலேயே அவரது ப்ரஸவத்தை முன்னிட்டு அவரது பிறந்தகமான சிக்கில் கடாரத்துக்கு அனுப்ப நேர்ந்தது. தாஸருக்கு திருநகரி ஆழ்வார் ஸன்னிதியில் மரியாதை ஏற்பட்டிருக்கலாம். இன்றளவும் கொல்லிகாவல் தாஸர் என்றே இத்திருமாளிகையினருக்கு மரியாதை நடந்து வருகிறது.

**நம் இளையவில்லி ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி வைபவம்:**

திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த நம் ஸ்வாமி 1970ம் வருடம் ஆழ்வார் திருநகரியில் ஷஷ்ட்யப்தபூர்த்தி வைபவத்தைக் கொண்டாடினார். சிஷ்யர்கள் அனைவரும் உத்ஸாஹத்துடன் கலந்து கொண்டனர். ஆழ்வார் ஸன்னிதி விசேஷ மரியாதையுடன் ஷஷ்ட்யப்தபூர்த்தி வைபவம் ஐந்து நாட்கள் விமரிசையாக வேதபாராயண, இதிஹாஸ, புராண, திவ்யப்ரபந்த, வ்யாக்யான, ரஹஸ்யக்ரந்த பாராயணத்துடன் நடைபெற்றது. காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. P.B.A. ஸ்வாமி எழுந்தருளியிருந்தார். ஏராளமான ஸ்ரீ வைஷ்ணவர்கள் கலந்து கொண்டு ஸத்தை பெற்றனர். திருவரங்கத்திற்குத் திரும்பி சென்ற இவர் சிறிது காலத்தில் சிஷ்ய பந்துவர்க்கங்களைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு ஆசார்யன் திருவடியடைந்தார்.

**இளையவில்லி ஸ்வாமி திருமாளிகையினருக்கு ஆழ்வார் திருநகரி ஸன்னிதியில் மரியாதைகள்:**

வெகு நாட்களாகவே இத்திருமாளிகையினருக்கு ஆழ்வார் ஸன்னிதியில் நடந்து கொண்டிருந்த மரியாதைகளை ஊரார் மறுத்தார்கள். இதைக்கண்டு கோபமடைந்த நம் ஸ்வாமியின் ஸ்வீகார திருத்தகப்பனார் ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். பல வருடங்கள் கழிந்த பின் உரிய மரியாதையைச் செய்ய வேண்டுமென்று கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பின் பலத்துடன் தீர்த்தம் வாங்கச் சென்ற சமயம் ஊரார் கற்களை எறிந்தனர். இதனால் ஆத்திரமடையாமல் சர்க்கரைப் பொங்கலை ஆழ்வாருக்கும், பொலிந்து நின்ற பிரானுக்கும் அமுது செய்வித்து ஊரார் அனைவருக்கும் விநியோகித்தார். கூரத்தாழ்வான் வரதராஜரிடம் வரம் பெற்றபோது தனக்கு தீங்கு ஏற்படக் காரணமாயிருந்த நாலூரானுக்கும் பரமபதம் அருளப்பிரார்த்தித்தார். இப்படி ஆசார்யர்கள் பலர். இந்த ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தை அனுசரித்து வாழ்ந்தவர்கள் இளையவில்லி திருமாளிகையினர். இவர்கள் இந்தப் பொறுமையை பைத்தருக தனத்தைக் காப்பாற்றுவது போல தம் வாழ்நாள் முழுவதும் காத்து வந்தனர்.

**இத்திருமாளிகையினரின் ஆதிநாதர் ஆழ்வார் கைங்கர்யங்கள்:**

இளையவில்லி திருமாளிகையினர் ஆதிநாதர் ஆழ்வார் ஸந்நிதியில் பல திருவாபரணங்களைச் ஸமர்ப்பித்துள்ளனர். அவைகளின் குறிப்பானவைகள் விலை

மதிக்கமுடியாத, கல் இழைத்த யஜ்ஞோபவீத முகப்பும் மாங்காய் மாலையும் ஆகும். இவைகளை ஸ்வாமி நம்மாழ்வார் தினமும் சாத்திக் கொள்வார். அதே போன்று திருக்கோயிலில் பல உபயங்களும் செய்து வருகின்றனர். ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹாசார்ய ஸ்வாமியும், அவரது சிறிய தகப்பனாரான ஸ்ரீ உ.வே. ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியும் தம்முடைய சிஷ்யர்களின் ஸஹாயத்துடன் செய்துள்ள திருப்பணிகள் ஏராளம்.

**ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி ஶதமானோத்ஸவம்:**

ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்வாமியின் சதாப்தி மஹோத்ஸவத்தின் ஆரம்பம் கடந்த வருடம் (விரோதி வருடம்) ஆனி மாதம் அவிட்டத்தன்று (11.07.2009) பிள்ளைலோசார்யர் மண்டபத்தில் மிகப்பொருத்தமாக அவரது ஜன்மபூமியான திருநாராயணபுரத்திலேயே வேதபாராயண திவ்யப்ரபந்த ஸேவையுடன் தொடங்கியது. ஏராளமான அபிமானிகள், சிஷ்யர்கள் கூடியிருந்து களித்தனர். செல்வப்பிள்ளை, யதுகிரி நாச்சியார் ஆகியோரும் அன்று விசேஷ புறப்பாடு கண்டருளினர்.

ஆழ்வார் திருநகரியில் நடைபெற்ற இந்த ஶதமான உத்ஸவத்தின் பூர்த்தி (26.06.2010 முதல் 30.06.2010 வரை நடைபெற்ற சதமான உத்ஸவம்) ஸ்வாமியின் பெருமையைத் தெரிவிக்கும் விதமாக அமைந்திருந்தது. ஸ்வாமியின் மூத்த திருக்குமாரர் ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹாச்சாரியரின் தலைமையில் ஸஹோதரர்கள் இணைந்து கமிட்டி அமைத்து சிஷ்யர்கள், அபிமானிகள், பந்துக்கள் சூழ சதாப்தி மஹோத்ஸவ பூர்த்தி வைபவத்தை நடத்தி வைத்தவர்கள், பங்கு கொண்டவர்கள் அனைவரும் ஸத்தை பெற்று ஆழ்வார் பொலிந்து நின்ற பிரான் கடாக்ஷத்திற்குப் பாத்திரமானார்கள்.

★★★

ஸ்ரீ :

# அடியேன் அறிந்த இளையவில்லி ஸ்வாமி

## திருவல்லிக்கேணி (பலாப்பூர் பத்தங்கி) வீரராகவன் (எ) ஸுரேஷ்

(ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தான வேத அத்யாபக கோஷ்டி அங்கத்தினர்)

**லக்ஷ்மீ நாதாக்ய ஸிந்தெள ஶடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம்**
**நாதாத்ராவப்யஷிஞ்சத் ததநுரகுவராம்போஜ சக்ஷுர் ஜராப்யாம் |**
**கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத யதீந்த்ராக்ய பத்மா கரேந்தரம்**
**ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி பஹுதா தேஶிகேந்த்ர ப்ரமௌகை: ||**

என்பது ஸ்வாமி எம்பெருமானாருடைய திருவடி நிழலாக விளங்கிய எம்பார் திருவாக்காகும். பகவத் ராமாநுஜருடைய திருத்தம்பியான இப்பேராசிரியர் இந்த தனிஶ்லோகம் மூலம் எடுத்துரைப்பதாவது.

*லக்ஷ்மீநாதனான ஸ்ரீரங்கநாதனாகிற பெருங்கடலிலிருந்து நம்மாழ்வாராகிற காளமேகம் கருணை என்கிற நீரைப்பெருகி, நாதமுனிகள் என்கிற மலையின் மேல் மழையாகப் பொழிந்தது. அக்கருணை வெள்ளம் புண்டரீகாக்ஷர் (உய்யக் கொண்டார்) மற்றும் ராமமிஶ்ரர் (மணக்கால்நம்பி) ஆகிய இரண்டு அருவிகளாகப் பெருகிற்று. அவை யாமுநாசார்யர் (ஆளவந்தார்) என்கிற பெரிய ஆறாக ஓடிவந்து பெரியதிருமலைநம்பி, பெரியநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ஆகிய ஐந்து வாய்க்கால்களாகி, அவற்றின் வழியே ஸ்வாமி எம்பெருமானாராகிற பெரிய ஏரியை அடைந்தது. அந்த ஏரியிலிருந்து இந்த கருணை வெள்ளம் எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளாகிற மதகுகளின் வழியாக ஜீவாத்மாக்களாகிற பயிர்களிடம் ப்ரவஹித்து (பெருக்கெடுத்தோடி) இவ்வுலகை வாழ்விக்கிறது.*

எம்பார் மேற்கண்ட ஸ்ரீஸூக்தியில் அருளியபடி ஸ்வாமி எம்பெருமானாரால் நிறுவப்பட்ட எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளில், (விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்த்தருளிய ஆசார்யர்களுள்) எழுபத்திரண்டாம் ஆசார்ய புருஷர் இளையவில்லி ஆச்சான் என்பவர். ஆழ்வார் திருநகரியில் இந்த திருவம்ஶத்தில் ஸ்வீகாரபுத்ரராகத் திகழ்ந்து, "ஸ்ரீஸூக்திரத்நாகரம்" என்று சிறப்பிக்கப்பட்டு விளங்கியவர் ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி ஆவார். நூற்றாண்டு விழா எடுக்கப்படும் இம்மஹாசார்யருடைய பெருமைகளை எடுத்தியம்புவதென்பது அடியேன் போன்ற அறிவிலிகளுக்கு இயலாததொன்றாகும். இருப்பினும்

இப்பெரியாருடைய திருத்தம்பியாராகத் திகழ்ந்த ஸாரார்த்தச் சொல்லழகர் ஸ்ரீ உ.வே. ஶதாபிஷேகம் ஸ்வாமி திருவடிகளில் (திருவல்லிக்கேணியில்) இரண்டரை ஆண்டுகளுக்கும் மேல் பகவத் விஷய காலக்ஷேபம் கேட்டு ஆனந்தித்தவன் என்னும் தொடர்பைப் பற்றாசாகக் கொண்டும், இக்காலக்ஷேபங்களில் பலமுறை இப்பெரியாருடைய பலவிதப் பெருமைகளைக் கேட்டு இன்புற்றதாலும், இப்பெரியார் ஈன்றெடுத்த முதல் புத்ரரத்னமாகத் திகழும் “ஸம்ப்ரதாயஸுதாநிதி” ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசார்யர் ஸ்வாமியின் நியமனத்தைச் சிரமேற்கொண்டும் சிறிய ஞானத்தனான அடியேன் ஸத்தை பெறுவதற்காகவும் சில வார்த்தைக்களைக் கூற ஆரம்பிக்கிறேன்.

திருநாராயணபுரத்தில் அனந்தாண்பிள்ளை திருவம்ஶத்தில் திருவேங்கடாசார்யர் ஸ்வாமியின் திருகுமாரராகத் திருவவதரித்தவர் நம் இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி. வானமாமலை ஸ்ரீமடம் 25ம் பட்டத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி சின்னகலியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமி யாத்ரையாகத் திருநாராயணபுரம் எழுந்தருளியிருந்த ஸமயம், நம் இளையவில்லி ஸ்வாமியை (குழந்தைப் பருவத்தில்) கண்ணாரைக் கடாக்ஷித்தார். ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமிக்கு புத்ர பாக்யம் இல்லாததையறிந்திருந்த ஜீயர் ஸ்வாமி, மிகவும் தேஜஸ்வியாக விளங்கிய இந்த குழந்தையை இளையவில்லி ஸ்வாமி திருமாளிகைக்கு ஸ்வீகாரம் கொடுக்குமாறு குழந்தையின் பெற்றோரிடம் வேண்டினார். அவ்வாறு குழந்தையாக ஆழ்வார் திருநகரிக்கு ஸ்வீகாரமாக எழுந்தருளிய நம் இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமியை மேலே ப்ரஸ்தாவிக்கப்பட்ட வானமாமலை ஜீயர் ஸ்வாமி சில காரணங்களால், வானமாமலை திவ்யதேசத்திற்கே அழைத்துச் சென்று, தம் ஸ்ரீமடத்திலேயே வித்யாப்யாஸம் முதல் அனைத்தையும் அளித்து, பகவத்விஷய, ரஹஸ்யக்ரந்த காலக்ஷேபங்கள் ஸாதித்து சிறந்த அதிகாரியாக்கி, ஆழ்வார் திருநகரிக்கு அனுப்பிவைத்தார். வஸ்த்ரேண, வபுஷா, வாசா, வித்யயா, விநயங்களாகிற வகார பஞ்சகத்திற்கும் இலக்கணமாகத் திகழ்ந்து தேஜோ விஶேஷத்துடன் விளங்கிய நம் இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி சிறந்த வித்வானாகவும் அருளிச்செயல் வல்லவராகவும் திகழ்ந்து ஆதிநாதர் ஆழ்வார் கைங்கர்யங்கள் பல புரிந்தவர். ஆழ்வார் ஸந்நிதியில் தீர்த்தகாரராக கைங்கர்யம் பண்ணிவந்த இவர் ஸ்ரீரங்கம் முதலான பலவிடங்களிலும் க்ரந்த காலக்ஷேபங்களும் உபந்யாஸங்களும் ஸாதித்து வந்தார்.

மார்கழி மாதங்களில் “திருப்பாவை” உபந்யாஸங்கள் தவிர, நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மிக உயர்ந்ததாகக் கொண்டாடப்படும் “நவவிதஸம்பந்தம்” என்னும் ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவோடுள்ள ஒன்பதுவித உறவுகளை மிகச்சிறந்த முறையில் எடுத்தியம்பியவர். அச்சொற்பொழிவுகளை ஏடுபடுத்தி ஒரு புத்தகமாக அவரது சீடர்கள் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

‘திருக்கச்சிநம்பி ஸபை’ என்கிற ஒரு அமைப்பு திருச்சியில் நம் இளையவில்லி ஸ்வாமியைக் கொண்டு “திருப்பாவை” உபந்யாஸங்கள் ஏற்பாடு செய்திருந்தது. நம் ஸ்வாமியின் விசேஷமான விளக்கங்களை ஆஶ்சர்யமான முறையில் எடுத்துரைப்பதைக் கேட்டின்புற்ற இந்த ஸபையின் அறிஞர்கள், **“திருப்பாவைக் கடல்மணி”** என்னும் பட்டத்தையளித்து நம் இளையவில்லி ஸ்வாமியைக் கௌரவித்தனர்.

“ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி”, “மஹாமஹிமோபாத்யாய”, “பத்மஶ்ரீ” முதலான பல விருதுகளைப்பெற்று மஹாவித்வானாகத் திகழ்ந்த பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமியால் மிகவும் கொண்டாடப்பட்டுத் திகழ்ந்தவர் நம் இளையவில்லி ஸ்வாமி ஆவார். இவர் ஸாதிக்கும் ஸ்ரீமுகங்களிலும் (கடிதங்களிலும்) உபந்யாஸங்களிலும் நம் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளே நிறைந்திருப்பதைக்கண்ட ஸ்ரீ காஞ்சீ P.B.A. ஸ்வாமி, இவருக்கு **“ஸ்ரீஸூக்திரத்நாகரம்”** என்னும் விருதளித்துப் பெருமைப்படுத்தியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம் இளையவில்லி ஸ்வாமி தம்முடைய திருத்தம்பியாரான ஶதாபிஷேகம் ஸ்ரீ உ.வே. கோவிந்த நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியை ஒரு சிறந்த வித்வானாக்கியளித்து நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்குப்புரிந்த கைங்கர்யம் போற்றத்தக்கதொன்றாகும். இதேபோன்று தம்முடைய மூத்த திருக்குமாரரான ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸ பூவராஹாசார்யர் ஸ்வாமியையும் மிகச்சிறந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய வித்வானாக உருவாக்கி அளித்துள்ளமையை வியந்து பாராட்டுவோம்.

புத்ரர்களும் சிஷ்யர்களும் கூடி நூற்றாண்டு விழாவெடுக்கும் நிகழ்ச்சியின் நினைவாக வெளியிடப்படும் நம் இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி நூற்றாண்டுவிழா மலரைப் பதிப்பிக்கும் பணியில் அடியேனுக்கும் பங்களித்த “ஸம்ப்ரதாய ஸுதாநிதி” ஸ்வாமி (ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாசார்யர் ஸ்வாமி) திருவடிகளில் ஸவிநயப்ரணாம பரம்பரைகளை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன். இவர் தற்போது ஆதிநாதர் ஆழ்வார் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டு ஆழ்வார் திருநகரியில் எழுந்தருளியிருக்கிறார். பங்களூர் மாநகரத்தில் பல்லாண்டுகள் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபங்கள், உபந்யாஸங்கள் சாதித்து, நம் பூர்வாசார்யர்கள் அருளிப்போன்ற அர்த்தவிசேஷங்களை எல்லாம் உலகோர்க்கு முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் வாரி வழங்கி வந்த இவரை ஈன்றெடுத்து நமக்கு அளித்த ஸ்ரீஸூக்திரத்நாகரம் ஸ்வாமியின் திருவடிகளை மாநஸீகமாகத் தொழுது அடியேனுடைய புன்சொற்களைப் பெரியோர் நற்றமாகக் கொண்டு குற்றம் குறைகளுக்கு க்ஷமைவேண்டி நிற்கிறேன் இத்தண்ணியன்.

★★★

# ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்யர் ஸ்வாமி ஶதமானோத்ஸவ வைபவத்தைப் பற்றி ஒரு அன்பரின் அனுபவம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

S.K. SAMPATH

130-B, North Uthra Street,
Srirangam, Trichy - 620 006.
02/07/2010

To
ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீனிவாஸ பூவராஹாசார்ய ஸ்வாமி,
ஆழ்வார் திருநகரி.

ஸ்வாமி திருவடித் தாமரைகளில் அடியேன் தெண்டனிட்டுச் செய்யும் விண்ணப்பம். ஸ்வாமி நடத்திய ப்ரஹ்மாண்டமான ஶதமானோத்ஸவ விழாவில் கலந்துகொள்ள பாக்யம் பெற்று, நேற்று மாலை ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தோம். அங்கிருந்த ஐந்து நாட்களும் பரமபதவாஸம் போலேயாயிருந்தது. நித்ய ஸாம்ஸாரிக விஷயங்களை மறந்து, அடியார்கள் குழாங்களோடே கூடியிருந்து, இன்பக் கலவியிலே ஆழ்ந்து கிடந்தோம்.

**‘மதுசூதனன் எம்மான் தானும், யானும் தன்னுள்ளே கலந்தொழிந்தோம் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுது மொத்தே’** என்று ஆழ்வாருக்கு ஏற்பட்ட அநுபவத்தை ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஶதமானோத்ஸவம் மூலமாக, எந்த யோக்யதையும் இல்லாத அடியோங்களுக்கும் கிடைக்கும்படிச்செய்த இந்த பேருபகாரத்துக்கு அடியோங்களால் என்ன கைம்மாறு செய்யமுடியும்? ‘எனதாவியும் உனதே’ என்று தரவொண்ணாதே. ஸ்வாமி மேலும் பல பல ஆண்டுகள் தேக ஆரோக்யத்துடன் இருந்து, அடியோங்களைப் போன்ற இன்னும் அனேக பேர்களும் உஜ்ஜீவிக்கலாம்படி எம்பெருமான் க்ருபை செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திப்பதைத் தவிர அடியோங்களால் வேறு என்ன செய்ய முடியும்?

**தேனாயிற்று** - அருளிச்செயல் கோஷ்டிகள்! ‘நீராய் நிலனாய்’ என்று கேட்டவர்கள் நெஞ்சு நீராய்க் கரையவும், திருமாலுக்குப் பரமபத இருப்பு அரிதாகவும்படி ஆழ்வார் காதலுடன் கூப்பிட்டாப் போலேயாயிற்று இந்த திவ்யமான அருளிச்செயல் கோஷ்டி. நிறுத்தி நிதானமாக ஸேவிக்கப்பட்ட இந்த கோஷ்டி, மந்தமதிகளான அடியேன் போல்வாரும் கேட்டு, கேட்ட அளவிலேயே ஓரளவிற்குப் புரிந்து கொண்டு நெகிழலாம்படியிருந்தது இந்த கோஷ்டி. இப்படியான போது, இத்தைக் கேட்ட அந்த எம்பெருமான் உருகாமல் இருக்கமுடியுமோ! அதற்கும் மேலே ஆழ்வார் ஸம்பந்தப்பட்டவர்களல்லவோ இப்படி கூப்பீடு செய்வது! ஆகையாலே, அவனும் ஒருவனாகயிருந்து எல்லாரோடும் கலந்திருப்பான் என்று சொல்லவும் வேண்டுமோ?

**பாலாயிற்று** - வேத பாராயணகோஷ்டி. **‘வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து’** என்கிறாப்போலே, மிகுந்த ச்ரத்தையோடே ஸேவிக்கப்பட்ட வேதபாராயணகோஷ்டி கறந்த பால் நெய்யும் நெய்யின் இன்சுவையுமான எம்பெருமான், இந்த இன்பப்பாலை சுவைக்க வாராமலிருப்பனே ! எம்பெருமானோடு கூடிய இந்த அடியார் குழாங்களில் மந்த மதிகளான நாங்களும் இருந்து, பெற்ற பெறாப்பேற்றுக்குக் காரணமான ஸ்வாமிகளுக்கு எப்படி எங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவிப்பது ? நாங்கள் அறியோம் !

**நெய்யுமாயிற்று** - செல்வப்பிள்ளை வாஸனையோடே கூடின கோஷ்டி ப்ரஸாதங்கள், ததீயாராதனங்கள். எவ்வளவு வகை ப்ரஸாதங்கள் ! கைந்நிறைய கொடுத்துத் திணர வைத்த அந்த ப்ரஸாதங்கள் ! **‘ஸர்வகந்த; ஸர்வரஸ;’** என்கிற அவன் ப்ரஸாதத்தினூடே அங்கு கூடியிருந்த எல்லா அடியார்களோடும் உன்கலந்தானே ! **‘என்ன வாழ்வு வாய்த்ததே !’**

**கன்னலாயிற்று** - ஆழ்வார் திருவடிவாரத்திலே ஸாதிக்கப்பட்ட உபந்யாஸங்கள் ! எத்தனை மஹான்கள் ! எத்தனை ஆசார்ய புருஷர்கள் ! எத்தனை வித்வான்கள் ! எத்தனை எத்தனை அடியார்கள் ! எல்லாரும் கூடி **‘போதயந்த: பரஸ்பரம்’** பண்ணின எம்பெருமானின் குணாநுபவம், **‘மரங்களும் இரங்கும் வகை’** என்கிறாப்போல் மந்தமதிகளான அடியோங்களும் கேட்டு, நெகிழும் படியாயிருந்த உபந்யாஸங்கள், கரும்பைக் கசக்கிப்பிழிந்து எடுத்த கன்னலைப்போலே, வேத வேதாந்தங்களென்ன, ரஹஸ்ய க்ரந்தங்கள் என்ன, அருளிச்செயல்களென்ன, இப்படிப்பட்ட இவற்றையெல்லாம் கசக்கிப்பிழிந்து எடுத்த சாறு போலாயிருந்தன இந்த உபந்யாஸங்களெல்லாம். முதலாழ்வார்களை நெருக்கின அந்த ஸ்ரீமந்நாராயணன் இப்படிப்பட்ட கோஷ்டியினுள்ளும் படுக்கவோ, வீற்றிருக்கவோ, நிற்கவோ இடமில்லாதபோதும், வந்து, நெருக்கி, அமர்ந்து, நம்மோடு சேர்ந்து கலந்து அநுபவித்து அவனும் தானானாயிருப்பான் என்பது சொல்லவும் வேண்டுமோ ?

எம்பெருமானே பரதேவதை என்று ஸ்தாபித்த பெரியாழ்வாரைக் கௌரவிப்பதைக் காண ஆசைப்பட்டு கருடாரூடனாய் பிராட்டிமார்களோடே வந்து தோன்றினாற் போலே, நம் ஸ்வாமிகளும் ‘ஒன்றும் தேவும்’ பாசுரத்தின் அர்த்த விசேஷத்தைச் சொல்லி எல்லோரும் தேவதாந்தர ஸம்பந்தத்தை அவசியம் அறுத்துக்கொள்ள வேண்டும் என்று வீராவேசத்தோடே முழங்கினபோது அவனால் அங்கு வராமல் எப்படியிருக்க முடியும் ? வந்து, நம்முள் கலந்தான் ! அஹோ பாக்யம் ! அஹோ பாக்யம் ! !

**அமுதமாயிற்று** - ஜல வெள்ளத்தின் நடுவே எம்பெருமான் அநாயாஸமாக, **ஆலமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்** கிடந்தாற்போலே, இத்தனை வித்வான்கள் பெரியோர்கள் நடுவே, நம் ‘குட்டி’ ஸ்வாமிகள் நிகழ்த்திய உபந்யாஸங்கள் கொள்ள மாளா இன்பவெள்ளமான அமுதமாயிற்று ! இப்படிப்பட்ட அமுதத்தைப் பருக எல்லாரையும் முந்திக் கொண்டு முதலிலே நிற்பவன் ஆஶ்ரித வத்ஸலனான எம்பெருமானைத்தவிர வேறு யாராக இருக்க முடியும் ?

**‘ஒரு கதியின் சுவை தந்திட்டு ஒழிவிலன் என்னோடுடனே’** என்று ஆழ்வார் சொன்னாப்போலே, எங்களுக்கும் நம்முடைய ஸ்வாமி பரம க்ருபையோடே இவ்விழாவை ஒரு வ்யாஜமாகக் கொண்டு பல சுவைகள் தந்தருளியதுக்கு, எங்களுடைய ப்ரணாமங்களைச் சொல்லு வதைத்தவிர வேறொன்றும் அடியோங்களுக்குத் தெரியவில்லை.

ஸ்வாமி திருமாளிகைக்கு வந்து, ‘அஹம் ஸர்வம் கரிஷ்யாமி’ என்று கைங்கர்யங்கள் மேன்மேலென செய்து ஸத்தைப் பெற வேண்டியிருக்க, அடியேன், தங்களையும், திருமாளிகையிலுள்ளவர்களையும் (குறிப்பாக, ஸ்ரீராம் ஸ்வாமியையும் அவருடைய தேவிகளையும்) வெகுவாக ச்ரமப்படுத்தி கார்யங் கொண்டதற்கு மிகவும் வருந்துகிறேன். மன்னிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

அடியேன் ராமாநுஜ தாஸன்
ஸம்பத்

★★★


**With Respectful Obeisance to Acharya Elayavilli Swamy**

**Venkatanathan. N (Prabu)**

**ANIRUDH PHOTO & VIDEO GRAPHICS**

Professional Photo & Video Graphers

**STILLS VIDEO COVERAGE DIGITAL**

2/122, T.P. Koil Street, Near Sri Parthasarathi Swami Temple
Next to Gangaikondan Mandapam, Triplicane, Chennai - 600 005.
Ph : 044 - 2844 0670 Cell : 9003232448
E-mail : venkatanathans@gmail.com

# ஆழ்வார் திருநகரி இளையவில்லி ஶடகோபாசார்யர் ஸ்வாமி ஶதமாநோத்ஸவ ஸமிதியின் நன்றி நவிலல்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீஸூக்திரத்நாகரம் இளையவில்லி ஸ்வாமியின் ஶதமாந உத்ஸவத்தை மிகவிமரிசையாக நடத்திக்கொடுத்த கீழ்க்கண்ட மஹான்களுக்கும், எழுந்தருளிச் சிறப்பித்த வித்வான்களுக்கும் இம்மலரைச் சீரியதாக வெளியிட உதவிய கீழ்க்காணும் பெருமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஸமிதி க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறது.

1. ஸ்ரீ உ.வே. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
2. ஸ்ரீ உ.வே. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருக்குறுங்குடி பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
3. ஸ்ரீ உ.வே. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஆழ்வார்திருநகரி எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி
4. ஸ்ரீ உ.வே. திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி
5. ஆழ்வார் திருநகரி ஆசார்யபுருஷர்கள் – முக்கியமாக பல்லக்கைத் தந்துதவிய ஸ்ரீ உ.வே. திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாமி
6. இம்மலருக்கு வ்யாஸங்களை எழுதியளித்த வித்வான்கள்
7. ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோயில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் அர்ச்சகர்கள்
8. இம்மலருக்கு விளம்பரங்களை அளித்துதவிய நிறுவனங்கள்
9. கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறப்பித்தவர்கள்
10. ஸ்ரீ உ.வே. லக்ஷ்மி நரஸிம்மன் ஸ்வாமி (Retd., Commissioner of Incometax, Bangaluru)
11. விசேஷமாக தேஹத்தாலும், த்ரவ்யத்தாலும் உதவி புரிந்த திருமாளிகை சிஷ்யர்கள், பங்களூர் நகர அன்பர்கள், திருநாராயணபுரத்தில் இருந்து எழுந்தருளி விசேஷமாக ததீயாராதனை நடத்திக்கொடுத்த ஸ்ரீ உ.வே. செல்வநாராயணன் ஸ்வாமி (Principal, Sanskrit College, Melkote) மற்றும் அவருடன் எழுந்தருளிய ஸ்ரீவைஷ்ணவர்கள்
12. காக்குமானி ஆதிகேசவுலு செட்டி சாரிடீஸ், சென்னை.
13. ஸ்வாமிகள் தங்குவதற்கு பெரிய நம்பி திருமாளிகையைக் கொடுத்தருளிய திரு. மோகன் அவர்கள்.
14. தங்கள் க்ருஹத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்குவதற்குக் கொடுத்து உதவிய ஸ்ரீமான் தெய்வச்சிலை (ஆழ்வார் திருநகரி)
15. அச்சுத்தாள் திருத்தம் தொடக்கமாக பல்வேறு வண்ணப்படங்களைத்தக்க இடங்களில் சேர்த்தது வரை பலவிதமாக உதவி, இம்மலரைப் பதிப்பித்துதவிய ஸ்ரீ உ.வே. திருவல்லிக்கேணி ஸுரேஷ் என்கிற வீரராகவாசார்ய ஸ்வாமி
16. இம்மலரை நேர்த்தியாக அச்சிட்டளித்த ஸ்ரீ உ.வே. ராஜன் ஸ்வாமி (R.N.R. Printers)

★★★